REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜுலை 5 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன் 92
வரு. 92 இல.159 | Friday 05, July, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## அத்தியாவசிய பொருட்களை விடுவிக்க துரித நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



சுங்கத் திணைக்கள தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில், துறைமுகத்தில் தாமதமாகியுள்ள அத்தியாவசியப் பொருட்களை விரைவாக விடுவிப்பதற்கு 06




### சர்வதேச இறையாண்மை பத்திரதாரர் குழுவுடனான
# கடன் மறுசீரமைப்பு விதிமுறைகள் குறித்த கலந்துரையாடல் வெற்றி
### கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கும் முயற்சியில் முன்னேற்றம்



லோரன்ஸ் செல்வநாயகம்

பலமான பொருளாதாரத்தில் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் சர்வதேச இறையாண்மைப் பத்திர உரிமையாளர்கள் குழு கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடன் ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான மற்றுமொரு நடவடிக்கை பூரணமாக்கப்பட்டு சர்வதேச இறையாண்மைப் பத்திர உரிமையாளர்கள் குழுவுடன் கடன் மறு சீரமைப்பு தொடர்பில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வர முடிந்துள்ளதாகவும் இராஜாங்க 06

## உலக வங்கி டேவிட் சிஸ்லேன் ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உலக வங்கியில் இலங்கை, நேபாளம், மாலைத்தீவுக்கான புதிதாக நியமனம் பெற்றுள்ள பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் (David Sislen) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. 06

### தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம் சரியானதே
# ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் மட்டுமே!
### எனது நிலைப்பாடும் அதுவே என்கிறார் ஜனாதிபதி ரணில்



**என்னிடமோ சட்டத்தரணிகளிடமோ கலந்தாலோசிக்காமலேயே சமிந்ர லெனவ உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவிப்பு**

ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதோடு 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருப்பது சரியானதென்றும் அதுவே தமது உறுதியான நிலைப்பாடு என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதை தடுக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி சமிந்ர தயான் லெனவ என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மேற்படி மனுவை தாக்கல் செய்வதன் மூலம், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 12(1), 82(6), 3, 4, 118 மற்றும் 125 ஆகிய பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 126 இன் படி அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் 3ஆம் பிரிவின் ஊடாகத் திருத்தப்பட்ட பிரிவு 30(2)ஐ வியாக்கியானம் செய்யக்கூடாது என குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 06



## ஆடிவேல் பெருவிழாவுக்கு மஹிந்தவுக்கு அழைப்பு
### ராஜேந்திர செட்டியார் கையளிப்பு

நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் வெள்ளி ரத மகோற்சவ 150வது ஆடிவேல் பெருவிழாவை முன்னிட்டு விஷேட அழைப்பிதழை ஆலய பிரதான அறங்காவலர் ராஜேந்திர செட்டியார், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கையளித்தார். இந்நிகழ்வில் இராமச்சந்திர பாபு சர்மா குருக்களும் கலந்து கொண்டார்.

## யாழில் நேற்று சம்பந்தனின் பூதவுடலுக்கு மக்கள் அஞ்சலி



மறைந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக நேற்று வியாழக்கிழமை (04) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திற்கு விமானம் மூலம் 06

### கெஹெலிய ரம்புக்வெல்லவின்
# குடும்ப உறுப்பினர்களது 16 நிலையான வங்கிக் கணக்குகளுக்கு தடை விதிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் குடும்ப உறுப்பினர்களது நிலையான வைப்புக் கணக்கு மற்றும் ஆயுட் காப்புறுதி உறுதிப் பத்திரம் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த தடையை நீடித்து அடுத்த கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மனைவி, மகள் இருவர் மற்றும் ஒரு மகளின் கணவர் ஆகியோரின் 16 நிலையான வைப்புக் கணக்கு மற்றும் 3 ஆயுட்கால 06

# புதிய திட்டங்களுடன் ஆரம்பமான "யுக்திய"
### மேலும் தீவிரப்படுத்த பொலிஸ் ஏற்பாடு



யுக்திய நடவடிக்கையானது நேற்று வியாழக்கிழமை (04) முதல் புதிய திட்டங்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யுக்திய நடவடிக்கைக்கு இலங்கை இராணுவத்தின் ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக 06

# ஹிருணிகாவின் பிணைக்கு சட்ட மாஅதிபர் ஆட்சேபனை
### 11ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைப்பு



மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ஹிருணிகா பிரேமச்சந்திரவை பிணையில் விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவுள்ளதாக சட்ட மாஅதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவித்தார்.

இந்த பிணை கோரிக்கை கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று (04) பரிசீலிக்கப்பட்டது. இந்த கோரிக்கை தொடர்பில் 06

# தேர்தலை பிற்போட வேண்டும் - CV கருத்து



தேர்தலை பிற்போட வேண்டும் என்பதே எனது கருத்து என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். நேற்று (04) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் அமைப்பது நாட்டுக்கு நல்லது. ஆனால் தமிழ் கட்சிகள் தேசிய அரசாங்கத்தில் இணைவது பொருத்தமானதல்ல. தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கக்கூடிய தேசிய அரசாங்கத்தை தமிழ் கட்சிகள் ஒன்றிணைக்க 06

# பஸ் - லொறி விபத்தில் ஒருவர் பலி; 25 பேர் காயம்
### சிலாபம் பகுதியில் கோரச் சம்பவம்



சிலாபம் – கொழும்பு பிரதான வீதியில் மாதம்பே, இரட்டைக்குளம் பகுதியில் பஸ் ஒன்றும் சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்றும் மோதி விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். விபத்தில் 25 பேர் காயமடைந்து சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாதம்பை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



03
## சம்பந்தன் ஆற்றிய தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது
70ஆண்டு உறவை நினைவுகூர்ந்த சங்கரி



03
## களுபோவில ஆஸ்பத்திரியில் 06 மாதங்களாக சடலங்கள்
அடையாளங்கண்டு கையளிக்க அதிகாரி உத்தரவு

# நகர்வலம்



## பாணந்துறையிலிருந்து கிரிந்தை வரையான
# மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய அரசு ரூ. 1000 மில்லியன் நிதியை ஒதுக்கும்

(வெலிகம தினகரன் நிருபர்)





பாணந்துறையிலிந்து கிரிந்தை வரையில் அமைந்துள்ள மீன்பிடித் துறை முகங்களை அபிவிருத்தி செய்ய 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அண்மையில் தென்பிராந்திய பகுதிகளிலுள்ள துறை முகங்களை பார்வையிட சென்ற போதே அவர் ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

மீன்பிடித் துறைமுகங்களில் காணப்படும் குறை பாடுகளை கண்டறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார். இது விடயமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாகவும், அமைச்சரவைக்கும் பத்திரங்களை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சரவைக்கு பத்திரங்களை சமர்ப்பிக்க தேவையான ஆவணங்களை தயார்ப்படுத்துமாறும் மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் நிஷாந்த விக்ரமசிங்கவுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

துறைமுகங்களில் காணப்படும் குறைபாடுகள் சம்பந்தமாக துறைமுகங்கள் அபிவிருத்தி சங்கம் மற்றும் பிரதேச துறைமுகங்கள் சபைகள் மூலமாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயிலின் 150வது வருட ஆடிவேல் ரத பவனி



நாட்டுக்கோட்டை நகரத்தார் கொழும்பு, பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் 150ஆவது வருட ஆடிவேல் வெள்ளி ரத பவனி இம்மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் 19ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு செட்டியார் தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் மஹேஸ்வர பூஜை நடைபெறும். 20ஆம் திகதி காலை 7.00 மணிக்கு செட்டியார்தெரு கோயிலிலிருந்து வெள்ளி ரத பவனி ஆரம்பித்து இரவு 8.00 மணியளவில் பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயிலை சென்றடையும்.

21ஆம் திகதி முற்பகல் 10.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை விசேட பூஜைகளும் அதனைத் தொடர்ந்து முருகப்பெருமான் கதிர்காமத்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் காட்சியருள்வார். 22ஆம் திகதி பக்தர்களின் தரிசனத்துக்காக முருகப்பெருமான் பம்பலப்பிட்டி கோயிலில் எழுந்தருள்வார். 23ஆம் திகதி காலை 8.00 மணிக்கு ரத பவனி பம்பலப்பிட்டி கோயிலிலிருந்து புறப்பட்டுஇரவு 12.00 மணியளவில் செட்டியார் தெரு கோயிலை சென்றடைந்து திருவருட் காட்சியளித்தல் நடைபெறுமென கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# யாசிர் பாக்கிர் மாக்கார் காலமானார்



முன்னாள் சபாநாயகர் எம்.ஏ. பாக்கிர் மாக்காரின் மகனும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் சகோதரருமான யாசிர் பாக்கிர் மாக்கார் நேற்று (04) காலமானார்.

ஜனாஸா நேற்று அஸர் தொழுகையுடன் பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஜனாஸாவில் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

# கடற்கரையை சுத்தம் செய்யும் நிகழ்வில் ருவன் விஜேவர்தன





ருஸைக் பாரூக்

எகிப்து தூதரகம், ஜனாதிபதி செயலகம், கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம், Clean Ocean Force Lanka, பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவு மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து கடற்கரையை சுத்தம் செய்யும் நிகழ்ச்சியை கல்கிசை கடற்கரையில் நடத்தியது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான ருவான் விஜேவர்தன, இலங்கைக்கான எகிப்து தூதுவர் மகேட் மொஸ்லே, Clean Ocean Force Lanka தலைவர் ஜெரோம் பெர்னாண்டோ, SCAP நிறுவனத்தின் பணிப்பாளர்கள் துமிந்த ஆட்டிகல, அதிகாரம்கே இஷாரா, MEPA மாவட்டத் தலைவர் திநிதி குணேன மற்றும் தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் புத்தளம் விஜயம்

புத்தளம் தினகரன் நிருபர்



இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராலயத்தின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பஹீம் அல்அஸீஸ் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அண்மையில் புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்.

பெரிய பள்ளியின் வரலாறு மற்றும் கட்டடக்கலை தொடர்பான அம்சங்களை அவர் பார்வையிட்டதோடு பெரிய பள்ளியின் விஷேட நம்பிக்கையாளர் சபையுடன் கலந்துரையாடல் ஒன்றையும் அவர் மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் பாகிஸ்தான் அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் எண்ணிக்கையில் புத்தளம் மாணவர்களுக்கு விஷேட கவனம் செலுத்துமாறு விடுத்த வேண்டுகோளையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

மேலும் பாகிஸ்தான் இலங்கைக்கான தூதுவராலயத்தின் பெரிய பள்ளி மற்றும் புத்தளம் மக்களுடனான உறவு தொடர்ந்தும் இருக்கும் என்ற விடயத்தையும் அவர் வலியுறுத்தினார். அத்துடன் 1968 ம் ஆண்டு புத்தளம் நகரில் நிர்மாணிக்கப்பட்ட அல் குர்ஆன் நினைவு கோபுரத்தையும் அவர் பார்வையிட்டார்.

குறித்த நினைவு கோபுரம் 1968 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 04 ம் திகதி அப்போதைய சட்டம் மற்றும் பாராளுமன்ற விவகார முன்னாள் அமைச்சரான எஸ்.எம். ஸபர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதாகும்.

# அல் ஹுமைஸராவில் வழிகாட்டல் செயலமர்வு







பேருவளை, சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 2024ஆம் ஆண்டில் க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றவுள்ள 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு மற்றும் பாடசாலையில் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கை வழங்கும் நிகழ்வும் நேற்று (04) பாடசாலை எஸ். எம். ஜாபிர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் அதிபர் மொஹமட் இப்றாஹீம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுடன் அவர்களது பெற்றோர்களும் கலந்து சிறப்பித்ததோடு அதிபர், பிரதி அதிபர் பர்ஸான் ஆகியோர் மாணவர்கள், பெற்றோர்களுக்கான சில வழிகாட்டல்கள் தொடர்பிலும் இதன்போது உரையாற்றினர். இந்நிகழ்வில் பெற்றோருடன் மாணவர்கள் கலந்து கொண்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

# புத்தளத்தில் கரையொதுங்கும் கடலாமைகள் அதிகரிப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



புத்தளம் மாவட்டத்தில் ஆழ்கடலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கடலாமைகள் கரையொதுங்கி வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் நேற்று முன்தினம் (3) காலை சின்னப்பாட்டுக்கும் பூனைப்பிட்டிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இரண்டு பெரிய கடல் ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கியுள்ள இரண்டு கடலாமைகளும் சுமார் 3 அடி நீளமும் 25 தொடக்கம் 50 கிலோ கிராம் எடை கொண்டதாகும் என மீனவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த கடலாமைகள் இரண்டும் ஒலிவ் (Olive Redly) வகையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. இதே போன்று கடந்த வாரமும் உடப்பு முகத்துவாரம் பகுதியிலும் பெரிய கடலாமையொன்று இறந்த நிலையில் கரையொதுங்கி இருந்தது.

கடலாமைகள் கரையொதுங்கியுள்ளமை தொடர்பாக வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை காட்டுப் பிரதேசத்திற்கு தேன் பறிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக ஹம்பாந்தோட்டை பொலிஸார் (04) தெரிவித்தனர்.

இவ்வாறு ஹம்பாந்தோட்டை சிப்பிக்குளம் பிரதேசத்தில் வசித்து வந்த மூன்று குழந்தைகளின் தந்தையான 39 வயது மொஹமட் பைஸர் என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். தனது தொழிலுக்காக காட்டுக்கு சென்ற நபர் ஒருநாள் கழித்தும் வீடு திரும்பாததினால் பிரதேசவாசிகள் காட்டுக்குசென்று தேடுதலினை மேற்கொண்டபோது, காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த நிலையில் நபர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். இவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் தாக்குதலுக்குள்ளாகி பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளது.

# தமிழறிஞர் துரைசிங்கத்தின் நினைவுகூரல் நூல் வெளியீட்டு விழா




கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தமிழறிஞர் த. துரைசிங்கத்தின் நினைவுகூரல் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை (6) முற்பகல் 10.00 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு வானதி காண்டீபன் தலைமை தாங்கி, தலைமையுரையை நிகழ்த்தவுள்ளார்.

விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், முன்னிலை விருந்தினராக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும் இலக்கிய புரவலருமான ஹாசிம் உமர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அறிமுகவுரையை வி.ரி. இளங்கோவனும், நினைவுரையை கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

இதன்போது கருத்துரைகளை தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், NIE உதவி விரிவுரையாளர் கீதா கணேஷ், மூத்த பத்திரிகையாளர் வீ. தனபாலசிங்கம், எழுத்தாளர் மேமன் கவி, இலக்கிய சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கல் நடைபெற்று, நன்றியுரையுடன் விழா நிறைவுறுமென, இலங்கை, பாரிஸ் முன்னோடிகள் இலக்கிய வட்டத்தினர் தெரிவித்தனர்.

## அநுராதபுரம் மாவட்டத்தில்
# போதைப்பொருளின் தீமைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு

(திறப்பனை தினகரன் அ.புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்)



அநுராதபுரம் மாவட்டத்தின் துறைசார் அலுவலர்கள், பாடசாலை மாணவ, மாணவியர் மற்றும் பயணிகளுக்கு போதைப் பொருளின் தீமைகள் மற்றும் போதைப் பொருளின் தீமைகளை எவ்வாறு அகற்றுவது குறித்து தேசிய அபாயகர மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் விளக்கமளிக்கும் வேலைத்திட்டமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் கடந்த ஜூன் 26 கொண்டாடப்பட்டது. இவ் ஆண்டின் சர்வதேச தினத்தின் தொனிப்பொருளில் போதைப்பொருள் பிரச்சினையை கட்டுப்படுத்துவதில் தடுப்பின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பல அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு வட மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் மாகாண பிரதம செயலாளர் வருண சமரதிவாகர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது போதைப் பொருளைத் தடுக்கும் பணியில் அரசு அதிகாரிகள் மிக விரைவாகத் தலையிட வேண்டும் எனவும் இளைஞர் சமூகம் இந்த போதைப் பொருளுக்கு வேகமாக பலியாகி வருவது வருத்தமளிப்பதாக தெரிவிக்கப்பட்டதோடு இதை எதிர்த்துப் போராட தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனையின் யதார்த்தமும் போதைப்பொருள் தவிர்ப்பில் பொதுச்சேவையின் பொறுப்பும் என்ற தலைப்பில் அரச அதிகாரிகளுக்கான பிரதான உரையை தேசிய அபாயகரமான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் மாத்தளை மற்றும் பதுளை மாவட்ட பொறுப்பதிகாரி தினேஷ் சதுரங்க நிகழ்த்தினார்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் பிரதான நிகழ்வு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம் பெற்றதுடன், வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளை இலக்கு வைத்து போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பலவும் இடம் பெற்றன.

# பொரளை அஹதியாவின் முஹர்ரம் புதுவருட நிகழ்வு

ருஸைக் பாரூக்

பொரளை அஹதியா பாடசாலையின் ஏற்பாட்டில் 38ஆவது வருடாந்த இஸ்லாமிய புத்தாண்டு முஹர்ரம் வைபவம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு, தெமட்டகொட சோனக இஸ்லாமிய கலாசார நிலைய பாஷா விழா மண்டபத்தில் பாடசாலை அதிபர் ஷிப்லி ஹாசிம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், அஹதியா பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர்களும் விழாவில் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை

## ஜனாதிபதிக்கும் அவசியமில்லை அமைச்சர் பிரசன்ன

ஜனாதிபதி தேர்தலையோ அல்லது வேறு எந்த தேர்தலையோ ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலை சந்திக்க முதுகெலும்பில்லாத எதிர்க்கட்சிகள் தேர்தலை ஒத்திவைப்பது பற்றி பேசினாலும் அரசாங்கம் அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தும் என அமைச்சர் கூறினார்.

கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்று (4) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே பாரிஸ் மாநாட்டில் நாட்டின் கடனை மறுசீரமைக்க தீர்மானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் நாடும் மக்களும் எதிர்பார்க்கும் பொருளாதார, அரசியல், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை தற்போதைய ஜனாதிபதியால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.



எனவே, அவரை மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக நியமிப்பதன் மூலம் அடுத்த ஐந்து வருடங்களுக்குள் உலகின் பலமான பொருளாதாரம் கொண்ட நாடாக இலங்கையை உருவாக்க முடியும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு உங்கள் நாடு எப்படி இருந்தது என்று யோசித்துப் பாருங்கள். எரிபொருள் இல்லை, மருந்து இல்லை, எரிவாயு இல்லை, சிறு குழந்தைக்கு பால் பவுடர் இல்லை, அத்தியாவசிய சேவைகள் நிறுத்தப்பட்டன. கட்டுமானத் தொழில்கள் அனைத்தும் சரிவடைந்தன. முழு நாடும் விரக்தியில் இருந்தது. ஜனாதிபதி சிக்கலில் இருந்து நாட்டைப் பொறுப்பேற்கும் போது ஒரு பக்கம் கடுமையான பொருளாதார நெருக்கடி, மறு பக்கம் பாரிய மக்கள் எதிர்ப்புமாக இருந்தது என்றார்.

அப்போது மொட்டுக் கட்சியாகிய நாம் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். ரணில் விக்கிரமசிங்கவுடன் எங்களுக்கு நிறைய அரசியல் முரண்பாடுகள் இருந்தன. ஆனால் நாட்டுக்காக அதனை மறந்துவிட்டோம். இரண்டு வருடங்கள் கழித்து இன்று நாடு எங்கே இருக்கிறது என்று பார்க்கும் போது அன்று நாம் எடுத்த முடிவு 100 சதவீதம் சரியானது என்று மகிழ்ச்சி அடைகிறோம்.

தற்போது ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக ஒரு கதை வெளியாகியுள்ளது. ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கோ அல்லது எமக்கோ விருப்பமோ தேவையோ இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். அது நிரந்தரமானது.

மொட்டுக் கட்சி ஒரு ஜனரஞ்சகக் கட்சி. நாட்டை ஒருங்கிணைத்த ஜனரஞ்சகத் தலைவர் மகிந்த ராஜபக்ச. அவர் எமது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை சரியான நேரத்தில் நாட்டுக்கு தெரிவிப்பார். எங்களிடம் ஒரு வெற்றி வேட்பாளர் இருக்கிறார். நாங்கள் வெற்றிப் பக்கம் இருக்கிறோம். அதனால் தான், சந்திகளிலும், வீதியோரங்களிலும் 'நான்தான் மொட்டின் வேட்பாளர்' என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதைக் கணக்கெடுக்காதீர்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.


வருமான வரி
விஷயம்
சில தப்பபிப்பிராயங்கள்

# தினகரன் 92 வருடங்களுக்கு முன்

## தினகரன் இன்று 05 ஜுலை 1932

## வருமான வரி விஷயம்

### சில தப்பபிப்பிராயங்கள்

வருமான வரியைப் பற்றிப் பல தப்பபிப்பிராயங்கள் பொதுஜனங்களிடம் இருந்து வருகின்றன. அநேகர் தங்களுடைய வருமானத்தில் 10ல் ஒரு பங்கை வரியாகச் செலுத்த வேண்டுமென்று கருகின்றனர். ஆனால் வருடம் 50,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் மாத்திரமே வருமானத்தில் 10ல் ஒரு பங்கை வரியாகச் செலுத்த வேண்டும்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# கடன் மறுசீரமைப்பின் வெற்றி வலுசக்தி துறைக்கு மேலும் வலு

## அத்துறையை பலப்படுத்தும் என்கிறார் இந்திக்க அனுருத்த

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றியினால் கடந்த நெருக்கடியின் போது முடங்கிக் கிடந்த வலுசக்தித் துறை தொடர்பான திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும்



எனத் தெரிவிக்கும் மின் சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, மின்சார நெருக்கடியைத் தீர்க்க இது பெரும் உதவியாக அமையும் எனவும் தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க் கட்சியில் உள்ள சில தரப்பினர் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர்

06

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவர்களுக்கு விசேட அறிவிப்பு

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டுக்கு பல்கலைக்கழக மாணவர்களை இணைத்துக்கொள்வது தொடர்பாக விசேட அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிப்புக்கு அமைவாக, 2023ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களை 2023/2024 கல்வியாண்டுக்கான தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தற்போது கோரியுள்ளது.

இதற்கமைவாக, கடந்த வருட உயர்தரப்

06

# 1,700 ரூபா சம்பள அதிகரிப்பையும் எமது மக்களுக்கு பெற்றுக்கொடுப்போம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

2020ஆம் ஆண்டு கூறியது போல் 1,000 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுத்தோம், அதேபோன்று தற்பொழுது 1,700 ரூபா அதிகரிப்பையும் எமது மக்களுக்கு பெற்றுக்கொடுப்போம் என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்கும் வகையில் தொழில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர் நீதிமன்றம் இடைகால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது. இதுதொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட நிறுவனங்களினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளின் போதே இந்த உத்தரவு

06

1700 ரூபா சம்பள விவகாரம்;

# வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர் நீதிமன்றம் தடையுத்தரவு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ரூ. 1,700 ஆக அதிகரிப்பது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த தடையுத்தரவை நேற்று வியாழக்கிழமை (04) உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும், மே 21, 2024 திகதியிடப்பட்ட, 2385/14 எனும் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

குறித்த அதி விசேட அறிவித்தலுக்கமைய, தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாட் சம்பளம் ரூ. 1,350 ஆகவும் உற்பத்தித்திறன் அடிப்படையில் நாளாந்த விசேட கொடுப்பனவு ரூ. 350 ஆகவும் என, மொத்த நாளாந்த சம்பளம் ரூ. 1,700 அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதில் நாளாந்த வரவு செலவு சலுகைக் கொடுப்பனவும் உள்ளடக்கப்படுவதோடு, ஊ.சே.நி. உள்ளிட்ட கொடுப்பனவுகளை செலுத்துவதில் இந்த தொகை (ரூ. 1,350) கருத்தில் எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் வெள்ளிரத மகோற்சவ 150வது ஆடிவேல் பெருவிழாவை முன்னிட்டு விஷேட அழைப்பிதழை ஆலய பிரதான அறங்காவலர் இராஜேந்திரன் செட்டியார் இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவர் தேவி குஸ்டீனா டொரிப்ங் அவர்களுக்கு கையளித்த போது...

# போலி கடவுச் சீட்டுடன் அகப்பட்ட இலங்கையர்

## சென்னையில் கைதாகி விசாரணை

போலியான ஆவணங்களை சமர்ப்பித்து, இந்தியாவின் கடவுச் சீட்டை பெற்ற இலங்கையர் ஒருவர் நேற்று சென்னையில் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் இலங்கைக்கு வருவதற்காகச் சென்னை விமான நிலையத்தில் கடவுச் சீட்டை காண்பித்த போது, கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அவர் தமது குடும்பத்தாருடன் இலங்கையிலிருந்து அகதியாக தமிழகம் சென்று வசித்து வந்த நிலையில், 2019ஆம் ஆண்டு போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்தியக் கடவுச் சீட்டை பெற்றுக் கொண்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சம்பந்தன் ஆற்றிய தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது

## 70ஆண்டு உறவை நினைவுகூர்ந்த சங்கரி

சம்பந்தன் ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. அதை யாரும் மறுக்க முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு வழங்கிய இரங்கல் செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்து அண்மையில் காலமான சம்பந்தன் பற்றி நான் கூறினால் அனேகமானவர்கள் ஆச்சரியத்துடன் பார்ப்பீர்கள்.

எனக்கும் சம்பந்தனுக்கும் கிட்டத்தட்ட 70 ஆண்டுகள் உறவு இருந்தது. ஒன்றாக நாங்கள் வேலை செய்தோம். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில் அவரும் இணைந்து கொண்டார்.

தந்தை செல்வாவிற்கு பெரிதும் மதிப்பு கொடுத்து வந்தவர். தந்தை செல்வாவின் இலட்சியத்தில்தான் போராடுவேன் என்று கூறிவந்தார். இதை யாரும் மறுக்க முடியாது. நானும் அதை உறுதிப்படுத்துகிறேன்.

இந்த இனத்தினுடைய நன்மை கருதி திருவாளர் சம்பந்தன் பல விடயங்களை செய்தார். எனக்கும் அவருக்கும் இடையில் 2004 ஆம் ஆண்டு தராகி உள்ளிட்டோரின் முயற்சிக்கு இவரும் முழுமையாக ஒத்துழைத்தார்.

என்னைப் பொறுத்த வகையில் சம்பந்தன் நல்ல

06

# களுபோவில ஆஸ்பத்திரியில் 06 மாதங்களாக சடலங்கள்

## அடையாளங்கண்டு கையளிக்க அதிகாரி உத்தரவு

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் 6 மாதங்களுக்கும் மேலாக இனந்தெரியாத சடலங்கள் பல வைக்கப்பட்டுள்ளதால், நாளாந்தம் இறப்போரின் சடலங்களை வைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அந்த வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி பாரிந்த கொடுகொட தெரிவித்துள்ளார்.

இந்த சடலங்களில் பெரும்பாலானவை விபத்துக்கள் காரணமாக பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டதாகவும், உரிமையாளர்கள் இதுவரை முன்வராததால், விசாரணைகளை மேற்கொண்டு அவற்றை அகற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ள



தாகவும் மரண விசாரணை அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொஹுவல, மொரட்டுமுல்ல, கிருலப்பனை, மொரட்டுவ, இங்கிரிய, மஹரகம, மருதானை, பிலியந்தலை, வாதுவ, எகொட

06

# அஸ்வெசும இரண்டாம் கட்ட கொடுப்பனவு 4,75,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன

## இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் ஒரு வாரத்திற்குள் விண்ணப்பிக்க வாய்ப்பு / நிதியமைச்சு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அஸ்வெசும இரண்டாம் கட்ட கொடுப்பனவுகளுக்காக இதுவரை 4 இலட்சத்து 75 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அதில் 4 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தகவல்கள் தரவு தொகுதியில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது



இரண்டாம் கட்ட நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நலன்புரி கொடுப்பனவுகள் சபை அதிகாரிகளுடனான விசேட பேச்சுவார்த்தையொன்று நேற்றைய தினம் நிதியமைச்சில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் தலைமையில் நடைபெற்றுள்ளது. அதன் போதே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும இரண்டாம்

06

# இலங்கை - இந்திய கப்பல் சேவை நிச்சயம் இடம்பெறும்

## ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளதாக நிமல் தகவல்

எதிர்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மீண்டும் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் திட்டத்தை இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உறுதிப்படுத்தியுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிதிச் சுமைக்கு உள்ளான மத்தள சர்



வதேச விமான நிலையத்தின் நிர்வாகம் அடுத்த சில வாரங்களில் இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டு முயற்சியிடம் விரைவில் ஒப்படைக்கப்படும் என இலங்கை அறிவித்துள்ளது.

இந்தியாவின் 69 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய விமான சேவை நிறுவனமான சிறிலங்கன் எயார்லைன்ஸ் விற்பனை

06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

*உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து, உணவு அருந்துகின்றவர்களின் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை.*

## மக்களை இம்சைக்குள்ளாக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகள்

நாட்டில் கடந்த சில தினங்களாக பல துறைகளைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் வெவ்வேறு விதமான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சுகாதாரத் துறை ஊழியர்கள், நிறைவேற்று உத்தியோகத்தர்கள் என்றபடி அரசாங்கத் துறைகளைச் சேர்ந்தவர்களே இத்தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவர்களாக உள்ளனர்.

சம்பள உயர்வு, சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு என்றபடி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்த படி இவர்கள் இத்தொழிற்சங்க நடவடிககைகளை மேற்கொள்கின்றனர். சட்டப்படி இயக்கம், சுகவீன விடுமுறை, மறியல் போராட்டம், வேலைத் நிறுத்தம் என்றபடி பல வகையான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தொழிற்சங்க நடவடிக்கைகளால் நாட்டுக்கோ, மக்களுக்கோ நன்மைகள் கிடைக்கப்பெறுவதாக இல்லை. ஆனால் சேவைகள் பெற்றுக்கொள்ள முடியாத நெருக்கடி நிலைகளுக்கு தொழிற்சங்க வேளைகளில் மக்கள் உள்ளாகின்றனர். இது பெரிதும் கவலைக்குரிய நிலையென சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர். சில அரசாங்க துறை ஊழியர்கள் முன்னெடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கைக்கும் பொதுமக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது. ஆனால் இத்தொழிற்சங்க நடவடிக்கைகளால் பொதுமக்கள் தான் பணயக் கைதிகளாக்கப்படுகின்றனர். இது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல.

அதேநேரம் ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். அத்தோடு மாணவர்களுக்கு தவறான வழிகாட்டல்கள் இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் ஊடாக வழங்கப்படும். இதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. கடந்த வாரம் சுகவீன தொழிற்சங்க நடவடிக்கைகயை முன்னெடுத்த ஆசிரியர்கள், இவ்வாரம் கறுப்பு கொடி போராட்டம், பாடசாலை விட்ட பின்னர் ஆர்ப்பாட்டம் என்றபடி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். இந்நடவடிக்கைகளை பெரும்பாலான பெற்றோர் நியாயமாக நோக்குவதாக இல்லை.

மேலும் தற்போது முன்னெடுக்கப்படும் இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் அடித்தளமாக இருப்பது இந்நாட்டை எதிர்நோக்கியுள்ள ஜனாதிபதித் தேர்தலேயாகும். அத்தேர்தலைப் பின்புலமாகக் கொண்டு தங்களது எதிர்பார்ப்புக்களை அடைந்து கொள்ளும் நோக்கில் இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் அற்ப அரசியல் இலாபம் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களும் இருக்கவே செய்கின்றன.

பொதுவாக ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் போன்ற தேர்தல்களை நாடு எதிர்நோக்கி இருக்கும் சூழலில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேற்றப்படுகிறது. இது ஒரு பாரம்பரியமாக அண்மைக்காலம் முதல் வளர்ச்சி பெற்றுள்ளது. அந்தப் பின்புலத்தில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் இடம்பெறவே செய்கின்றன.

ஆனால் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதே ஆரோக்கியமானது.

ஆனாலும் தற்போதைய சூழலில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதன் ஊடாக அரசாங்கம் நெருக்கடிக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகலாம். அதன் மூலம் அற்ப அரசியல் இலாபம் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து அரசாங்கத்தையும் மக்களையும் நெருக்கடிக்கு உள்ளாக்கக்கூடிய காலசூழல் இதுவல்ல.

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று தற்போது மறுமலர்ச்சி பாதையில் நம்பிக்கையுடன் பிரவேசித்துள்ளது. உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பொருளாதார மேம்பாட்டுக்கான நம்பிக்கை அளிக்கும் பிரதிபலிப்புக்கள் நாட்டுக்குக் கிடைக்கப்பெற்ற வண்ணமுள்ளன. நாட்டை நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கான நல்ல வாய்ப்பாக அவை விளங்குகிறது.

இவ்வாறான சூழலில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டங்களைப் பாதிக்க அவை வழிவகுக்கும். குறிப்பாக இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்கும் தரப்புகளுக்கு பிழையானதும் தவறானதுமான செய்தியை வழங்க முடியும்.

அவை பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் முன்னேற்றங்களில் தாக்கம் செலுத்தக்கூடியதாக இருக்கலாம். அதனால் தற்போதைய சூழலில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகள் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மை பயப்பதாக அமையாது.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவது ஒவ்வொரு அரசாங்க ஊழியரினதும் பொறுப்பாக இருக்க வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும். தவறும் பட்சத்தில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாவதையும் மக்கள் பாதிக்கப்படுவதையும் தவிர்க்க முடியாததாகிவிடும். இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுவதே நாட்டின் மீது உண்மையான பற்று கொண்ட பிரஜைகளின் பணியாகும்.

editor.tkn@lakehouse.lk

# துறைமுகங்களின் வினைத்திறன் அதிகரிப்பினால் இந்தியாவில் துரிதமான பொருளாதாரப் புரட்சி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்தியாவின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுவதானால், இந்தியாவின் உள்கட்டமைப்பை மாற்றியமைத்தமை ஒரு முக்கிய அம்சமாக வெளிப்பட்டுள்ளது. விரிவான மோட்டார் வாகன வலைப்பின்னல்கள் முதல் நகர்ப்புற மெட்ரோ ரயில் பாதைகள் வரை, இந்தியா தற்போது குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டுள்ளது.




இருப்பினும், இந்த வெளிப்படையான முன்னேற்றங்களுக்கு மத்தியில், இந்தியாவின் பொருளாதார எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமான துறைகளில் அமைதியான புரட்சி நடந்து வருகிறது. அவ்வாறு உலக வர்த்தகத்தை நோக்கிய முக்கிய வாயிலாக இந்தியாவின் துறைமுகங்கள் அமைகின்றன.

துறைமுக கொள்ளளவு மற்றும் இயல்திறன் என்பன குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு உட்பட்டுள்ளன. உற்பத்தி மற்றும் ஏற்றுமதி எரிசக்தி மையமாக இந்தியாவை மாற்ற வேண்டுமென்ற மக்களின் நோக்கங்களுக்கு தற்போது அடித்தளமிடப்பட்டுள்ளது. இந்தியாவின் வர்த்தகத்தின் பெரும்பங்குக்கு கடல்சார் வர்த்தகமே காரணம் என்பதால், உலகத் தரம் வாய்ந்த துறைமுகங்களின் தேவை மிக முக்கியமாக அமைகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் பெரிய துறைமுகங்களில் இந்த முன்னேற்றம் இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரித்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது.



உதாரணமாக, மும்பையின் துறைமுகத்தின் குறுக்கே நவா ஷெவா அமைந்துள்ளது. 1989 இல் நிறுவப்பட்ட நவீன வசதி ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் (Jawaharlal Nehru Port Authority JNPA) இந்தியாவின் துறைமுக மாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

துறைமுக செயல்திறனில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். DP வேர்ல்ட் மற்றும் MEERSK போன்ற தனியார் நிறுவனங்கள் பெரிய துறைமுகங்களில் கொள்கலன் முனையங்களை நிர்வகிக்கின்றன. கூடுதலாக, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுங்க நடைமுறைகளை நவீனமயமாக்குதல் ஆகியவை ஏற்பியல் போக்குவரத்தை நெறிப்படுத்தி, உலக அரங்கில் இந்தியாவின் போட்டித் தன்மையை மேம்படுத்தியுள்ளன.

இந்த முன்னேற்றம் இருந்தபோதிலும், இந்தியாவின் கடல்சார் தொழில் உலக அளவில் பின்தங்கியுள்ளது. கலாத்தியா விரிகுடாவில் ஒரு கடல்சார் மையம் மற்றும் துறைமுக விரிவாக்கத்திற்கான இலட்சியத் திட்டங்கள் ஆகியவை புதிய பாதையை உருவாக்குவதில் இந்தியாவின் உறுதியை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இருப்பினும், பெரிய கப்பல்களுக்கு இடமளிக்கும் வகையில் ஆழமான துறைமுகங்களின் தேவை முதலான சவால்களும் எதிர்நோக்கப்படுகின்றன.

இருப்பினும், இந்தத் துறைமுக மறுசீரமைப்பின் முக்கியத்துவமானது வர்த்தக வசதிக்கு அப்பாற்பட்டது. உள்கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறை எளிமைப்படுத்தலில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் விரிவான பொருளாதார மாற்றத்துக்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

2047 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த நாடாக மாறுவதற்கான தனது பயணத்தை இந்தியா தொடர்ந்து மேற்கொண்டு வரும் நிலையில், துறைமுக சீர்திருத்தங்களின் வெற்றி நம்பிக்கைக்குரிய கலங்கரை விளக்கமாக அமைகிறது. இந்தியா தனது துறைமுகங்களை மறுசீரமைத்து அபிவிருத்தி அடையச் செய்தால், அது தனது பொருளாதாரத்தில் இது போன்ற மாற்றங்களுக்கான இயல்திறனை அடையாளம் கண்டு, அனைவருக்கும் வளர்ச்சி மற்றும் வளம் என்ற புதிய சகாப்தத்தை உருவாக்க அதிக வாய்ப்புள்ளது.

# இந்தியாவில் 123 பக்தர்கள் பலியான சம்பவம்; இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை!



இந்தியாவில் ஆன்மிக நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 100 இற்கும் அதிகமான பக்தர்கள் உயிரிழந்த சம்பவம் நடந்து 3 நாட்கள் ஆன நிலையில் தற்போது வரை ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை.

உத்தர பிரதேசத்தின் பிரபல சாமியாரான போலோ பாபா ஹத்ராஸ் நகரில் ஆன்மீக சொற்பொழிவை நடத்த திட்டமிட்டிருந்தார். இது தொடர்பாக அறிவிப்பும் வெளியானது. இவரது உரையை கேட்க ஆயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டனர். ஆனால், இவ்வளவு பக்தர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் முறையாக செய்யப்படவில்லை.

இப்படி இருக்கையில் நிகழ்ச்சி முடிந்து பக்தர்கள் வெளியேறியபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெரிசலில் சிக்கிய பலர் திடீரென மயங்கி விழுந்தனர். ஆனால், அவர்களை மீட்காத சக பக்தர்கள் அவர்கள் மீது ஏறி நிகழ்ச்சி நடந்த இடத்திலிருந்து வெளியே வந்தனர். இதனால் 123 பேர் உயிரிழந்துள்ளனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் பலரின் நிலை மோசமாக இருப்பதால் இந்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ. 2 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

இந்நிலையில் விபத்து நடந்து 3 நாட்கள் ஆன பின்னரும் கூட தற்போது வரை யாரும் கைது செய்யப்படவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மட்டுமல்லாது பொலிசார் பதிவு செய்துள்ள எஃப். ஐ.ஆரில் நிகழ்ச்சி நடத்திய போலோ பாபாவின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

# ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள கவிஞர் திருமதி சித்தி மஷூறா சுஹூறுத்தீன்

ஈழத்து இலக்கியப் பரப்பில் முஸ்லிம் முதனிலை கவிஞர்களில் ஒருவரான சித்தி மஷூறா சுஹூறுத்தீன் கல்விப் பணியில் 34 ஆண்டுகளை நிறைவு செய்து ஓய்வு பெற்றிருக்கிறார்.



சாரணியம், முதலுதவிப் படையணி, நாடகவாக்கம், சஞ்சிகைகளின் பிரதியீடு என இணைப்பாட செயற்பாடுகளினூடாக மாணவர்களை வழிப்படுத்துவதில் அயராதுழைத்த இவரது ஓய்வு கல்விப் புலத்தின் பெரும் இடைவெளியாகும்.

ஏ.ஆர்.அப்துல் மஜீட்_ யூ. சுபைதா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாக, 1964.05.05 இல் சம்மாந்துறையில் பிறந்த மஷூறா, சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவியாவார்.

1988 வரை மாவடிப்பள்ளி அல்அஷ்ரப் மகாவித்தியாலயத்தில் தொண்டராசிரியராகப் பணியாற்றினார். இப்பாடசாலையின் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி, உடற்பயிற்சி, நாடகம் என்பன இவராலேயே பயிற்றுவிக்கப்பட்டன.

சம்மாந்துறை அல்அமீர் வித்தியாலயத்தில் 1990 இல் நியமனம் பெற்று 13 வருடங்கள் பணியாற்றினார்.

'அலவாக்கரை' என்ற கையெழுத்து சஞ்சிகையை 1990 முதல் 2002 வரை வழிநடத்தி மாணவர்களின் படைப்பற்றலுக்கு களம் அமைத்தார். மாணவர்களால் ஆக்கப்பட்ட 'என் இனிய வாழை மரமே', 'ஆசிரியர்' ஆகிய இரு கவிதைத் தொகுதிகளை றோணியோவில் வெளியிட்டார்.

குருளைச் சாரணிய மாவட்ட தலைவியாக நியமிக்கப்பட்டு பிற பாடசாலைகளையும் சாரணியத்தில் ஊக்குவித்தார். 2005 2007 வரை அல் முனீர் வித்தியாலயத்தில் கடமை புரிந்தார். மாவட்ட முதலுதவி உதவி ஆணையாளராக நியமனம் பெற்று அத்துறைக்குப் பணியாற்றினார்.

2007 இல் மாவட்ட சாரணர் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார். கையெழுத்து சஞ்சிகைகளை பலவற்றை வெளியிட்டதுடன் 'நாற்று' சிறப்பு மலரின் ஆசிரியையாக வழிநடத்தினார். கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து 2008 முதல் 2024.05.04 வரை மாவடிப்பள்ளி அல் அஷ்ரப் வித்தியாலத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் சிறந்த அடைவுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன் . கல்முனை வலயத்தில் சுற்றாடல் முன்னோடி அமைப்பில் தங்கப்பதக்கம் பெற்ற முதல் பாடசாலையாகவும் சுற்றாடல் அமைச்சின் தேசிய பசுமை விருதை பெற்ற முதல் பாடசாலையும் இதனைப் பதிவு செய்தார்.

சுற்றாடல் அமைச்சின் தேசிய சுற்றாடல் விருதும் (2013) இவருக்கு கிடைத்தது.

2012 இல் இவரது வழிகாட்டலில் 'எம்மைச் சூழவுள்ள மூலிகைகள்' என்ற நூலினை பத்தாம் தர மாணவியொருவர் வெளியிட்டிருந்தார்.

முதலுதவி சேவைக்கான சர்வதேச சேவைப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டார். 2014 இல் கல்வியமைச்சின் 'குருபிரதீபா பிரபா' விருது இவருக்குக் கிடைத்தது.

இருபதுக்கு மேற்பட்ட கையெழுத்து சஞ்சிகைகளை அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் மட்டும் வழிநடத்தியிருக்கிறார்.

இவ்வருடம் கனேடிய பெண்கள் அமைப்பின் 'விழித்தெழு' சர்வதேச விருதினை பெற்றுள்ள இவர், இலக்கியப்பணிக்காக 'இலக்கிய வித்தகர்' அரச விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

'Srilanka pen Club' எனப்படும் ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பின் தலைவியாகவும் 'அவரி' காலாண்டிதழின் நிருவாக ஆசிரியராகவும் அவர் பணியாற்றி வருகிறார்.

ஜெஸ்மி எம்.மூஸா...
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# மதுபானம் உடலுக்கு தீங்கானது என்பதில் சந்தேகமே கிடையாது!

உலகின் பல நாடுகளில் சட்டவிரோத மதுபானங்களை அருந்துவதால் மக்கள் மரணமடைகின்ற சம்பவங்களின் போது, அதிகம் விவாதிக்கப்படுகின்ற விடயங்களில் ஒன்று, மதுபானங்களால் சமூகம் மற்றும் குடும்பங்களுக்கு ஏற்படும் தீமை பற்றியதாகும்.

சட்டவிரோத மதுபானமோ அல்லது சட்டரீதியான மதுபானமோ, அது கல்லீரலைச் செயலிழக்கச் செய்வதில் தொடங்கி உடலுக்கு ஏற்படுத்தும் கேடு கணக்கில் அடங்காதது. ஆனால், இது போன்ற நேரங்களில் 'உயர்ரக மதுபானங்களை அளவாகக் குடிப்பது இதயத்துக்கு நல்லது' என்று எங்கோ மேற்கத்திய நாடுகளில் ஒரு நம்பகத்தன்மையற்ற நிறுவனத்தினால் செய்யப்பட்ட ஆய்வு முடிவை எடுத்துக்கொண்டு சிலர் குறுக்கே வருவார்கள்.

ஆனால், இதுபோன்ற ஆய்வுகள் எந்த அளவுக்கு நம்பகமானவை என்று மதுப் பிரியர்கள் பலர் சிந்திப்பதில்லை.

அக்கறையுள்ள அறிவியல் அறிஞர்கள் இதுபற்றிச் சொல்லும் உண்மைகள் அதிர வைக்கின்றன. 'உடல்நலத்துக்கு மதுபானம் நல்லது என்று சொல்லும் பெரும்பாலான ஆய்வுகள், மதுபான நிறுவனங்கள் நிதியுதவி செய்து, அவர்களின் வர்த்தக நலனுக்காகச் சில ஆய்வாளர்களால் செய்யப்படுபவை என்பது பலருக்குத் தெரிவதில்லை.

இவ்வாறான முடிவுகள் உண்மைக்கு மாறானவை என்று மதுபானப் பாவனை தொடர்பாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள்.



# தமக்குரிய கட்சிகள் மூலம் மலையக தமிழர்கள் பயனடைய வேண்டும்

தற்போதைய பாராளுமன்றத்தில் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களை பிரதிநிதித்துபவர்களாக ஒன்பது பாராளுமன்ற அங்கத்தவர்கள் உள்ளார்கள். அவர்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை சேர்ந்த இருவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் மலையக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறி கல்வி ராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கும் அருணாச்சலம் அரவிந்தகுமார் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான ஆலோசகராக பதவி வகிக்கும் வடிவேல் சுரேஸ் ஆகியோரே அவர்கள்.









கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் சின்னத்தில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் இரண்டு ஆசனங்களை பெற்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிஸின் பொருளாளரான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். தமிழ் முற்போக்கு கூட்டணியில் ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசனும் வேலுகுமார் ஆகியோரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் பழனி திகாம்பரமும், மயில்வாகனம் உதயகுமாரும் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்னும் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கிறார்கள்.

தற்போதைய பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களில் இலங்கை, தொழிலாளர் காங்கிஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தற்போதைய அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சராகவும் மலையக மக்கள் முன்னணியிலிருந்து வெளியேறிய பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அருணாச்சலம் அரவிந்தகுமார் கல்வி இராஜாங்க அமைச்சராகவும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராகவும் பதவி வகிக்கிறார்கள்.

இவர்களால் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கென இன அடையாளத்தையும், அவர்களின் தோட்டத் தொழிலாளர்களுக்கான தபால் முகவரிகளையும் பெற்றுக் கொடுக்க முடியும். அத்தோடு நாடளாவிய ரீதியில் உள்ள பெருந்தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்காக பல்வேறு திட்டங்களில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கான காணி உறுதிப்பத்திரங்களை பெற்றுக் கொடுக்கவும் முடியும்.

எனவே, தற்போதைய அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சரான ஜீவன் தொண்டமான் மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களில் கரிசனை காட்டி தற்போதைய அரசாங்கத்தின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்பு அவற்றை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் அரசியல் அனுபவம் உள்ளவர். ஊவா மாகாண சபையில் அமைச்சராக பதவி வகித்ததன் மூலம் பெருந்தோட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு சிறந்த முறையில் தீர்வு கண்டவர். துணிச்சலுடன் செயல்பட்டு சாதனை படைத்தவர்.

இந்த நாட்டு அரசியல் வரலாற்றில் மலையக தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டமை முதல் தடவையாக இடம் பெற்றது. ஆம்! செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்தில் வாழும் மூவின மக்களையும் சரிசமமாக எண்ணி சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.

அவரின் சிறந்த சேவைக்கு உதாரணமாக மட்டக்களப்பு கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்களத்தில் நீண்டகாலமாக நிரப்பப்படாதிருந்த வெற்றிடத்துக்கு பிரதி பணிப்பாளராக ஒருவரை நியமித்தமையும் வாழும் கலை மன்றத்தின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் மூலம் மட்டக்களப்பில் சிறுவர் நிலையத்தை உருவாக்கியதையும் குறிப்பிடலாம். ஜீவன் தொண்டமானும் இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைகளைத் தீர்க்க அயராது பாடுபடுகின்றார், அவர் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கான இன அடையாளத்தையும் (மலையக தமிழர்) தோட்டத் தொழிலாளர்களுக்கான தபால் முகவரிகளையும் தோட்டத் தொழிலாளர்களுக்காக ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கான காணி உறுதி பத்திரங்களையும் தற்போதைய அரசாங்கத்தின் பதவிக் காலம் முடிவதற்கு முன்பு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவதன்...✍

# ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டெம்பர் கறுப்பழகி!" நாவல் வெளியீடு



ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டெம்பர் கறுப்பழகி!" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.53க்கு கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்தில் நடை பெறவுள்ளது. ஜேம்ஸ் பொன்ட் 007 கதைப் பாணியில் இலங்கை இலக்கிய உலகில் வெளிவரும் முதலாவது நாவல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினகரன் ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் தேசமான்ய லயன் தர்மராஜா தவசீலன் முன்னிலையில் நடைபெறும் இவ் விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன் IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அதிபர் மூக்கப்பிள்ளை மூவேந்தன், சமூக சேவகியும் கலை இலக்கிய செயற்பாட்டாளருமான கலாநிதி கௌசலாதேவி கோவிந்தப்பிள்ளை, சமூக சேவகரும் ஆன்மிகவாதியுமான தேசமான்ய பிச்சை கிருஷ்ணா, சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான கலாநிதி துரைராசா சுரேஷ், டவர் ஹோல் பவுண்டேஷனின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி எஸ். ஜெயபிரகாஷ் சர்மா, யுனைடட் ஆர்ட் ஸ்டேஜின் தலைவர் கலாபூஷணம் கே. செல்வராஜன், மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். மணிமாறன், அகில இலங்கை சபரிமலை குருசுவாமிகள் ஒன்றியத்தின் தலைவர், கலைஞர் ஆறுமுகம் ரவீந்திரன், பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் கலாநிதி வைத்தியமாநிதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீடு ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் ஆர். சிவராஜா, தமிழ் மிரர் பிரதம ஆசிரியர் அழகன் கனகராஜ், கெப்பிட்டல் எப்எம் வானொலியின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எப். சியா உல் ஹசன், ஞாயிறு தினக்குரலின் உதவி ஆசிரியர் லெப்டின்ராஜ், பிரபல கட்டடக் கலைஞர் எம். நந்தகுமாரன், வருணி ஜுவலர்ஸ் அதிபர் கே. யோகரட்ணம், சாய் டெய்லர்ஸ் அதிபர் ரதீஜா சபாபதி, ரஜனி துலானி ட்ரவல்ஸ் என். ரஜனிகாந்த், சினிமா, தொலைக் காட்சி மேடை நாடக நடிகர் கலைஞர் விஜேசுந்தரம் ஆகியோர் ஊடக விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். கலைஞர் தேவர் முனிவர் வரவேற்புரையாற்ற கவிஞர் தாமரைச் செல்வி நூல் அறிமுகவுரையாற்றுவார். தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமை உரையாற்றுவார்.

இவ்விழாவில், முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவருமான பிரபா கணேசன், IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் விஷேட உரைகளை ஆற்றவுள்ளனர். நூல் ஆசிரியரைப் பற்றிய கவிதையொன்றை பிரபல பின்னணிப் பாடகி கவிதாயினி அருணா அருந்தவம் பாடவுள்ளார். அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

நூலின் முதற்பிரதியை IDMNC சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி வெளியிட்டு வைப்பார். திருமதி நீரஜா யோகரட்ணம் நன்றியுரையாற்றுவார். ஊடகவியலாளரும் சிரேஷ்ட அறிவிப்பாளருமான இளையதம்பி சந்திரனும் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பிரபல அறிவிப்பாளருமான சந்திரிகா நிரோஷன் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள்.

கெப்பிட்டல் வானொலி இலத்திரனியல் ஊடக அனுசரணை வழங்கவுள்ளது.

# மலையக மக்கள் கல்வியில் முன்னேற அவசியமானவை சமூக நலன் செயற்பாடுகளே !

**"கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்"**

என செந்நாப் புலவர் திருவள்ளுவர் கல்வியின் முக்கியத்துவம் பற்றி அழகாகவும் அற்புதமாகவும் எடுத்தியம்பியுள்ளார்.



அறிவியல் (விஞ்ஞானம்) அபரிமித வளர்ச்சி கண்டுள்ளதனால், இன்று கல்வி கற்பித்தலின் கால மாற்றத்திற்கு ஏற்றால் போல் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. கல்வி கற்ற சமூகத்தினர் தமது பிள்ளைகள் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் தோற்றியதன் பின்பு அவர்களின் ஆற்றல்களுக்கு ஏற்ப எந்தெந்த கற்கை நெறிகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கேற்ற கற்கை நெறிகளை மேற்கொள்ளச் செய்து அவர்களின் எதிர்காலத்தை சுபீட்சம் அடையச் செய்யும் விதத்தில் செயல்படுகிறார்கள்.

ஆனால், இந்த நாட்டில் பெருந்தோட்ட தமிழ் சமூகத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்தக் கூடிய விதத்தில் உரிய செயல்பாடுகள் கல்வி கற்பிக்கும் தரப்பினரினால் முன்னெடுக்கப்படாதமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த நிலையில், இந்த நாட்டில் வெளிவரும் ஒரு தமிழ் தேசிய பத்திரிகையில் கடந்த 26.05.2024 ஆம் திகதி அண்மையில் பிரசுரமான ஒரு செய்தி பெருந்தோட்டப் பகுதிகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் தோற்றியவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது சம்பந்தமாக ஒரு வழிகாட்டல் செயலமர்வு பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. விரிவாக குறிப்பிடின், சமீபத்தில் முடிவடைந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய கண்டி மாவட்ட பெருந்தோட்டப் பாடசாலை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வுகள் ஆரம்பமாவதாக குறிப்பிடப் பட்டிருந்தது.

அந்த செயலமர்வுகள் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் அனுசரணையோடு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்த செயலமர்வுத் தொடர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை முடித்துவிட்டு உயர் கல்வியைத் தொடர எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டலாக அமைந்தது. உயர் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு உத்வேகத்தை அளித்தல், க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள் தாம் கல்வி கற்கவேண்டிய துறைகளையும் பாடங்களையும் தெரிவு செய்வதற்குரிய தெளிவூட்டலை வழங்குதல், இலங்கையின் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களிலுள்ள கற்கை நெறிகள் பற்றி விளக்கிக் கூறுதல், இந்தியா உள்ளிட்ட நாடுகள் வழங்கும் புலமைப் பரிசில்களை விபரித்தல், தொழிற்சந்தையிலுள்ள வாய்ப்புக்களை எடுத்துரைத்தல் போன்ற நோக்கங்களோடு செயலமர்வு நடத்தப்படுவதனால் பெருந்தோட்ட தமிழ் சமூகத்தின் கல்வித்தரம் நிச்சயம் மேம்படும்.

அந்த செயலமர்வுகள் இலவசமாக நடாத்தப்படுவதனால் பெருந்தோட்ட சமூகத்தின் எதிர்கால சந்ததியினர் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் உயர்ந்த நிலையை அடைய முடியும்.

எனவே, மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தைப் போன்று நாட்டிலுள்ள ஏனைய கல்வித் திணைக்களங்களும் மேலே குறிப்பிட்டுள்ளது போன்ற செயலமர்வுகளை அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் ஆலய சபைகள், சமூக நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் ஆகியவற்றுடன் பெருந்தோட்டப் பாடசாலைகளின் அதிபர்களை தொடர்பு கொள்ளச் செய்து அவற்றை அனுசரணையாளர்களாக பங்கு கொள்ளச்செய்து மேலே குறிப்பிட்டுள்ளது போன்ற செயலமர்வுகளை நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்து நடத்தினால் பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகள் வாழ்வில் உயர் நிலையை அடைய வழி பிறக்கும். அவர்கள் மூலம் இந்த நாடும் பயனடையும்.

உரிய விதத்தில் வழிகாட்டல்கள் இடம்பெறாதமையினாலேயே பெருந்தோட்ட தமிழ் சமூகம் கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ளது. எதிர்காலத்திலும் அதேநிலை தொடர்வதை அனுமதிக்க முடியாது. சமுதாய நலன் கருதிய செயல்பாடுகள் மூலமே எந்த ஒரு சமூகமும் முன்நோக்கி செல்ல முடியும்.

சி.ப.சீலன்...✍

# கண்கள் வரண்டு போகாமல் இருக்க...

உங்கள் கண்கள் அடிக்கடி வீக்கமடைந்து, அரிப்பு, நீர் வடிதல் மற்றும் வெளிச்சத்தை பார்த்தால் அசௌகரியமாக உணர்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறதா?

உங்களுக்கு உலர் கண்கள் (Dry eye) பாதிப்பு இருக்க வாய்ப்புகள் அதிகம்.

இது ஒப்பீட்டளவில் தீங்கற்ற நோயாகும். மக்கள் தொகையில் 5% முதல் 40% மக்களை பாதிக்கிறது. இது தீவிரமான உடல்நலப் பிரச்சினை இல்லை என்றபோதிலும், உலர் கண்கள் நிலை ஏற்படும் போது மிகவும் அசௌகரியமாக உணர வைக்கும். உலர் கண் என்பது கண்களின் கண்ணீர் படலத்தை மாற்றியமைக்கும் தொடர்ச்சியான காரணங்களின் விளைவாகும்.

இந்தப் படலம் மூன்று அடுக்குகளால் ஆனது. ஒரு கொழுப்பு அடுக்கு, ஒரு நீர் அடுக்கு, மற்றும் ஒரு மியூகோசல் (சளி போன்ற) அடுக்கு.

கண்களின் கண்ணீர் படலத்தின் (tear film) மூன்று அடுக்குகளில் பல காரணிகளால் மாற்றம் ஏற்படும். இது கண்கள் வறண்டு போக வழிவகுக்கும்.

கண்ணின் மேற்பரப்பை மென்மையாகவும் (lubricated), சுத்தமாகவும் பராமரிக்க மூன்று கூறுகளும் இணைந்து செயல்படுகின்றன. இந்த மூன்று அடுக்குகளில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், கண்கள் வறண்டு போகலாம்.



பிரிட்டனில் உள்ள சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தின் கண் மருத்துவப் பேராசிரியரான பர்வேஸ் ஹொசைனின் கூற்றுப்படி, கண்ணீர் படலச் செயலிழப்புக்கு மிகவும் பொதுவான காரணமாக பார்க்கப்படுவது மீபோமியன் சுரப்பி (meibomian glands) செயலிழப்பு தான். இருப்பினும் ஆட்டோ இம்யூன் நோய்கள், சில மருந்துகளின் நுகர்வு போன்ற பிற காரணங்களும் உள்ளன. வில்லைகள் பயன்படுத்துவது மற்றும் ஹார்மோன் மாற்றங்களால் கூட கண்ணீர் படல அடுக்குகள் பாதிக்கப்படலாம்.

மீபோமியன் சுரப்பிகள் கண் இமைகளில் அமைந்துள்ளன. கண்ணீர் படலத்தை உருவாக்கும் இலிப்பிட்டுகளை சுரக்கின்றன. அதை ஆவியாகாமல் தடுக்கின்றன. இந்தச் சுரப்பிகள் சரியாக வே லை செய்யாதபோது, கண்ணீர் அடுக்கு நிலையற்றதாகி, எதிர்பார்த்ததை விட வேகமாக மறைந்துவிடும்.

கண்ணீர் அடுக்கு மொத்தமாக பாதிக்கப்படுவதும் நிகழலாம் அல்லது குறைவான/தரமற்ற கண்ணீரைச் சுரக்கும் சூழலும் ஏற்படலாம். மூலமும் கண் வரட்சி நிலை மோசமாகும். நாம் கணினியை உற்றுப் பார்க்கும்போது நாம் கண் சிமிட்டும் எண்ணிக்கை குறைகிறது. கண் சிமிட்டுதல் என்பது கண்களைச் சுத்தப்படுத்தவும் கண்ணீரை சீராக விநியோகிக்கவும் தேவையான ஒரு செயலாகும்.

மேலும் கண் சிமிட்டுவது குறையும் போது கண்ணீர் அடுக்கின் ஆவியாதல் செயல்முறை வேகமடைகிறது.

நடுத்தர வயதினர் உலர் கண்கள் பிரச்சினையால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். பொதுவாக ஆண்களை விடப் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். 50களின் நடுப்பகுதியில் உள்ள வயதினர் அதிகம் உலர் கண்கள் பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக மாதவிடாய் நிறுத்தத்தை நெருங்கும் பெண்களுக்கு கண்கள் எளிதல் வறண்டுப் போகிறது.

இதனைத் தவிர்க்க கண்களில் காற்று படுவதை தவிர்க்கவும். சுற்றியுள்ள காற்று மிகவும் வரண்டு இருக்கும்போது ஈரப்பதத்தைச் சேர்க்க ஈரப்பதமூட்டியைப் (Humidify) பயன்படுத்தவும். காட்சி கவனம் தேவைப்படும் நீண்ட நேரப் பணிகளைச் செய்யும்போது உங்கள் கண்களுக்கு அடிக்கடி ஓய்வு கொடுக்க வேண்டும்.கண்ணீர் ஆவியாவதைக் குறைக்க வரண்ட சூழல்களில் (உதாரணமாக, விமானம் போன்ற இடங்களில்) உங்கள் கண்களை அடிக்கடி சிமிட்ட வேண்டும். கண்களை மூட வேண்டும்.கண் இமைகளை உயர்த்தி பார்ப்பதை குறைக்க, கணினித் திரையை கண் மட்டத்திற்குக் கீழே இருக்குமாறு தாழ்த்தி வைக்கவும். புகைபிடிப்பதை விட்டுவிடுங்கள், மற்றவர்கள் புகைபிடிக்கும் போது அருகில் செல்லாதீர்கள்.

# கண்ணாடி விரியன் பாம்புகளைக் கொல்ல படையெடுக்கும் மக்கள்



வங்கதேசத்தில் கடந்த சில மாதங்களாக கண்ணாடி விரியன் பாம்புகள் குறித்த அச்சம் அதிகளவில் பரவி வருகிறது.

அந்நாட்டின் பல்வேறு இடங்களில், கண்ணாடி விரியன் எனத் தவறாகக் கருதி, வேறு வகையான பாம்புகள் பல அடித்துக் கொல்லப்படுகின்றன. இதுகுறித்துப் பல்வேறு வதந்திகளும் பரவி வருகின்றன.

வங்கதேசத்தில் காணப்படும் பாம்புகளில் 85 சதவீதத்திற்கும் அதிகமானவை நஞ்சற்றவை என்று வனத்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால், சமீப நாட்களில் மக்கள் நஞ்சுள்ள கண்ணாடி விரியனுக்கு பயந்து கொல்லும் பாம்புகளில் பெரும்பாலானவை நஞ்சற்றவை மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பெரும் பங்காற்றக்கூடியவை.

பல்லுயிர்ப் பெருக்கத்தில் பாம்புகள் முக்கிய பங்கு வகிப்பதாக உயிரியலாளர்கள் கூறுகின்றனர். பாம்புகளும், மற்ற உயிரினங்களைப் போலவே, சூழலியல் சமநிலையைப் பராமரிக்க மிகவும் முக்கியம். இப்போது மக்கள் சூழலியல் குறித்த சிந்தனையின்றி பாம்புகளைக் கொல்லும் விதம் சுற்றுச்சூழலில் என்ன விளைவை ஏற்படுத்தும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

வங்கதேசத்தில் இந்தப் பாம்பு ஒருகாலத்தில் முற்றிலும் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்டது. ஆனால், சுமார் 1012 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் அதன் கடியால் மீண்டும் இறக்கத் தொடங்கினர். கடந்த 2013ஆம் ஆண்டு முதல் இந்தப் பாம்பு நாட்டில் அதிகம் காணப்படுவதாக ஊர்வன ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டில், நாட்டின் வடமேற்கில் சில பகுதிகளில், குறிப்பாக பத்மா ஆற்றின் சில மாவட்டங்களில் கண்ணாடி விரியன் கடித்ததால் இருவர் உயிரிழந்தனர், பலர் நோய் வாய்ப்பட்டனர். அப்போது இந்தச் சம்பவம் பெரும் செய்தியாக வெளியானது.

கடந்த 3 மாதங்களில் மாணிக்கஞ்ச் பகுதியில் பாம்பு கடித்து 5 பேர் உயிரிழந்துள்ளதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். தற்போது நெல் அறுவடைக் காலம். பயிர்கள் நிறைந்த வயல்களில் பாம்புகள் அதிகம் வாழ்வது இயற்கையில் அதிகம் அவதானிக்கப்பட்ட ஒன்று.

# கெஸ்பேவ பிரதேச செயலகப்பிரிவில் வீதிகள் காபட் இடும் பணிகள் ஆரம்பம்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன அதிதியாக பங்கேற்பு

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான காமினி லொகுகேவின் வேண்டுகோளுக்கு இணங்க, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில், கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவில் மகுலுதுவ முதல் பொகுந்தர வரையான வீதியின் புனரமைப்புப் பணிகள், 1500 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர், நமது நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் ஸ்தம்பிதப் பயணத்தின் விளைவாக, இந்தச் சாலையை கார்பட் இடும் பணியைத் தொடங்க முடிந்தது. சில ஊடகவியலாளர்கள் மற்றும் சிலர் நாட்டைப் பற்றிய அகநிலை புரிதல் இல்லாதவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகள் வரி செலுத்துவோரின் பணத்தில் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கின்றார்கள்.

சுதந்திரம் அடைந்து கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளில் எந்த அரசும் தனது அன்றாடச் செலவுகளுக்குப் போதுமான வரி வருவாயைப் பெறவில்லை. எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் பெற்று ஒவ்வொரு அரசாங்கமும் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பதினான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. ஓய்வூதியம், மானியம், வாங்கிய கடனுக்கான வட்டி வழங்க வேண்டும். கடந்த காலத்தில் எந்த அரசாங்கமும் இந்த தொடர் செலவுகளை ஈடுகட்ட போதுமான வரி வருவாயை ஈட்டவில்லை. திறைசேரி உண்டியல்களை ஏலம் விடுவதன் மூலமும், உள்நாட்டில் திரட்டப்பட்ட கடனைப் பயன்படுத்தியும் கூடுதல் தொகை ஈட்டப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், வாங்கிய வெளிநாட்டுக் கடனைச் செலுத்தாமையாகும்.

இந்த வீதி புனரமைப்பு பணிகள் அனைத்தும் கடன் பணத்தில் தான் நடக்கிறது. எங்கள் குழந்தைகளாகிய நீங்கள் அந்தக் கடனை எதிர்காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். நாட்டை தவறாக வழி நடத்தி பல்வேறு காரணங்களுக்காக மக்களை தூண்டிவிட்டு குறிப்பிட்ட சிலரால் நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலை காரணமாக கடந்த காலங்களில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளோம்.

அந்த நேரத்தில், எந்தத் தலைவரும் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. ஐந்து தடவைகள் இலங்கையின் பிரதமராக பதவி வகித்த அனுபவமிக்க அரசியல் தலைவரான ரணில் விக்கிரமசிங்க அந்த நேரத்தில் சவாலை ஏற்றுக்கொண்டார் என்றார். பதினாறு தடவைகள் நம்பிக்கை மீறல் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்துடனான நீண்ட பேச்சுவார்த்தையின் பின்னர் எமது நாடு கைவிடப்பட்டு 2027ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்ட கடன் ஒப்பந்தம் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டது. உரிய உடன்படிக்கைகளின்படி 2027 ஆம் ஆண்டு வரை



பணியாற்றுவதற்காக, நாட்டின் மறுசீரமைப்புக்கு சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளை விதித்துள்ளது என்றார்.

### கடன் மறுசீரமைப்பு விதிமுறைகள்...

அமைச்சர் தெரிவித்துள்ளார். மொத்த வெளிநாட்டுக் கடனான 37 பில்லியன் அமெரிக்க டொலர்களில் 12.5 பில்லியன் அமெரிக்கன் டொலர்கள் மறுசீரமைப்பை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ள அவர், நிலையான இலக்குகளுக்கிணங்க மதிப்பீடு செய்வதற்காக உத்தியோகபூர்வ கடன் உரிமையாளர்கள் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி அவசியம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த வகையில் நாட்டில் கடன் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் இந்த உடன்படிக்கை முக்கியமான திருப்புமுனையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை காரணமாக மேற்படி இணக்கப்பாடு கட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு வருட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தையின் பின்னர் இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்க 28 வீதத்தைக் குறைப்பதற்கு கடன் உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ள அவர், இலங்கையினது இருதரப்பு கடன் வழங்குனர்களுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்தட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 2024ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்பதாக நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஜனாதிபதியின் பதவிக்காலம்...

அதற்கமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் என்பதைக் கருத்திற் கொண்டு தேர்தல் ஆணைக் குழு அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்பதால் உயர் நீதிமன்றத்தினால் இது குறித்த இறுதித் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படுவதைத் தடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடைக்காலத் தடை யுத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றே மனுதாரர் மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்னர் மனுதாரர் தன்னிடமோ அல்லது தனது சட்டத்தரணிகளுடனோ கலந்தாலோசிக்கவோ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவோ நடவடிக்கை எடுக்கவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள் என்பதோடு 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருப்பது சரியானது என்பதே தனது உறுதியான நிலைப்பாடாகும் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

### அத்தியாவசிய பொருட்களை...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்க நடவடிக்கையின் போது அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பதில் சுங்க அதிகாரிகள் தலையீடு செய்துள்ளதாகவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் அந்த அத்தியாவசியப் பொருட்களை விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சருடன் முன்னெடுக்கப்பட்ட விசேட பேச்சு வார்த்தையின் பின்னர் சுங்கத் தினணக்கள தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### உலக வங்கி டேவிட் சிஸ்லேன்...

சிஸ்லேனுக்கு முன்னதாக உலக வங்கி வதிவிடப் பணிப்பாளராக பரீஸ் ஹதாத் சர்வோஸ் (Faris HadadZervos) பணியாற்றினார்.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான உப தலைவர் மார்டின் ரயிசர், உலக வங்கியின் தெற்காசியா, இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான முகாமையாளர் கியோ கந்தா மற்றும் பொருளாதர அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

### யாழில் நேற்று சம்பந்தனின்...

கொண்டு செல்லப்பட்ட சம்பந்தனின் பூதவுடல், யாழில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் நேற்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

சம்பந்தனின் இறுதிக்கிரியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (07) திருகோணமலையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குடும்ப உறுப்பினர்களது 16 நிலையான ...

காப்புறுதி உறுதிப் பத்திரம் ஆகியவற்றை ஏழு நாட்களுக்குத் தடை செய்வதற்கு இலஞ்ச, ஊழல் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்த வைப்புக்களின் பெறுமதி 93.12 மில்லியன் ரூபாவாகும் என்றும் அந்த ஆணைக்குழு அறிக்கை மூலம் தெரிவித்திருந்தது. அந்த வகையில் மேற்படி நிதி சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மூலம் சம்பாதித்தவை என சந்தேகம் எழுப்பப்பட்டிருந்தது. அதன டிப்படையிலேயே அந்த வங்கிக் கணக்குகளுக்கான தடை நீடிக்கப்பட்டுள்ளது.

### புதிய திட்டங்களுடன்...

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இன்று கொழும்பை சுற்றியுள்ள பல பகுதிகளில் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்வரும் காலங்களில் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்துள்ளார்.

### ஹிருணிகாவின் பிணைக்கு...

ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க சட்டமா அதிபர் எதிர்பார்ப்பதாக அரசாங்க சட்டத்தரணி இதன்போது தெரிவித்தார். அத்துடன் எழுத்து மூலம் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்காக குறித்த வழக்கை ஒத்திவைக்குமாறும் அரசாங்க சட்டத்தரணி மன்றில் கோரிக்கை முன்வைத்தார்.

இதற்கமைவாக சட்டமா அதிபருக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க அனுமதித்த உயர் நீதிமன்ற நீதியரசர், பிணை கோரிக்கையை எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளுமாறு தெரிவித்து வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார். 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி, தெமட்டகொட பிரதேசத்தில் கடையொன்றில் பணிபுரிந்து வந்த அமில பிரியங்க என்ற இளைஞனை கறுப்பு டிஃபென்டர் வாகனத்தில் கடத்திச் சென்று அடைத்து வைத்து தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு கடந்த மாதம் 28ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தலை பிற்போட...

வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அத்தோடு இப்போது தேர்தல் நடைபெற்றால் எந்த வேட்பாளரும் 50% வாக்குகளைப் பெற முடியாது.

பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு நிலையான ஆட்சி அமைய வேண்டும். ஆனால் தற்பொழுது தேர்தல் நடைபெற்று குறுகிய காலத்தில் ஆட்சி மாறினால் பாரிய பிரச்சினை ஏற்படும். இந்த நாட்டில் இன்னொரு பிரச்சினை ஏற்பட்டால், நாட்டை மீட்க முடியாது.

மக்களின் பாதுகாப்பு தொடர்பிலும் நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே தேர்தலை பிற்போட வேண்டும் என்பதே எனது கருத்து என தெரிவித்தார்.

### கடன் மறுசீரமைப்பின் வெற்றி...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த,

கடந்தகால நெருக்கடி நிலையின் போது வலுசக்தித் துறை தொடர்பான பல திட்டங்கள் முடங்கின. ஆனால் தற்போது இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதுடன், கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. எனவே, வெளிநாடுகளில் இருந்து கடன் பெற்று ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் இடைநடுவில் நிறுத்தப்பட்ட குறித்த திட்டங்களை, மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான சட்ட ரீதியிலான நிலைமைகள் நிறைவடைந்துள்ளன. அதன்படி, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றி, நாட்டில் நிலவும் வலுசக்தி நெருக்கடியைத் தீர்க்க பெரும் உதவியாக இருக்கும் என்பதைக் கூற வேண்டும்.

மேலும், அதானி திட்டம் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வுகள் மற்றும் சுற்றாடல் அறிக்கைகள் போன்று அது தொடர்பான மேலதிக பணிகள் இன்னும் இடம்பெற்று வருகின்றன. அவ்விடயங்கள் நிறைவடைந்த பின்னர், தற்போதுள்ள விலைகளின் பிரகாரம் செயற்பட முடியுமா என்பது குறித்து கலந்துரையாட உள்ளது.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க்கட்சிகளின் சில தரப்பினர் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருவது தெரிகின்றது. உமா ஓயா, சாம்பூர் போன்ற மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் போதும் இவ்வாறான பொய்யான கருத்துகளை அவர்கள் குறிப்பிட்டனர்.

## இன்றைய பலன்கள்

(05.07.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
தன வரவு தாராளமாக இருக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**ரிஷபம் :**
வீடு, இடம் வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். பாகப் பிரிவினை சம்பந்தப்பட்ட வகையில் நீங்கள் நடத்திய வழக்குகள் சாதகமாக முடியும்.

**மிதுனம்:**
வரவைக்காட்டிலும் செலவு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். உத்தியோகத்தில் திடீர் மாற்றம் இலாகா மாற்றம் ஏற்பட்டு மனக்குழப்பத்தை தரலாம்.

**கடகம்:**
பெருமைக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். புதியவர்களின் அறிமுகத்தால் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் இடுவீர்கள்.

**சிம்மம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். வாடகை கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

**கன்னி:**
மங்கள ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உண்டு. மதிப்பும் மரியாதையும் உயரும். வருமானம் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதலாக கிடைக்கலாம்.

**துலாம்:**
ஆரோக்கியத்தொல்லை அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களின் ஆதரவு குறையும். மருத்துவ செலவுகளால் மனக்கலக்கம் ஏற்படும்.

**விருச்சிகம்:**
பொருளாதார நிலை உச்சம் பெறும். புனித பயணங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்களோடு இணைந்து பணிபுரிய விருப்பப்படுவர்.

**தனுசு:**
உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காது. ஊர் மாற்றம் திருப்திகரமாக அமையாது. குடும்பத்திலும் சில பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும்.

**மகரம்:**
நினைத்தது நிறைவேறும் விதத்தில் குரு மங்கள யோகம் ஏற்படுகிறது. பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள்.

**கும்பம்:**
வாசல் தேடி வந்த வரன்கள் திருப்பி சென்று விட்டதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சி அடையும் விதத்தில் மணமாலை சூடும் வாய்ப்பு வரப்போகிறது.

**மீனம்:**
குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் யோகம் உண்டு. விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

### இலங்கை–இந்திய...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுவதற்கு பதிலாக மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படும் என அமைச்சர் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள விதிமுறைகளின் படி, விமான நிறுவனத்தின் பங்குகளில் 49வீதத்தை மட்டுமே வேறொரு நிறுவனத்திற்கு மாற்ற முடியும், எனினும் பொருத்தமான முதலீட்டாளர் இதுவரை விருப்பம் தெரிவிக்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### அஸ்வெசும இரண்டாம்...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்ட கொடுப்பனப்புக்காக விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கான காலம் வழங்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் அடுத்த வாரத்திற்குள் அதற்காக விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இரண்டாம் கட்ட கொடுப்பனவுகளுக்காக இதுவரை 4 இலட்சத்து 75 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அதில் 4 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தகவல்கள் தரவு தொகுதியில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

### களுபோவில...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயன ஆகிய பொலிஸ் நிலையங்களினால் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த சடலங்களுடன் தொடர்புபட்ட உரிமையாளர்களை உடனடியாக அடையாளம் கண்டு விசாரணைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி பாரிந்த கொட்டுகொட மேலும் தெரிவித்துள்ளார்.

### 1,700 ரூபா சம்பள...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று (04) பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்தை பொறுத்தவரையில் சட்ட சிக்கல் காணப்படுவதனால் இடைக்கால தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதே நீதிமன்றம் கூறியிருக்கின்றது ஒரு மாத காலப்பகுதிக்குள் இந்த பிரச்சினைகளை முடிவிற்கு கொண்டுவருவதாக தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் , தொழிற்சங்க தலைமைகளும் அரசியல் தலைமைகளும் சந்தோசப்படாமல் முதளை கண்ணீர் வடிக்காமல் ஒற்றுமையாக இருந்தால் போதும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சம்பந்தன் ஆற்றிய...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதி. நல்ல எழுத்தாளன். இவரது முயற்சியால் இனப்பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய பல சந்தர்ப்பங்கள் கிடைத்தது.

எனக்கும் சம்பந்தனுக்கும் வயதில் 3 மாதமே வித்தியாசம். அவரது மரணச் செய்தி எனது கால முதிர்ச்சியையும் வெளிப்படுத்துகிறது.

எனவே இனியும் நாங்கள் ஏமாற முடியாது. அனைவரும் இணைந்து தமிழர் இனப் பிரச்சினைக்கு முடிவு காணுவோம். இந்த நாட்டு மக்கள் அதற்கு தயாராக இருக்கின்றர்கள்.

சம்பந்தன் அவர்கள் எத்தனையோ தியாகங்கள் செய்து அவரது முயற்சி பலனற்று போனமை கவலை. மிக விரைவில் நான் உயிருடன் இருக்கும் வரை தந்தை செல்வாவின் கட்சியில் உங்கள் அனைவரினதும் ஆதரவுடன் பயணிப்போம். அந்த ஆவலான நாள் மிக விரைவில் வரும் என நம்புகிறேன்.

அவர் ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. அதை யாரும் மறுக்க முடியாது. சம்பந்தனின் அபிலாசைகள் நிறைவேறுவதற்கு வேறு சக்திகள் இடம் கொடுக்கவில்லை. அவர் பிரிவினால் துயருற்றுள்ளவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறேன் என தெரிவித்தார்.

### பல்கலைக்கழக...

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபேறுகளின்படி, பல்கலைக் கழக அனுமதிக்கான இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் நாள் இன்று (05)ஆகும்.

இதுவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கத்தவறிய மாணவர்கள் விண்ணப்பங்களை பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளமான www.ugc.ac.lk ஊடாக சமர்ப்பிக்குமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மலைச்சாரல்

# மலையகத்தில் தடைப்பட்டிருந்த அபிவிருத்தி பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும்

## அக்கரப்பத்தனை பிரதேச சபை அபிவிருத்தி குழு பொறுப்பாளர்



(ஹற்றன் விசேட நிருபர்)

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் அபிவிருத்தி குழு பொறுப்பாளராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் சச்சிதானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய பிரதேச அபிவிருத்தி பொறுப்பாளர்களாக அண்மையில் மத்திய மாகாண சபை ஆளுநர் லலித் யூ கமகேவினால் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இதன்போதே அக்கரப்பத்தனை பிரதேச சபையின் அபிவிருத்தி குழு பொறுப்பாளராக இ.தொ.காங்கிரஸின் உப தலைவர் சச்சிதானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அபிவிருத்தி பணிகள் முடங்கின. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டதை தொடர்ந்து தற்போது சுமூகமான நிலைக்கு நாடு திரும்பியுள்ளது. சர்வதேச நாணய நிதியமும் மக்களின் அத்தியாவசிய அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை பெற்றுக் கொடுத்துள்ளது.

எனவே துரிதகதியில் மக்களின் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்து வருகிறார். இதனால் மலையகத்தில் தடைப்பட்டு கிடந்த அபிவிருத்தி பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அக்கரப்பத்தனை போடைஸ் வீதியை காபட் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று நாகசேன தலவாக்கலை ஊடான வீதியின் காபட் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமின்றி இந்திய வீடமைப்பு திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு மலையக தோட்டப்புறங்களுக்கு செல்லும் பாதைகள், குடிநீர்,மின்சாரம் உள்ளிட்ட பல அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் இன்று ரூ.1700 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.1700 சம்பளத்தை கம்பனிகள் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் கம்பனிகளுக்கு எதிராக வரலாறு காணாத எதிர்ப்புக்கள் நடைபெறும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எப்போது மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுவதனால் மக்களுக்கு யார் நன்மை செய்கிறார்களோ அவர்களை ஆதரித்து வந்துள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தலைவர் இரா. கோபால் கலந்து கொண்டிருந்தார்.

# மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(அக்குறணை குறூப் நிருபர்)

மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதன்பொதுச் செயலாளரும் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளருமான ஏ.எல்.ஏ.ஜலீல் தெரிவித்தார்.

மடவளை மதீனா மத்திய கல்லூரி ஆண்கள் பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (7) காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் மேற்படி கூட்டத்தில் 2024ஆம் வருடத்துக்கான புதிய உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இவ்வமைப்பு மடவளையில் இயங்கும் பிரபல அமைப்புக்களில் ஒன்றாகும்.

இதன் ஊடாக கிராம மற்றும் பாடசாலை அபிவிருத்திகள் மற்றும் நலன்புரி சேவைகள் என்பன இடம்பெற்றுவருகின்றன. அத்துடன் தரம் ஐந்து புலமைப் பரிசில், க.பொ/த. (சா/த), க.பொ.த. (உ/த), மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களையும் மடவளை வாழ். மாணவர்களுக்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வருடந்தோறும் சர்வதேச முதியோர் தினம் மற்றும் சிறுவர் தினம் போன்றவற்றினூடாக வசதி குறைந்த குடும்ப அங்கத்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.





பண்டாரவளை ஊவா ஹைலன்ஸ் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி பட்டம் பெற்றவர்களையும், தெரிவாகி மேற்படிப்பை மேற்கொண்டு வருபவர்களுக்கும், ஆசிரிய சமூகத்தைச் சார்ந்த சாதனையாளர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டிருந்தார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# ஆரோக்கியமான குழந்தை பருவ மேம்பாட்டுக்கான தேசிய வேலைத்திட்டம்

(மாத்தளை சுழற்சி நிருபர்)




'ஆரோக்கியமான குழந்தை பருவம் மேம்பாட்டுக்கான ஆசிரியரின் திறன்' எனும் தேசிய வேலைத் திட்டம் மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர் சிசில சல்லப்பு ஆராச்சி லிங்கன் பல்கலைக்கழக பணிப்பாளரும் விரிவுரையாளருமான சந்த தரங்க, மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மற்றும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க அங்கு உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# தியத்தலாவை வாராந்த சந்தை பகுதியில் சுற்றாடல் மாசு!

(ஊவா சுழற்சி நிருபர்)



தியத்தலாவை நகரின் வாராந்த சந்தையில் கொட்டப்படுகின்ற கழிவுப் பொருட்கள் முறையாக அகற்றப்படாது குறித்து பிரதேச மக்கள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர். தியத்தலாவை வாராந்த சந்தை ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் கூடுகின்றது.

அங்கு சேகரிக்கப்படுகின்ற குப்பைக் கூளங்கள் முறையாக பராமரிக்கப்பட்டு முறையாக அகற்றப்படுவதில்லை. இந்நகரில் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலும் சதொச நிலையத்துக்கு எதிரேயும் ஆயுர்வேத திணைக்களம் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு அருகிலும் இந்த வாராந்த சந்தை கூடுகின்றது.

இங்கு சேருகின்ற குப்பைக் கூளங்களால் இப்பிரதேசமெங்கும் சூழல் மாசடைவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நகரில் இலங்கை இராணுவ அகடமி, இலங்கை இராணுவ பயிற்சி நிலையம், ஊவா மாகாண ஆயுர்வேதத் திணைக்களம், இலங்கை படமாக்கல் திணைக்களம் மற்றும் தபால் நிலையம், தள வைத்தியசாலை போன்ற அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ளதால், பிரதேசத்தின் சூழல் மாசடைவது தவிர்க்கப்பட வேண்டுமென்று மக்கள் கூறுகின்றனர்.

அப்புத்தளை பிரதேச செயலகம், அப்புத்தளை பிரதேச சபை போன்றவை இங்கே சேகரிக்கப்படுகின்ற குப்பைக் கூளங்களை முறையாக அகற்றி நகரின் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் அடிக்கடி மழை பெய்து வருவதால் பெருகி வரும் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு சூழலை பாதுகாப்பது அவசியமென்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

# அடிக்கடி மழை பெய்யும் சாத்தியம்

சப்ரகமுவ மற்றும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் அடிக்கடி மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி பிரதேசங்களில் அடிக்கடி மழை பெய்யும் வாய்ப்பு காணப்படுவதாக முன்னறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியரின் சங்கிலியை அறுத்து சென்ற சந்தேகநபர் கைது

பசறை கொட்டமுதுன பகுதியில் ஆசிரியர் ஒருவரின் கழுத்திலிருந்த சங்கிலியை கண்ணுக்குள் மிளகாய் தூள் தூவி அறுத்து சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளதாக ஹிங்குருகடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை பாடசாலை முடிந்து வீடு செல்லும் வழியில் மறைந்திருந்த நபர் ஒருவர் அவ்வழியே சென்றுக் கொண்டிருந்த ஆசிரியையின் கண்ணுக்கு மிளகாய் தூள் தூவி விட்டு கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்து கொண்டு காட்டுக்குள் ஓடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.




கண்டி விவேகானந்த கல்லூரிக்கு கண்டி நகர தமிழ் கல்வி ஒன்றியத்தின் ஊடாக தரம் 5 மாணவ செல்வங்களுக்கு வினாத்தாள்களை வழங்கிவைக்கப்பட்டன. கண்டி நகர தமிழ் கல்வி வளர்ச்சி ஒன்றியத்தின் தலைவர் எம். தீபனால் வினாத்தாள்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் வித்தியாலய அதிபரும், வகுப்பு ஆசிரியரும் கலந்துக் கொண்டார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.07.03
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5523 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.36,478,776.00
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 4 2 7 0 0 0

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 098 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 7 0 0 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3765 — சீட்டிழுப்பு திகதி 2024.07.03 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,867,496.36
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 10 16 52 60 — விசேட எழுத்து G — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 25612

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1871 — 2024.07.03 — 73961 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.437,687,018.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 01 — வெற்றி இலக்கங்கள் 24 41 56 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 349
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 8 4 2 0 8 9
L7 எழுத்து O — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,194,692.08

ராசி சுப பலன் — திகதி 2024.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 832 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,112,790.80
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 12 36 50 53 — தனயோக இலக்கம் 22532 — நாளுக்கான விதி எண் 02

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1553 — 2024.07.03 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,411,725.20
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 06 24 52 60 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 48893

# இராவண நீர்வீழ்ச்சிக்கு அருகில் விபத்து

(ஊவா சுழற்சி நிருபர்)



எல்ல வெல்லவாய வீதியில் இராவண நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த வளைவில், சொகுசு பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையிலிருந்து எல்ல வெல்லவாய தனமல்விலை வழியாக மாகும்புர அதிவேக நெடுஞ்சாலைக்குச் செல்லும் தனியார் சொகுசு பஸ் வண்டி நேற்று காலை எல்ல வெல்லவாய வீதியில் இராவண நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த வளைவில் வீதியை விட்டு விலகி வீதியின் ஓரத்திலுள்ள மலையில் மோதி விபத்துக்குள்ளாகியது. இப்பிரதேசத்தில் மழை மற்றும் பனி பொழிவு நிலவுவதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் தெய்வாதீனமாக எவரும் பலத்த காயங்களுக்குள்ளாகவில்லை.

எல்ல பொலிஸார் சாரதியின் சாதுர்யத்தால் பல உயிர்களும் உடமைகளும் காப்பாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# தெல்லிப்பழையில் இயங்கும் இரு சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு ஆளுநர் பணிப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பழை பிரதேசத்தில் இயங்கி வரும் இரண்டு சிறுவர் இல்லங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளருக்கு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணித்துள்ளார்.

பொருத்தமற்ற இடத்தில் பொருத்தப்பட்ட சி.சி.ரீ.வி. கமெராக்கள் மற்றும் பதிவு செய்யப்படாமல் இச்சிறுவர் இல்லங்கள் இயங்குகின்றமை தொடர்பாக வடமாகாண ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் அபயம் பிரிவினருக்கு முறைப்பாடு கிடைத்தது.



இந்நிலையில் அபயம் பிரிவினர் கோரியமைக்கமைய வடமாகாண ஆளுநருக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் களவிஜய விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இதனைத் தொடர்ந்தே இச்சிறுவர் இல்லங்களை மூடுவதற்கும் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் ஆளுநர் இவ்வாறு பணித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க வடக்கு மாகாணத்தில் இயங்கி வரும் சிறுவர் இல்லங்கள் தொடர்பாக மேற்பார்வை செய்து ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளருக்கு ஆளுநர் பணித்துள்ளார்.

இந்நிலையில் பதிவு செய்யப்படாமல் இயங்கி வரும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வெளிமாகாணங்களிலுள்ள சிறுவர்களை வரவழைத்து, வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்க வேண்டாமென்பதுடன், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளை பின்பற்றி அவர்களை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறும், வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## வடக்கின் உதயம்

# முள்ளியவளை விபத்தில் 9 வயது சிறுமி உயிரிழப்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமூலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ள விபத்தில் 9 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை, தண்ணீரூற்று நெடுங்கேணி வீதியில் விபத்து இடம்பெற்றுள்ளதுடன், பட்டா ரக வாகனம் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. இந்த விபத்தை தொடர்ந்து பட்டா ரக வாகன சாரதியை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர். பிரேத பரிசோதனைக்காக சிறுமியின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக முள்ளியவளை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேக்குமர குற்றிகளுடன் சென்ற வாகன சாரதிக்கு விளக்கமறியல்

**புதுக்குடியிருப்பு விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்**



புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பிரதேசத்தில் தேக்குமர குற்றிகளுடன் சென்ற ஹயஸ் வாகனம் மோதி மாணவர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவத்தை தொடர்ந்து கைது செய்யப்பட்ட அவ்வாகன சாரதிக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியல் உத்தரவு நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபரை இம்மாதம் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, பரந்தன் வீதி வழியாக மாலைநேர வகுப்பை முடித்து விட்டு சைக்கிளில் பயணித்த உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் மீது வேகமாக பயணித்த ஹயஸ் வாகனம் மோதியதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற வேளையில் சட்டவிரோதமான முறையில் தேக்கு மரக் குற்றிகள் மேற்படி வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டமை கண்டறியப்பட்டதுடன், வாகனத்துக்குள் 9 தேக்கு மரக் குற்றிகள் இருந்தமையும் கண்டறியப்பட்டது.

அத்துடன் புதுக்குடியிருப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இத்தேக்கு மரக் குற்றிகள் கடத்தி செல்லப்பட்டதாக தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

விபத்தில் படுகாயமடைந்த உடையார் கட்டு தெற்கைச் சேர்ந்த 17 வயதுடைய இம்மாணவர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் அமரர் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு பலரும் அஞ்சலி





**யாழ். விசேட நிருபர்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இராஜவரோதயம் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு யாழ்ப்பாணத்தில் பலரும் அஞ்சலி செலுத்தியுள்ளனர். கொழும்பிலிருந்து விசேட விமானத்தில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்பட்ட இரா. சம்பந்தனின் பூதவுடல், யாழ்ப்பாணம் மார்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திலும் தந்தை செல்வா கலையரங்கிலும் மக்கள் அஞ்சலிக்காக நேற்று வியாழக்கிழமை வைக்கப்பட்டது.

இதன்போது இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், ஏனைய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளென பலரும் இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸும் இரா.சம்பந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளதுடன், இரா. சம்பந்தனின் உருவப் படத்துக்கும் ஆளுநர் மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார். அமரர் இரா.சம்பந்தனின் உறவினர்களுடனும் வடமாகாண ஆளுநர் தனது அனுதாபத்தை பகிர்ந்துகொண்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி இரவு காலமான இரா. சம்பந்தனின் இறுதிக்கிரியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறையில் வெற்றிமணியின் 30ஆவது ஆண்டு விழா நாளை

தாய் மண்ணில் வெற்றி நிலா முற்றம் வெற்றிமணி சஞ்சிகையின் 30ஆம் ஆண்டு நிறைவு விழா சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராசநாயகம் தலைமையில் பருத்தித்துறை ராஜாராணி சேவை இல்ல மண்டபத்தில் நாளை சனிக்கிழமை 6ஆம் திகதி மாலை 3.00 முதல் 6.30 மணிவரை நடைபெறவுள்ளது.




இந்த வைபவத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதமஅதிதிகளாக கலந்து கொள்கின்றனர். ஜேர்மனியிலிருந்து 30 வருடங்களாக வெளிவரும் வெற்றிமணி சஞ்சிகையின் ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த வைபவத்தில் டொக்டர் கே.முருகானந்தன், திருமதி கோகிலா மகேந்திரன், திருமதி வலன்ரீனா இளங்கோவன், கவிஞர் வடிவழகையன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

இதன்போது 'வெற்றிமணியும் ஜேர்மனியும்' 30 வருட அனுபவப் பகிர்வு எனும் தலைப்பில் வெற்றிமணி ஆசிரியர் உரை நிகழ்த்தவுள்ளதுடன், வெற்றிமணியின் 28ஆவது வெளியீடான கரிணி கண்ணனின் வைகல் நூலின் அறிமுகமும் நடைபெறவுள்ளது.

இதேவேளை வெற்றிமணி தயாரிப்பில் பருத்தித்துறையில் படமாக்கப்பட்ட 'எழுதாத கவிதைக்கு முதல் பரிசு' குறும்படமும், ஜேர்மனியில் தமிழர் தெருவிழாவில் படமாக்கப்பட்ட 'தம்பட்டம்' குறும்படமும் இந்நிகழ்வின் போது இலவசமாக காட்சிப்படுத்தப்படவுள்ளன.

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கல்





**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை நேற்று முன்தினம் புதன்கிழமை திடீர் விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தார். இதன்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர் அஸாத் எம்.ஹனீபாவை சந்தித்து வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பாகவும் மன்னார் மறை மாவட்ட ஆயர் கேட்டறிந்தார்.

அத்துடன் வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களையும் மன்னார் மறை மாவட்ட ஆயர் நன்கொடையாக வழங்கியதுடன், மன்னார் வைத்தியசாலைக்குரிய வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

# யுக்திய சுற்றிவளைப்பில் 7 சந்தேக நபர்கள் கைது



**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய யுக்திய சுற்றிவளைப்பின் போது, பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு 9ஆம், 10ஆம் வட்டாரங்களில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது திறந்த பிடியாணை கொண்ட இருவர், பொலிஸாரால் ஒரு நாள் பிணையில் விடுவிக்கப்பட்ட மூவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து 43 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

இவர்களில் திருகோணமலையை சேர்ந்த சந்தேக நபர்கள் இருவர் அடங்குவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# தேராவில் பிரதேச விவசாய பண்ணையில் வயல் விழா



**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவு, தேராவில் பிரதேச விவசாய பண்ணையில் நேற்று முன்தினம் புதன்கிழமை வயல் விழா சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது சிறுபோகத்தில் உளுந்து பயிர்ச் செய்கையில் ஏற்படும் வைரஸ் நோய் தாக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்த முடியுமென்பது தொடர்பாகவும் இந்நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் செய்கை முறையுடன் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த வயல் விழாவில் மாகாண விவசாய பணிப்பாளர் செந்தில் குமரன் சுகந்தி, பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் யாமினி சசீலன் உட்பட மாகாண அதிகாரிகள், முல்லைத்தீவு விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பருத்தித்துறையில் சுற்றிவளைப்பு; கஞ்சா, போதை மாத்திரைகள் மீட்பு

**நாகர்கோவில் விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விநியோகிக்கப்படும் இடமொன்று இராணுவ புலனாய்வு பிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்ட போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பருத்தித்துறை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 6.20 மணியளவில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பருத்தித்துறை, புலோலி விஸ்வகுல ஒழுங்கையை அண்டி அமைந்துள்ள பற்றை இராணுவ புலனாய்வு பிரிவினரால் அவதானிக்கப்பட்டு, அப்பற்றையில் சோதனை நடத்தப்பட்டது.

இந்நிலையில் ஒரு கிலோ 200 கிராம் கேரள கஞ்சா, ஒரு வகை போதை மாத்திரைகள் கொண்ட 29 கார்ட்டுகளிலிருந்து 290 போதை மாத்திரைகள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பன மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் குழப்ப நிலை; நோயாளர் சிரமம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிலவி வரும் குழப்ப நிலையைத் தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை வைத்தியர்கள் சிலர் பணிக்கு சமூகமளிக்காமல் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டமையால் நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகினர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வைத்தியர்கள் சிலர் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர். இதனால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பெரும்பாலான வைத்திய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன், வெளிநோயாளர் பிரிவு வைத்திய சேவைகள் முற்றாக பாதிக்கப்பட்டதாக, எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த குழப்ப நிலைமை நேற்று முன்தினம் புதன்கிழமை வலுப்பெற்றதுடன், இது தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள் வைத்தியசாலைக்கு சென்று நிலைமையை அவதானித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணையை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராக ஏற்கெனவே பணியாற்றிய வைத்தியர் குமரவேள் இடமாற்றம் பெற்று சென்ற நிலையில், புதிய வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் காண்டீபன் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் அவர் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளமையால், வைத்தியசாலைக்கு பதில் வைத்திய அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# முஹர்ரம்: இஸ்லாத்தின் முதல் மாதம்

அல்லாஹ் உலகத்தைப் படைத்து மனிதன் காலங்களை கணித்துக் கொள்வதற்காக அதனை பன்னிரண்டு மாதங்களாக ஆக்கினான். இம்மாதங்களில் சிலதை விட்டும், சில நாட்களில் சிலதை விட்டும், மேலும் சில நேரங்களில் சிலதை விட்டும் வணக்க வழிபாடுகள் மூலம் சிறப்பாக்கியுள்ளான். இதன் ஊடாக மனிதன் அதிகம் நற்செயல்கள் செய்யவேண்டும் எனவும் அவனது அந்தஸ்து நற்செயல்களால் உயர்த்தப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பான மாதங்களில் முஹர்ரம் மாதமும் ஒன்றாகும்.

'வானங்களையும், பூமியையும் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளபடி மாதங்களின் எண்ணிக்கை பன்னிரெண்டாகும். அவற்றுள் நான்கு மாதங்கள் புனிதமானவை'. (அல்குர்ஆன் 9:36) எனத் திருமறை கூறுகிறது. அவை துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம், ரஜப் ஆகியனவாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'வானங்களையும் பூமியையும் படைத்தது முதல் காலம் சுழன்று கொண்டிருக்கின்றது. ஒரு வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் உள்ளன. அவற்றில் நான்கு புனிதமானவை. அதிலும் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக வரும் துல் கஃதா, துல் ஹிஜ்ஜா, முஹர்ரம் மாதங்களாகும். அடுத்தது ஜமாதுல் ஊலாவுக்கும் ஷஃபானுக்கும் மத்தியில் இருக்கின்ற ரஜப் மாதம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்த ஆதாரங்கள், புனிதமான மாதங்கள் நான்கு என்பதனைத் தெளிவுபடுத்துகின்றன. அதனால் இம்மாதங்களுக்குரிய புனிதத்துவத்தை நாம் பாதுகாக்க வேண்டும். இம்மாதங்களில் பேணவேண்டிய ஒழுங்குமுறைகளை இஸ்லாம் தெளிவுபடுத்தியுள்ளது.

முஹர்ரம் என்ற அரபுச்சொல் தடுக்கப்பட்டவை, புனிதம் என்ற பொருள்களை உள்ளடக்கியுள்ளன. அல்லாஹ் புனிதமாக்கிய மாதங்களில் ஒன்று முஹர்ரம் மாதமாகும். அதனை நபி (ஸல்) அவர்கள் நமக்கு அறிவித்துள்ளார்கள். அல்லாஹ் புனிதப்படுத்தியதைப் பேணுவது நம் கடமையாகும்.

மேலும் அல்லாஹ் அல் குர்ஆனில், 'அதில் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள்' என்றுள்ளது. (9:36).

மஸ்ஜிதுல் ஹராமில் குற்றமிழைப்பது எவ்வளவு குற்றமோ அதேபோன்று புனிதம் மிக்க மாதங்களில் தவறிழைப்பதும் குற்றமாகும். எனவே மற்ற மாதங்களை விடவும் அதிகமாகப் புனிதம் மிக்க மாதங்களைப் பேணுதலாக நடப்பது அவசியம்.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'ரமழான் மாத நோன்புக்கு பின் சிறந்த நோன்பு முஹர்ரம் மாத நோன்பு. கடமையான தொழுகைக்குப் பின் சிறந்த தொழுகை இரவுத் தொழுகை' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

முஹர்ரம் என்பது அல்லாஹ்வின் மாதம் எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் புகழ்ந்துரைத்துள்ளார்கள். இம்மாதத்திற்கென்று பல்வேறு தனிச்சிறப்புக்கள் உள்ளன. அவற்றில் இரண்டு முக்கியமானவை. ஒன்று இஸ்லாமிய வருடப்பிறப்பின் ஆரம்ப மாதம் இது. இம்மாதத்தின் முதல் நாள் இஸ்லாமிய ஹிஜ்ரி ஆண்டின் துவக்க நாளாகவும் விளங்குகிறது.

இருப்பினும் முஸ்லிம்களின் வாழ்வில் ஹிஜ்ரி கலண்டரை பயன்படுத்தும் வழக்கம் குறைந்து செல்கிறது. அதன் முக்கியத்துவமும் எம்மிடையே குறைந்து காணப்படுகின்றது. ஹிஜ்ரி கலண்டருக்கும் முஸ்லிம்களுக்குமான தொடர்பு நோன்புக்கான ஒரு மாதத்துடன் சுருங்கியுள்ளது. நோன்பை முடிவு செய்வதற்கும், பெருநாட்களைத் தீர்மானிப்பதற்கு அது தேவைப்படுகிறது. முஸ்லிம்களின் திருமண பத்திரிகைகளில் அடைப்புக்குறியில் ஹிஜ்ரி வருடம் குறிப்பிடப்படுகிறது. ஏனெனில் இது தொடர்பான விழிப்புணர்ச்சி இன்மையே இதற்கான காரணமாகும்.

நபி (ஸல்) மக்காவிலிருந்து மதீனா சென்ற ஹிஜ்ரத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் வருடக்கணக்கு கணிக்கப்பட்டுள்ளது.

இதுவே ஹிஜ்ரி என்று அழைக்கப்படுகிறது. ஆங்கில, தமிழ், சிங்கள வருடக் கணிப்புக்கள் சூரிய சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டாலும் சந்திர சுழற்சியின் மூலமாகவே முஸ்லிம்களின் வருடங்கள் கணிக்கப்படுகின்றன. இது இஸ்லாமிய வருடத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

ஆனால் அனைத்தும் 12 மாதங்களைக் கொண்டவை.

## முஹர்ரம் மாதத்தின் சிறப்புகள்

முஹர்ரம் மாதத்தின் 10ஆம் நாள் இறைத் தூதர் மூஸா (அலை) அவர்களையும் அவர்களின் சத்திய அழைப்பிற்கு செவிசாய்த்து, ஏக இறைவன் மீது நம்பிக்கைக் கொண்ட சமூகத்தினரையும் (பனூ இஸ்ரவேலர்), அவர்களை அழித்தொழிக்கப் புறப்பட்ட ஃபிர்அவ்னிடமிருந்து வல்ல இறைவன் பாதுகாத்த நாளாகும்.

அதனால் நபி (ஸல்) அவர்கள் 'ரமழான் நோன்பிற்குப் பிறகு சிறந்த நோன்பு அல்லாஹ்வுடைய மாதமாகிய முஹர்ரத்தின் நோன்பாகும்' என்று கூறினார்கள். (ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

இம்மாதத்தை அல்லாஹ்வின் மாதமாகக் குறிப்பிட்டு பெருமைப்படுத்தியுள்ள நபி (ஸல்) அவர்கள், முஹர்ரம் மாதம் 9 (தாசூஆ) மற்றும் 10 (ஆஷூரா) ஆம் நாட்களில் அனுசரிக்கப்படும் நோன்புகள் ரமழான் மாத நோன்புகளுக்கு அடுத்தபடியான சிறந்த நோன்புகளாக எடுத்தியம்பியுள்ளார்கள்.

ஒரு தடவை நபி(ஸல்) அவர்களிடம், 'ஆஷூரா நோன்பைப்பற்றி கேட்கப்பட்டது. (அதற்கு), 'சென்ற வருடத்தின் பாவங்களுக்கு (அது) பரிகாரமாக அமையும்' என்று கூறினார்கள். (ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

ஒரு வருட பாவங்களுக்குப் பரிகாரமாக விளங்கும் ஆஷூரா நோன்பு என்பது முஹர்ரம் மாதத்தின் 10ஆம் நாளைக் குறிப்பதாகும். அத்தோடு

'மூஸா (அலை) அவர்களைப் பெருமைப்படுத்துவதற்கு யூதர்களைவிட நானே அதிகத் தகுதி வாய்ந்தவன்' எனக் கூறி அவ்வருடம் முஹர்ரம் 10 நாள் நோன்பு நோற்ற நபி (ஸல்) அவர்கள், 'எதிர்வரும் வருடம் (நான் உயிருடன்) இருந்தால் ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன்' என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருந்து முஹர்ரம் 10 அன்று மட்டும் நோன்பு வைத்திருந்தாலும் அவர்களின் எண்ணத்திற்கிணைந்து 9 மற்றும் 10 ஆகிய இரு தினங்களில் ஆஷூரா நோன்பு வைக்கும் முஸ்லிம் சமூகம், அதன் பின்னணியில் உள்ள நபி (ஸல்) அவர்களின் உறுதியான சமுதாய சிந்தனை குறித்து ஆழமாகச் சிந்திப்பதில்லை.

நபி (ஸல்) அவர்கள், 'அடுத்த வருடம் உயிருடன் இருப்பின் 9 நாளும் நோன்பு வைப்பேன்' என்று ஏன் கூறினார்கள்? எப்பொழுதுமே தம்முடைய எவ்விஷயத்திலும் யூதர்களுக்கு ஒப்பாகமல் இருத்தலே நோக்கமாகும்.

எமது ஒவ்வொரு அசைவிலும் நபியவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவதுடன் எமது தனித்துவத்தையும் பாதுகாத்தல் அவசியமாகும்.

ஒவ்வொருவரும் தத்தமது அடையாளங்களையும் கலாசாரங்களையும் மார்க்க நம்பிக்கைகளையும் பாதுகாத்த நிலையில், தம்மை மற்றவர்களின் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுத்தாது அவர்களின் கலாசாரங்கள் மற்றும் மத நம்பிக்கைளை அவமதிக்காது மனிதாபிமான அடிப்படையில் அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்க வேண்டும். மற்றவர்களை எமது வணக்க வழிபாடுகளில் ஈடுபடுத்துவது மற்றும் அதற்காக அவர்களிடம் உதவி தேடுவது அவ்வாறே அவர்களுடைய வணக்க வழிபாடுகளில் எம்மை ஈடுபடுத்துவது மற்றும் அதற்காக உதவுவது போன்றவைகள் தடுக்கப்பட்டுள்ளதால் அவைகளை முற்றாக தவிர்த்துக் கொள்ளவும் தவறக்கூடாது.

ஆகவே நடப்பு வருடத்தில் செய்த பாவங்களையும் தவறுகளையும் எண்ணி மனம் வருந்தி அவற்றுக்காக அல்லாஹ்விடத்தில் மன்னிப்புக்கோரி புதியதொரு வருடத்தை ஈமானிய உணர்வுகளோடு வரவேற்று இஸ்லாத்துடன் பின்னிப்பிணைந்த வாழ்க்கைக்கான திட்டத்தைத் தீட்டிக் கொள்ள வல்ல நாயன் நம்மனைவருக்கும் அருள் பாலிக்கட்டும்.

**முப்தி ஏ.எச்.எம். மின்ஹாஜ்...**
(காஷிபி, பி.ஏ) நிந்தவூர்

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



# குடும்ப உறவுகளை பேணி வாழ்வோம்

குடும்ப உறவுகளை பேணி வாழ்வதன் மூலம் நாடப்படுவது யாதெனில் எமது பெற்றோர், உடன்பிறப்புகள், பிள்ளைகள் மற்றும் நெருங்கிய தூரத்து உறவினர்களுடன் அன்பு, பரிவு, விட்டுக்கொடுப்பு, உதவி, ஒத்தாசை, நல்ல, தீய விஷயங்களில் பரஸ்பரம் ஒத்துழைப்பு நல்குதல் ஆகியவற்றை முறையாக பேணி வருவதாகும்.

மக்கள் இயந்திர வாழ்க்கைக்குப் பழகிப்போன இக்காலத்தில் குடும்பக் கட்டமைப்பு மிக மோசமாகச் சிதறுண்டு கிடப்பதை அவதானிக்க முடிகிறது. நமது பிள்ளைகளுக்கு கூட நம் உடன் பிறந்த சகோதரன் என்ன முறை? யார்? என்று தெரியாத ஓர் அந்நியம் எம்மிடையே வியாபித்து காணப்படுகிறது. இது மறைக்க முடியாத உண்மையாகும். மகன் தந்தையுடன் பேசுவதில்லை, தாய்க்கும் மகளுக்கும் சண்டை, கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் கூட வருடக்கணக்கில் காரணமின்றி உறவறுந்து போயுள்ள துர்ப்பாக்கிய நிலை, சகோதரர்கள் முகம் சுளித்து முதுகு காட்டி செல்லும் நிலை, மூத்த உறவுகளை பிள்ளைகள் ஒருத்தருக்கொருவர் பந்தாடி அவனின் வீட்டுக்குப் போ, இவனின் வீட்டுக்குச்செல் என அலைக்கழித்து கடைசியில் வயோதிபர் மடங்களில் தள்ளிவிட்டு வரும் நிலை, அற்ப விஷயத்துக்காக சகோதரர்கள் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும் நிலை.

இவ்வாறு உறவு முறைகளைப் பகைத்து பிரிந்து வாழ்வது சர்வ சாதாரணமாகிவிட்ட காலத்தில் நாம் வாழ்கின்றோம். ஆகவே அல்லாஹ்வும் அவன் தூதர் (ஸல்) அவர்களும் உறவு முறைகளை பேணி வாழ்வதன் அவசியத்தை பல சந்தர்ப்பங்களில் எடுத்தியம்பியுள்ளனர்.

அந்த வகையில் அல்லாஹ்தஆலா தன் அருள்மறையில், 'அந்த இறை விசுவாசிகள் அல்லாஹ் சேர்ந்து வாழுமாறு கட்டளையிட்ட உறவினர்கள் விடயத்தில் அவனை அஞ்சிக் கொள்வார்கள். அல்லாஹ்வின் கடினமான விசாரணையை பயந்து வாழ்வார்கள் (சூரா றஃத் :12) என்று குறிப்பிட்டுள்ளான்.

மற்றோரிடத்தில், 'நீங்கள் புறப்பட்டு வெளியேறி சென்றால் பூமியில் குழப்பம் விளைவித்து உறவுகளை துண்டித்து விடுவீர்களோ.. அப்படிப்பட்ட அவர்களைத்தான் அல்லாஹ் சாபமிட்டு அவர்களின் பார்வைகளை குருடாக்கி செவிடர்களாகவும் ஆக்கிவிட்டான். (சூரா முஹம்மத் 22)

என்றும் அவன் குறிப்பிட்டு வைத்திருக்கிறான். அதேநேரம் நபி(ஸல்) அவர்கள், 'உறவு முறையானது அல்லாஹ்வின் அர்ஷிலே தொங்கிக்கொண்டு இவ்வாறு கூறுகிறது.. 'எனது இறைவனே.. என்னை சேர்த்து நடந்தவர்களை நீயும் சேர்த்துக் கொள்வாயாக.. என்னை துண்டித்தவர்களை நீயும் துண்டித்து விடுவாயாக... (ஆதாரம்: முஸ்லிம்).

அல்லாஹ் தனது படைப்பினங்கள் அனைத்தையும் படைத்து முடிந்தவுடன் உறவுமுறை என்னும் பந்தமானது "எனது ரப்பே.... என்னை துண்டித்து வாழ்பவர்களுக்கு நீ என்ன செய்யப் போகிறாய்" என வினவ அல்லாஹ் உன்னை துண்டித்தவர்களை நானும் துண்டித்து விடப் போகிறேன். உன்னை சேர்ந்து நடந்தவர்களை நானும் சேர்த்துக் கொள்ளப்போகிறேன் என்பதை கண்டு நீ திருப்திப்பட மாட்டாயா? அதை நான் உனக்கு வழங்குகின்றேன் என்று அல்லாஹ் எடுத்துரைத்தான். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மேலும், 'ஒரு மனிதன் புரியும் குற்றங்களுக்காக அவனை அல்லாஹ் உடனடியாகத் தண்டிப்பான் அல்லது தாமதித்து தண்டனை வழங்குவான். ஆனாலும் உலகிலே உடனடி தண்டனையையும் மறுமையில் கடும் வேதனையும் சித்தப்படுத்தி வைத்திருக்கும் பாவங்களில் உறவு முறைகளை துண்டிப்பதையும் மானக்கேடான விபசாரத்தையும் விட கடுமையானது வேறு எதுவும் இல்லை' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹ் திர்மிதி)

அல்லாஹ் கூறுவதாக நபியவர்கள் கூறி இருப்பதாவது, 'நான்தான் ரஹ்மான்.. எனும் அளவற்ற அருளாளன். ரஹ்ம் எனும் உறவு முறையை எனது ரஹ்மான் என்ற பெயரில் இருந்தே உருவாக்கியுள்ளேன். எனவே யார் உறவினர்களை நேசித்து வாழ்கிறார்களோ அவர்களை நானும் நேசிப்பேன். உறவு முறைகளை துண்டித்து நடப்போரை நானும் சிதறடித்து விடுவேன். (ஆதாரம்: ஸஹீஹ் அபூதாவுத்)

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி(ஸல்) அவர்கள், 'யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொண்டிருக்கிறாரோ அவர் பேசினால் நல்லதையே பேசட்டும் அல்லது வாய் மூடி இருக்கட்டும் அல்லாஹ்வையும் மறுமையும் விசுவாசித்த மனிதர் தனது விருந்தினரை உபசரிக்கட்டும்.. அல்லாஹ்வையும் மறுமையையும் விசுவாசித்த மனிதர் தனது குடும்ப உறவினர்களை சேர்ந்து நடந்து கொள்ளட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி).

மேலும் உறவு முறையைப் பேணுவதன் அவசியம் குறித்து குறிப்பிட்டுள்ள நபி (ஸல்) அவர்கள், ' சலாம் முகமன் கூறுவதை அதிகப்படுத்துங்கள்.. பசித்தோருக்கு உணவளியுங்கள்... உறவினர்களை சேர்ந்து வாழுங்கள்... நள்ளிரவில் மனிதர்கள் தூங்கும் வேளையில் நள்ளிரவில் நீங்கள் துயிலெழுந்து இறைவனை வணங்குங்கள்.. (இவற்றின் பொருட்டால்) பாதுகாப்பாக சுவனம் நுழைவீர்கள் எனவும் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: இப்னுமாஜா)

அத்தோடு 'உம்மில் யாராவது ஒருவர் தனது ஜீவனோபாயம் விசாலயமாக்கப்பட்டு ஆயுள் நீடிக்கப்படுவதை விரும்புவராயின் அவர் தன் உறவினர்களைச் சேர்ந்து நடந்து கொள்ளட்டும் என்றும் நபிகளார் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்).

ஆகவே இஸ்லாத்தின் நிழலில் உறவு முறைகளைப் பேணி வாழ்வதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து செயற்படுவோம்.

**மௌலவி ஏ.ஜி.எம்.ஜெலீல்...**
(மதனி) மஃஹதுஸ் ஸுன்னா அரபுக் கல்லூரி, காத்தான்குடி

# இஸ்லாம் போதிக்கும் நற்பண்புகள்

இஸ்லாத்தின் மிக முக்கிய அம்சமான நல்லொழுக்கத்தைப் பற்றியும் தெரிந்து அந்த நல்லொழுக்கத்தைதனதுவாழ்க்கையில்முழுமையாகக் கடைப்பிடித்து வாழும் போது தான் மறுமையில் உண்மையான வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் முதலில், தாங்களே நற்குணங்களையும் ஒழுக்கங்களையும் பேணி வாழ்ந்தார்கள். அவர்களுடைய நற்குணப் புரட்சி அவர்களுடைய வாழ்க்கையில் இருந்தே தொடங்கியது. அதனால் தான் அன்னார் ஒரு தடவை, 'நற்பண்புகளை முழுமையாக்குவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (நபிமொழி)



ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'அபூதரே! உனக்கு மிக உயர்ந்த இரண்டு பண்புகளை நான் சொல்லித் தரட்டுமா? இப்பண்புகள் கடைப்பிடிக்க மிக இலகுவானதுதான். சிரமம் என்று எண்ணாதே. ஆனால் நாளை மறுமையிலே உனது நற்செயல்கள் நிறுக்கப்படும்போது உனது நற்செயல்களுடைய தட்டின் எடை அதிகரிக்க மிக தகுதியானது அதுபோன்று ஒன்று இருக்காது. அவற்றில் ஒன்று நற்குணம், மற்றையது மௌனமாக இருத்தல் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: தப்ரானி)

'உங்களிடம் உண்மை இருந்தும்கூட நீங்கள் தர்க்கம் செய்வதை விட்டால் உங்களுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தின் நடுவிலே ஒரு மாளிகையைக் கட்டித் தருவான்' என்று கூறியுள்ள நபி (ஸல்) அவர்கள், தர்க்கம் செய்ய வேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்பட்டால் மிக அழகிய முறையில் தர்க்கம் செய்ய வேண்டும். இழிவான வார்த்தைகளை, உள்ளங்களைக் காயப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தாதீர்கள். ஏசாதீர்கள், திட்டாதீர்கள் என்றும் அறிவுரை கூறியுள்ளார்கள்.

மேலும் நபி(ஸல்) அவர்களுக்குப் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பணிவிடை செய்தவர் அனஸ் (ரழி) அவர்கள் அன்னாரின் ஒவ்வொரு சொல்லையும் செயலையும் அருகிலிருந்து கவனித்தவராவார். அவர், நபி (ஸல்) அவர்கள் குணங்களிலும், பண்புகளிலும் மிகச் சிறந்த உயர் தரத்தில் இருந்தார்கள். மக்களிலே அவர்களை விட அழகிய பண்புடையவர்களைப் பார்க்க முடியாது. எல்லா மக்களிலும் நபி(ஸல்) அவர்களுடைய பண்பு தனித்துவமிக்கதாக இருக்கும். அன்னார் அழகிய குணம் உடையவர்களாக இருந்தார்கள். அதன் விளைவாக அல்லாஹ், நபி(ஸல்) அவர்களை முழு மனித சமுதாயத்திற்கும் நல்லொழுக்கத்தின் அடையாளமாக ஆக்கினான்.

அல்லாஹ்வே நபிகளாரின் நற்குணங்களைப் புகழ்ந்து குறிப்பிட்டுள்ளான். 'திண்ணமாக நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் நீர் இருக்கின்றீர்.' (அல் குர்ஆன் 68:4)

எனவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய நற்பண்புகளை பேணி வாழ்வோம்.

**அபூ முஷீரா...**



# புலமைக் கதிர்

## தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**I. பின்வரும் விவரணத்தை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

மரக்கிளையினூடாக வந்த இளஞ் சூரியனின் கதிர்கள், எனது மேனியை இதமாக வருடிச் சென்றன. பறவைகளின் இனிய கானத்தினால் அப்பகுதி, முழுவதும் இசையில் மூழ்கியிருந்தது. சில்லென் வீசிய இளந்தென்றல், என்னை அன்புடன் தழுவிச் சென்றது. காட்டு மலர்கள், ஆற்றின் இரு பக்கங்களையும் எழில் செய்தன. மலரிதழ்களினாலும் மகரந்தங்களினாலும் மூடப்பட்டிருந்த தரையின் மீது எனது பாதங்கள் பதியும் போது மென்மையான பட்டுக் கம்பள விரிப்பில் நடப்பது போன்ற உணர்வு பெற்றேன். இயற்கை அன்னையின் சீதனமான இக் கண்கவர் காட்சிகளைக் கண்டு ஒரு நாளினை ஆரம்பிப்பதற்கு நான் எவ்வளவு பாக்கியசாலியாக இருக்க வேண்டுமென எண்ணினேன்.

01. இப்பந்தியில் நாள் ஒன்றின் எவ்வேளை பற்றிக் கூறப்படுகிறது? ……………………

02. இங்கு காணப்படும் உவமைத் தொடர் ஒன்றினை எழுதுக. ……………………

03. மலரிதழ்களால் அழகு பெற்றது எது? ……………………

04. ‘மூழ்கியிருந்தது’ என்ற சொல் எக்காலத்துக்குரியது? ……………………

05. இங்கு வந்துள்ள படர்க்கைப் பன்மை இறந்தகால வினைச்சொல் ஒன்று தருக.

……………………

06. கீழ்க் காலும் சுழியும் முதல் எழுத்தில் கொண்ட சொல் ஒன்றை மேலுள்ள விவரணத்தில் கண்டுபிடித்து எழுதுக. ……………………

07. கீழ்வரும் சொற்களுக்கான எதிர்கருத்துச் சொற்கள் ஒவ்வொன்று தருக.

i. புதிய - ……………… ii. பெரிய - ……………… iii. ஆரம்பம் - ………………

08. கீழ்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்கள் ஒவ்வொன்று தருக.

i. பூமி - ……………… ii. புத்தகம் - ……………… iii. பாடசாலை - ………………

**II.** கீழ்வரக்கூடிய வினாக்களில் தரப்பட்டுள்ள நான்கு சொற்களில் மூன்று சொற்கள் ஏதோ ஒரு வகையில் பொருந்தக்கூடியதாகும். அவ்வாறான சொற்களுடன் பொருந்தாத சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.

09. i. தவில் ii. மிருதங்கம் ii. மத்தளம் iv. புல்லாங்குழல்

10. i. பச்சை ii. சிவப்பு iii. மஞ்சள் iv. நீலம்

11. i. பருப்பு ii. பயறு iii. கடலை iv. அரிசி

- கீழே தடித்த எழுத்தில் காணப்படும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

12. தாயின் மடியில் குழந்தை **கண் வளர்ந்தது**. ……………………

13. பாலன் கல்வி கற்பதற்கு அவனது நண்பர்கள் **தோள் கொடுத்தனர்**. ……………………

14. மாணவனின் சாதனையைக் கேள்வியுற்ற ஆசிரியர் **உச்சி குளிர்ந்தார்.** ……………………

15. ஆண்பாற் சொற்களுக்குரிய பெண்பாற் சொற்களை எழுதுக.

i. மாணவன் - ……………… ii. அரசன் - ………………

iii. பாடகன் - ……………… iv. கணவன் - ………………

v. வீரன் - ……………… vi. குறவன் - ………………

- ஆண்பால் வாக்கியங்களைப் பெண்பால் வாக்கியங்களாகவும், பெண்பால் வாக்கியங்களை ஆண்பால் வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுக.

16. உழவன் வயலுக்குச் சென்றான். ……………………

17. மாணவி பாடம் படித்தாள். ……………………

18. மாமி வீட்டுக்கு வந்தார். ……………………

19. பின்வரும் வாக்கியத்தை கருத்துள்ள வாக்கியமாக ஒழுங்கமைத்து எழுதுங்கள்.

i. my / to / cook / I / mother / help - ……………………

ii. in / Colombo / She / lives - ……………………

**III.**

20. i. ‘பஸ் நெவதும் ஸ்தானய’ என்ற சொல்லின் பொருளை தமிழில் எழுதுக.

……………………

ii. ‘மெஹி (B)பொன வதுர திபே’ - ……………………

21. அக்காவிடமுள்ள நெல்லிக்கனிகளில் ½ பங்கை தங்கையிடம் கொடுத்தாள். தங்கையிடம் உள்ள நெல்லிக் கனிகள் 9 எனின் அக்காவிடமிருந்த கனிகளை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

……………………

22. மு.ப. 8.55 மணிக்கு புறப்பட இருந்த புகைவண்டி 15 நிமிடம் தாமதமாகி புறப்பட்டது. அது வந்தடைந்த நேரம் பி.ப. 2.40 எனின், பிரயாணத்திற்கு செலவழித்த காலம் எவ்வளவு?

………………மணி ……………… நிமிடம்

23. i. எண் கோலத்திற்கிணங்க அடுத்து வரும் எண்ணை எழுதுக. 4, 12, 20, 28, …...

ii. பின்வரும் எண்களை ஒழுங்குபடுத்தினால் நீங்க வேண்டிய எண் எது?

4, 7, 13, 19, 25, 49, ………

24. ஒரு பெட்டியில் 6 விசுக்கோத்து பக்கற்றுக்களை அடுக்கலாம். 708 விசுக்கோத்துப் பக்கற்றுக்களை அடுக்க எத்தனை பெட்டிகள் தேவை?

……………………

25. 

வட்டத்தினுள் தரப்பட்டுள்ள எண்களின் 7 இன் பெருக்கங்களைத் தெரிந்து எழுதுக.

……………………

26. குறித்த நாளொன்றில் ஒரு மணித்தியாலத்தில் வீதியால் சென்ற வாகனங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| வாகன வகை | தடவைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| பேருந்து | ///// // | 7 |
| கார் | ///// /// | 8 |
| ஆட்டோ | ///// ///// / | 11 |
| மோட்டார் சைக்கிள் | ///// ///// //// | 14 |
| லொறி | //// | 4 |

தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

i. கூடுதலாகச் சென்ற வாகனம் எது? ……………………

ii. குறைவாகச் சென்ற வாகனம் எது? ……………………

iii. வீதியால் சென்ற கார்கள் எத்தனை? ……………………

iv. மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கைக்கும் லொறிகளின் எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் யாது? ……………………

27. சாக்கு ஒன்றில் 23kg நெல் உள்ளது. அதனுள் மேலும் 15kg 650g நெல் இடப்பட்டது. தற்போது சாக்கில் உள்ள நெல்லின் அளவு யாது?

……………………

28. 10kg கொள்ளக்கூடிய பாத்திரத்தில் 5kg 350g பருப்பு உள்ளது. பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் தேவையான பருப்பின் அளவு யாது?

……………………

29. i. இத்திண்ம உருவின் பெயர் யாது? ……………………

ii. இதன் முகங்களின் வடிவம் யாது? ……………………

iii. முகங்களின் எண்ணிக்கை யாது? ……………………

iv. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ……………………

v. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ……………………



**IV. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்ட குளம்
i. கலா வாவி ii. மின்னேரியாக் குளம் iii. திசாவாவி

31. பக்கற்றில் உள்ள பாலைப் பயன்படுத்துவதற்கு முன்னர் கவனிக்க வேண்டியுள்ளது,
i. உற்பத்தி திகதி ii. விற்பனைப் பெயர் iii. காலாவதியாகும் திகதி

32. சைக்கிளின் பின்புறச் சேறுதடுப்பானில் சிவப்பு நிற ஒளித்தெறியி பொருத்தப்பட்டிருப்பதன் காரணம்
i. இரவில் பின்புறம் வரும் வாகனங்களுக்கு தெரிய வேண்டுமாதலால்
ii. இரவில் நடந்து செல்பவர்களின் பாதுகாப்புக்காக
iii. பாதையின் குறுக்காக செல்பவர்களின் பாதுகாப்புக்காக

33. இலங்கையில் அதிகளவில் மலைகள் இருப்பது
i. வடமாகாணம் ii. மத்திய மாகாணம் iii. கிழக்கு மாகாணம்

34. இலங்கையின் மிகப்பெரிய வனாந்தரமாகிய ‘படகமுவ’ அமைந்திருக்கும் மாவட்டம்
i. அநுராதபுரம் ii. குருணாகல் iii. பதுளை

35. தேசிய கொடியைச் சுற்றி வரையப்பட்டுள்ள மஞ்சள் நிறக்கோடு குறிப்பது
i. கொடியின் அழகை ii. தேசிய ஒற்றுமையை
iii. நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றுள்ளமையை

36. இரவு நேரத்தில் பிரயாணம் செய்யும் போது அணிவதற்குப் பொருத்தமான நிறம்
i. கறுப்பு ii. சிவப்பு iii. வெள்ளை

37. இந்தப் படத்தில் B எழுத்தினால் குறித்துக் காட்டப்படுவது
i. தங்குதன்
ii. இழை
iii. கண்ணாடி




38. பாடல் இசைக்கும் போது சுருதியைப் பெற்றுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்
i. வயலின் ii. தம்புரா iii. பியானோ

39. சமாதி புத்தர் சிலை எதனால் செய்யப்பட்டுள்ளது?
i. களிமண் ii. சீமெந்து iii. கருங்கல்

40. புனித பைபிள் எந்த சமயத்தாருக்குரிய புனித நூலாகும்?
i. இந்து ii. கிறிஸ்தவம் iii. இஸ்லாம்

41. பச்சை நிறத்தைப் பெறுவதற்கு சேர்க்க வேண்டிய நிறங்கள்
i. மஞ்சள் - கறுப்பு ii. மஞ்சள் - நீலம் iii. சிவப்பு – கறுப்பு

42. மயக்கம் ஏற்பட்ட ஒருவருக்கு செய்யக்கூடிய முதலுதவி
i. நீரைப் பருக்குதல்
ii. தலையை கீழ் நோக்கி சரித்து வைத்தல்
iii. செயற்கை சுவாசம் வழங்குதல்

(11ஆம் பக்கம் பார்க்க)

# அமரர் இரா.சம்பந்தனின் பூதவுடலுக்கு யாழ்ப்பாணத்தில் இறுதி அஞ்சலி











(10 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

43. சிக்கன் குன்யா நோயை பரப்புவது
i. நுளம்பு ii. கோழி iii. பன்றி

44. 
படத்தில் காட்டப்பட்டுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம்
i. சீகிரியா
ii. எம்பக்கை
iii. யாப்பகூவ

45. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழைப் பெறுவதற்கு முதலில் செல்ல வேண்டியது,
i. பொலிஸ் நிலையம் ii. கிராம அலுவலகர் iii. பிரதேச செயலாளர்

46. முள்முருக்கு பூக்கும் மாதம்
i. பங்குனி ii. சித்திரை iii. ஆனி

47. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலையாக அமையாதது
i. வல்லாரை ii. சிறுநாரத்தை இலை iii. கோப்பை இலை

48. தனது ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி
i. கடலாமை ii. மரவட்டை iii. அட்டை

49. இலங்கைக்கேயுரிய முலையூட்டி விலங்கு அல்லாதது
i. சுண்டெலி ii. மரநாய் iii. மரத்தேரை

50. நரி, குரங்கு ஆகியன கடிப்பதன் மூலம் ஏற்படத்தக்க ஒரு நோய்
i. விசர்நாய்க்கடி நோய் ii. யானைக்கால் நோய் iii. கழிச்சல் நோய்

51. வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச் செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் வருவதை தடுப்பதற்கு வளர்க்கப்படும் தாவரம்
i. துளசி ii. நாயுண்ணி iii. செவ்வந்தி

52. காற்றின் மூலம் பரம்பல் அடையும் தாவரம்
i. மரமுந்திரிகை ii. தேக்கு iii. எருக்கலை

53. பின்வருவனவற்றுள் வளி அதிர்வின் மூலம் ஒலியைக் கடத்தும் கருவி
i. வயலின் ii. நாதஸ்வரம் iii. தம்புரா

54. நன்றாகக் காய்ச்சிய இரும்பை எடுப்பதற்குப் பயன்படும் உபகரணம்,
i. இடுக்கி ii. துருத்தி iii. தீதாள்

55. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் முதற்பருவம் எது?
i. குடம்பி ii. கூட்டுப்புழு iii. பேத்தை

56. முதலுதவிப் பெட்டியில் இருக்க வேண்டியது,
i. பஞ்சு ii. பிளாஸ்ரர் iii. மேற்கூறிய எல்லாம்

57. இரசாயனக் கலவையற்ற ஓர் பான வகை
i. பக்கற்றில் அடைக்கப்பட்ட பால் ii. இலைக்கஞ்சி
iii. சுப் கட்டி

58. நற்சான்றிதழ், மின் இணைப்பு என்பனவற்றைப் பெற்றுக் கொள்ள செல்ல வேண்டிய இடங்கள்
i. கிராம சேவையாளர் அலுவலகம், இலங்கை மின்சார சபை
ii. இலங்கை மின்சார சபை, பிரதேச செயலகம்
iii. கிராம சேவையாளர் அலுவலகம், பிரதேச செயலகம்

59. சூரிய ஒளி குறைவான வேளைகளில் சுருங்கும் தாவரம்
i. தேக்கு ii. தாமரை iii. அகத்தி

60. "வாசிப்பதால் வாழ்வில் வெற்றி பெறுவோம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

### கடந்த வார (28.06.2024) வினாத்தாள் l இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 2 | 21. 2 | 31. 3 |
| 02. 1 | 12. 1 | 22. 2 | 32. 2 |
| 03. 2 | 13. 2 | 23. 3 | 33. 2 |
| 04. 1 | 14. 2 | 24. 2 | 34. 2 |
| 05. 3 | 15. 2 | 25. 2 | 35. 3 |
| 06. 1 | 16. 3 | 26. 1 | 36. 2 |
| 07. 1 | 17. 1 | 27. 3 | 37. 1 |
| 08. 1 | 18. 3 | 28. 2 | 38. 75km |
| 09. 3 | 19. 2 | 29. 1 | 39. 2 |
| 10. 2 | 20. 3 | 30. 2 | 40. 3 |

# கிழக்கின் குரல்



## முஷாரப் எம்.பியுடன் இணைந்து கொண்ட முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள், உப தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் அவர்களுடன் ஜனாதிபதியின் ஆலோசகரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்சா முன்னிலையில் திங்கட்கிழமை (01) இணைந்து கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும், அந்த புதிய அரசியல் மாற்றமே நாட்டின் தற்போதைய முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவும் என்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் அவர்களுடன் நாங்கள் இணைந்துள்ளதாக முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜே. கலீலுர் ரஹ்மான், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் ஏ.எம். ஜாஹிர், அ.இ.ம.க கட்சியின் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். சிபான் நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.கே. சமட், அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எம்.எம். சஹீல், திருக்கோவில் பிரதேச சபையின் உப தவிசாளர் விக்னேஸ்வரன் மற்றும் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் ஆகியோரே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் அவர்களுடன் இணைந்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை

## அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி திருக்கோயிலின் கொடியேற்றம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி (சிவன்) தேவஸ்தான வருடாந்த மகோற்சவமானது (03) கொடியேற்றத்துடன் பக்தர்களின் பேராதரவுடன் ஆரம்பமானது.

கிரிஜைகளுடன் ஆரம்பமாகிய உற்சவத்தில், ஜூலை (11) ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் ஜூலை (12) ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெற திருவருள் கூடியுள்ளது. தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் விசேட பூஜைகளும் வெளிவீதி வலம்வருதலும் இடம்பெறும்.

திருவிழா காலங்களில் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

## மகா கும்பாபிஷேகம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு திருப்பழுகாமம் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய வீதியில் அமைந்துள்ள கண்ணகியம்மன், வைரவர் ஆலயங்களின் புனராவர்த்தன அஷ்ட பந்தன ஏக குண்ட பசஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பூர்வாங்க கர்மாரம்பம் 04 ஆம் திகதி ஆரம்பமாகியது. பக்தர்கள் பாற்காப்பு வைக்கும் நிகழ்வு 06 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட வர்த்தகர் 59 பேருக்கு நீதிமன்றங்களினால் 2,20,500 ரூபாய் அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 59 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 02 இலட்சத்தி 20 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 100 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 59 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு 02 இலட்சத்தி 20 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதி மன்றிங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

அத்தியவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

அத்தியவசிய பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ம் இலக்கத்திற்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு அறிவித்துள்ளார்.

## மிளகாய்த்தூளில் கலப்படம் செய்தவருக்கு அபராதம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேசத்தில் மிளகாய்த் தூளுக்குள் அரைத்த மா முப்பது சதவீதமும், உப்பும் கலந்து நிற மாற்றம் செய்த குற்றத்திற்காகவும், கலப்படம் செய்து விற்ற பொருளைக் காட்சிப்படுத்திய குற்றத்திற்காகவும் உணவுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளை மீறிய வியாபாரியான குற்றவாளிக்கு அக்கரைப்பற்று மாவட்ட நீதவான் நீதிமன்றம் அபராதம் அளித்துள்ளது.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற கௌரவ நீதவான் குறித்த குற்றவாளிக்கு புதன்கிழமை (03) இருபதினாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்ததோடு, பொதுமக்களை ஏமாற்றம் செய்கின்ற இவ்வாறான நடவடிக்கைகளை இனி வரும் காலங்களில் செய்யக்கூடாது என்று எச்சரிக்கையை அவருக்கு நீதிமன்றம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## உயர் கல்வி திட்டங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி சேவைகள் சம்பந்தமான கலந்துரையாடல்



**பாலமுனை தினகரன் நிருபர்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகார பணிப்பாளரும், மெட்ரோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப்புக்கும் மாலைதீவு நாட்டின் முன்னாள் அமைச்சர்களான மரியம் சகிலா மற்றும் சிஹாதா ஸரீப் ஆகியோர்களுக்கிடையிலான சினேகபூர்வ சந்திப்பு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

இருநாடுகளுக்குமிடையிலான சமூக சேவைகள், அபிவிருத்தி மற்றும் உயர்கல்வி திட்டங்கள் தொடர்பிலான பல்வேறுபட்ட விடயங்கள் இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பொருளாதார ரீதியாக எதிர் நோக்கும் சவால்கள், வாழ்வாதார பிரச்சினைகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டு எதிர் காலத்தில் குறித்த கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்துவதாகவும் மாலைதீவு பிரமுகர்கள் கூறினர்.

## மாகாண மட்டத்திற்குத் தெரிவான மாணவன்



மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) தற்பொழுது தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவன் சுதாகரன் ரேஷ்மன் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் பங்குபற்றி மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்.

இவரது தந்தை பொறியியலாளரும், தாயார் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் செயற்றிட்ட உதவியாளரும் ஆவர். இம்மாணவன் இதுவரை எந்தவொரு பாடத்திற்கும் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லாதவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையிலிருந்து மொத்தமாக பத்து மாணவர்கள் மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

## கிழக்குப் பல்கலைக்கழகம் - CICL இணைந்து செயற்படுத்திய பூஸ்ட்டர் கிராண்ட் விழா

### கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மற்றுமொரு மைல்கல்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியற்துறையானது கைத்தொழில் மற்றும் சமூக இணைப்பு மையத்துடன் (CICL) இணைந்து செயற்படுத்திய பூஸ்ட்டர் கிராண்ட் செயற்திட்டத்தின் (Booster Grant Project) விழா கிழக்குப் பல்கலைக்கழகத்தில் (02) நடைபெற்றது.

ஆசிய பசுபிக் மெப்பிங் ஹப் (Asia Pacific Mapping HUB) அமைப்பின் நிதி ஒதுக்கீட்டில் நடைபெற்ற இவ் விழாவில், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர். வல்லிபுரம் கனகசிங்கம் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதி உப வேந்தர் கலாநிதி. த.பிரபாகரன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

புவியியற் துறையின் தலைவரும் செயற்திட்ட இணைப்பாளருமான தவப்பிரபா சச்சிதானந்தமின் வரவேற்புரை மற்றும் தலைமையுரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் சமூக இணைப்பு மையத்தின் (CICL) பணிப்பாளர் ஆரம்ப உரையை நிகழ்த்தினார்.

இதன் போது செயற்திட்டத்தின் செயற்பாடுகள், அது கடந்து வந்த பாதை என்பன தொடர்பான அனைத்து விடயங்களும் புவியியற் துறைப் பேராசிரியர் கந்தையா ராஜேந்திரம் தெளிவுபடுத்தினார்.

இந்த செயற்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 39 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் நவீன தொழிநுட்பத்தினை உள்ளடக்கிய openstreetmap ஊடாக தயாரிக்கப்பட்ட படங்கள் (maps) மட்டக்களப்பு மாவட்ட உப அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

அத்துடன் கிழக்குப் பல்கலைக் கழகத்தினுடைய படங்கள் (maps) மற்றும் வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்கள் என்பன இந்நவீன தொழில்நுட்பத்தினூடாக படமாக்கப்பட்டு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

அத்துடன் இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய தொகுப்பு, OpenStreetMap சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய சஞ்சிகை, GeoMap VistaEUSL என்ற வலைத்தளம் ஆகியன இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்திட்டத்தினால் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிவோர்கள், அரசாங்க உத்தியோகத்தர்களான நீர்ப்பாசன திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச செயலகங்கள், நகரசபை போன்றவற்றின் உத்தியோகத்தர்கள், விவாசாய போதனாசிரியர்கள், ஊழியர்கள் ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு OpenStreetMapனூடாக படங்கள் தயாரிக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அத்துடன் இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களான சப்ரகமுவ, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, தென்கிழக்கு. ரஜரட்ட மற்றும் களனி ஆகிய பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்குமான பயிற்சிகள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியற் துறையினால் நடாத்தப்பட்டது.

இவ்விழாவில் இம்முன்னணி பல்கலைக்கழகங்களிலிருந்து பயிற்சியை பெற்றுக்கொண்ட மாணவர்களும் அவர்களுக்கு வழிகாட்டிய பேராசிரியர்களும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து வழங்கப்பட்ட பயிற்சி தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் இச்செயற்திட்டத்தினூடாக சமூகத்திற்கு வழங்கிய உன்னதமான சேவையையிட்டு வழிநடாத்திய உபவேந்தர் உட்பட கைத்தொழில் மற்றும் சமூக இணைப்பு மையத்தின் (CICL) பணிப்பாளர், புவியியல் துறையின் தலைவர் LUL நிர்வாகிகள் மற்றும் புவியியல் துறையின் இச்செயற்திட்டத்தினை முன்னெடுத்த அனைவரையும் பாராட்டினார்.

இப்பயிற்சியை பெற்றுக்கொண்டதனூடாக படங்களை தயாரித்து உயர் பங்களிப்பினை வழங்கிய (High contributor) மாணவர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் புவியியற்துறையினால் செயற்படுத்தப்பட்ட முக்கியமான மைல்கல் நிகழ்வாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீதி திறந்துவைப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



பெரியாற்றுமுனை கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெரியாற்றுமுனை கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு பிற்பகுதியில் இணைக்கப்படாமல் இருந்த வீதியானது பெரியாற்றுமுனை கராச்சை வீதி உடன் இணைக்கப்பட்ட வீதிக்கான திறப்பு விழா (02) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

18 வருடத்திற்கு மேலாக இவ்வீதியின் தேவைப்பாட்டின் காரணமாக மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்திருந்த சந்தர்ப்பத்தில் பெரியாற்றுமுனை கிராம அபிவிருத்தி சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட முயற்சியினால் பெரியாற்றுமுனை கிராம அபிவிருத்தி சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் இவ்வீதியானது அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பெரியாற்றுமுனை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மற்றும் பெரியாற்றுமுனை கிராம அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட பொதுமக்களும் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்

## அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் பாராட்டி கௌரவிப்பு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளராக அர்ப்பணிப்பாக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் பிரதம பொறியியலாளர் யூ.கே.எம். முஸாஜித் அவருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு, பிராந்திய முகாமையாளர் காரியாலய உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று ரீ.எப்.சீ மண்டபத்தில் சிரேஷ்ட பொறியியலாளர் பி.மயூரதன் தலைமையில் புதன்கிழமை (03) நடைபெற்றது. பொத்துவில் தொடக்கம் மத்தியமுகாம் வரையான அக்கரைப்பற்று பிராந்தியத்தில் உள்ள மூவின மக்களுக்கும் இலங்கையில் ஏற்பட்ட கொவிட்19 அசாதாரண காலப்பகுதி மற்றும் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலையில் கூட பொதுமக்களுக்கு எவ்வித தடையும் இன்றி தொடர்ச்சியாக நீரையை வழங்கியதோடு, சுத்தமான குடிநீரை இம்மக்கள் அருந்த வேண்டும் என்ற நோக்கில் பொதுமக்களின் தேவையறிந்து புதிய நீரிணைப்புக்களை இரவு பகலாக சக உத்தியோகத்தர்களுடன் இணைந்து வழங்கி, அவர்களின் பெரும் வரவேற்பை பெற்றவராவார். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் டீ.ஏ.பிரகாஷ், புதிய பிராந்திய முகாமையாளர் ஐ.எல். ஹைதர் அலி, பொறியியலாளர்கள், வாணிப உத்தியோகத்தர், கணக்காளர், சமூகவியலாளர், பொறியியல் உதவியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பிராந்திய முகாமையாளரின் சேவையை பாராட்டி பிரதம அதிதியினால் பொன்னாடை போர்த்தி, ஞாபக சின்னம் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சீனன்கோட்டை அக்கரகொடை ஷாதுலிய்யா ஸாவியாவில்

# ஆத்மீகஞானி முஹம்மத் ஸாலிஹ் (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்த மஜ்லிஸ் நாளை



பள்ளிவாசலின் பழைய தோற்றம்


கலீபதுல் குலபா


அல் ஹாஜ் ஏ.எச்.எம். முக்தார் (பள்ளிச்சங்கத் தலைவர்)


கலீபதுஷ் ஷாதுலி இஹ்ஸானுத்தீன் (நளீமி)


மர்ஹூம் அல்ஹாஜ் லஹீர்

பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தை (அக்கரகொடை) தாஜூல் மபாஹிரிய்யா ஷாதுலிய்யா, ஸாவியாவில் இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்கா வை அறிமுகப்படுத்திய ஆத்ம ஞானி முஹம்மத் ஸாலிஹ் (ரஹ்) பெரிய மௌலானா ஞாபகார்த்த மஜ்லிஸ் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எம்.செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நாளை (6) சனிக்கிழமை மாலை நடைபெறுவதுடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்று குழு உறுப்பினரும் சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளருமான அல்ஹாஜ் அஷ் செய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) விசேட பேச்சாளராக கலந்து கொள்வார். இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இன்றைக்கு சுமார் 150 வருடங்களுக்கு முன் காலஞ்சென்ற காயல்பட்டணம் சங்கைக்குரிய செய்குனா அல்லாமா முஹம்மது அபூபக்கர் மிஸ்கீன் ஸாஹிப் (நுஸ்கிய்யி) காலஞ்சென்ற நாயகம் முஹம்மது சாலிஹ் பெரிய மௌலானா ஆகியோரினால் பேருவளை பகுதியில் ஷாதுலிய்யா தரீக்கா ஆன்மீக வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.


பள்ளிவாசலின் தற்போதைய தோற்றம்

இலங்கையில் ஷாதுலிய்யா கோட்டை என வர்ணிக்கப்படும் சீனன்கோட்டையில் உள்ள அக்கரகொட ஸாவிய்யா சுமார் 130 வருடங்களுக்கும் கூடிய சரித்திரம் கொண்ட ஷாதுலிய்யா ஸாவியாவாகும். இங்கு தான் ஷாதுலிய்யா தரீக்கா சீனன்கோட்டைக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. யெமன் நாட்டிலிருந்து வந்த அஷ்ஷெய்கு முஹம்மது சாலிஹ் யெமனி (ரஹ்) இந்த ஸாவியாவில் தங்கி இருந்து தரீக்காவின் அனுஷ்டானங்களை அறிமுகப்படுத்தினார். அன்று முதல் சீனன் கோட்டை மூத்த பெரியார்கள் அனைவரும் இவ்வழிமுறையை மிக ஆவலுடன் ஏற்று நடைமுறைப்படுத்தினார்கள். பெரிய மௌலானா ஒரு மாபெரும் சட்ட மேதை. புனித மக்கா நகரில் சிறந்த ஹதீஸ் கலை நிபுணராக ஆயிரம் ஹதீஸ்களை மனனம் செய்திருந்த ஒரு மகான். ஜித்தாவின் காழி பிரபல நீதிபதி, கௌதுநாயகம் பரம்பரையில் உதித்தவர்.

அப்போது பாஸி நாயகம் தம்மை இப்போது ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் எமது தரீக்கா விடங்களில் சேர்ந்து விரைவில் நமது பிரதிநிதிகளில் ஒருவராக மாறிவிடுவார்கள் என்று பகிர்ந்தார்கள்.

ஒரு நாள் இரவு பெரிய மௌலானா கனவில் அன்னவர்களின் பாட்டனார் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (றழி) தோன்றி 'நீர் பாஸி ஆண்டகை' என உத்தரவிட்டார்கள். அக்கணமே அவர்கள் பாஸி நாயகத்திடம் சென்று தீட்சை பெற்று அவர்களின் கலீபதுல் குலபா பிரதிநிதியாக ஆனார்கள். அன்னார் இந்தியாவிலும் இலங்கையிலும் பல பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்து ஷாதுலிய்யா தரீக்காவை பரப்பினார்கள். மக்கள் மத்தியில் இந்த தரீக்காவை பற்றி சிறந்த விளக்கம் அளித்து வழிகாட்டியது மட்டுமல்லாது பற்பல ஊர்களில் ஷாதுலிய்யா ஸாவிய்யா உருவாவதற்கு காரண கர்த்தாவாகவும் விளங்கினார்கள்.

இத்தகைய தரீக்கா பெரியாரின் முயற்சியால் தோன்றியது தான் அக்கரகொடை ஷாதுலிய்யா ஸாவியா என்பது குறிப்பிடத்தக்கது. தரீக்காக்களை உருவாக்கிய ஆத்மீக ஞானிகள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக அரும் பெரும் தியாகங்களைச் செய்த அதே சமயம் இஸ்லாத்திற்கு ஆபத்து ஏற்பட்ட போதெல்லாம் யுத்த முனைகளுக்கு கூடச் சென்று புனித ஜிஹாதில் ஈடுபட்டு இஸ்லாத்திற்கு புத்துயிர் கொடுத்தார்கள். இஸ்லாத்திற்காக தமது உடல்,பொருள் உயிர்களை தியாகம் செய்த ஆத்மீக ஞானிகளை கௌரவிப்பதும், அவர்கள் காட்டிய உண்மையான நேரான வழியில் நடப்பதும் எமது கடமையாகும். தரீக்காக்கள் அனைத்தும் அல்குர்ஆன், அல் ஹதீஸ் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகும். குதுபுல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ்ஷாதுலி (றழி) அவர்களினால் இன்றைக்கு 850 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட ஷாதுலிய்யா தரீக்கா வழிமுறை இன்று உலகளாவிய நிலையில் பல நாடுகளில் முஸ்லிம்களால் பின்பற்றப்படுகிறது.

இந்த ஸாவியாவை அமைக்க மர்ஹூம் அப்துல் அஸீஸ் மரிக்கார் காணியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

ஆரம்பத்தில் சிறிய அளவில் இருந்த அக்கரகொட ஸாவிய்யா 1935 ஆம் ஆண்டளவில் மர்ஹூம் அஷ் செய்கு முஹம்மது பாஸி பின் முகம்மது இப்ராஹிம் பின் அஷ் செய்கு ஸம்ஸுதீன் முஹம்மதுல் மக்கியுல் பாஸியதுஷ்ஷாதுலி (ரஹ்) அவர்களின் அனுமதிப்படி கலீபத்துஷ்ஷாதுலி மர்ஹூம் பி.ஏ. அப்துல்காதிர் ஆலிம் தலைமையில் புர்தா கந்தூரி சபையில் ஸாவியாவை விஸ்தரிக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கமைய அமைய விஸ்தரிக்கப்பட்டது.

இப்பணியில் கலீபதுஷ்ஷாதுலி மர்ஹூம் பி.ஏ.அப்துல் காதர் ஆலிம், மர்ஹூம் கலீபதுஷ்ஷாதுலி ஏ.ஸீ.ஏ.முஹம்மது ஹனிபா ஆலிம், மர்ஹூம்களான ஓ.எல்.எம்.ரபாய், டபிள்யு.எம்.அஹமது இஸ்மாயில், எம்.எல்.எம்.ஏ.கபூர், ஓ.எல்.எம்.ஷெய்கு மீரா லெப்பை, எம்.எஸ்.அபூபக்கர்லெப்பை, ஏ.சி.எம்.ஸாலி, ஐ.எல்.எம்.சம்சுதீன், எம்.எல்.எம்.அப்துர் ரஹ்மான், சீ.ஏ.வாஹித், எம்.காலித் இஸ்மாயில், எஸ்.எம். அப்துல் காதிர் ,டபிள்யூ.எம்.அப்துல் மஜீத், எம்.எல்.ஏ.மஜீத், எம்.எல்.எம்.ஐ.மரிக்கார், டபிள்யூ.எம். முஹம்மது லெப்பை, ஒ.எல்.எம்.அலியா மரிக்கார், எம்.ஐ.எம்.அப்துர் ரஹீம், எஸ்.எம்.எம்.முஹம்மது இப்ராஹிம், சீ.எம்.முஹம்மது ஹனீபா, எம்.எல்.எம்.அபூபக்கர், பி.எல்.இப்ராஹீம் லெப்பை, வை.எல். அப்துல் லதீப் ஆகியோர் ஈடுபட்டு ஸாவியாவை சிறப்பாக நிர்மாணித்து முடித்தார்கள்.

பின்னர் 1975 ஆம் ஆண்டளவில் கொடை வள்ளல் மர்ஹூம் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் தலைமையில் ஊர் மக்களின் அமோக பங்களிப்புடன் அழகான முறையில் இந்த சாவியா புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஸாவியாவை அமைத்த காணி வழங்கிய மர்ஹூம் அப்துல் அஸீஸ் மரிக்காரின் புதல்வரான மர்ஹூம் அல்ஹாஜ் முஹம்மத் லஹீர் ஸாவியாவுக்கு அருகாமையில் உள்ள தனது காணியின் ஒரு பகுதியை (தாஜுல் மபாஹிரிய்யா மத்ரஸா அமைக்கப்பட்டுள்ள இடத்தை அன்பளிப்புச் செய்துள்ளார்) இத் தூய பணியை செய்த இவர் 2017இல் புனித உம்ராக் கடமையை மேற்கொண்டு நாடு திரும்ப இருந்த நிலையில் புனித மதீனாவில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. 2017 டிசம்பர் 31ஆம் திகதி அஸர் தொழுகையின் பின்னர் இவரது ஜனாஸா ஜென்னத்துல் பக்கி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.இந்த ஸாவியாவில் அன்று முதல் ஆன்மீக ஞானி முஹம்மது ஸாலிஹ் பெரிய மௌலானா (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்த கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் இடம் பெற்று வருகிறது.

இந்த மஜ்லிஸை சிறப்பாக நடத்துவதில் ஸாவியாவை நிர்வகித்த முன்னாள் கமிட்டி உறுப்பினர்கள், தற்போதைய உறுப்பினர்கள், சீனன் கோட்டை பள்ளிச் சங்கம், பிரதேச இஹ்வான்கள் மற்றும் சீனன் கோட்டை இஹ்வான்களின் பங்களிப்பு மகத்தானது.

இவர்களை நன்றியுடன் நினைவு கூர வேண்டும். அத்தோடு சாதுலிய்யா தரீக்கா பணியை இந்த ஸாவியாவில் முன்னெடுக்க அயராது பாடுபட்ட மர்ஹூம் முகத்தமுஷ்ஷாதுலி அல்ஹாஜ் முஹம்மது ரவூப் ஜே.பி. அவர்களின் பங்களிப்பையும் நினைவு படுத்துகிறோம்.

சீனன் கோட்டைத் பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம்.முக்தார் ஹாஜியார், ஸாவியா நிர்வாக கமிட்டி முன்னாள் தலைவர் மர்ஹூம் மர்ஸூக் ஹாஜியார் இவர்களோடும் அதற்கு முன்னரும் ஸாவியாவை நிர்வகித்த உறுப்பினர்கள் உட்பட பெயர் குறிப்பிடாத அனைத்து பிரதேச முக்கியஸ்தர்களையும் நினைவு கூருகின்றோம்.

இந்த ஸாவியா அமைவதில் பங்களிப்புச் செய்த அத்தனை இஹ்வான்களினதும் தூய்மையான நற்பணிகளை அல்லாஹ் அங்கீகரிப்பானாக ஆமீன்!

**பேருவளை விசேட நிருபர்**


பலஸ்தீனின் ஜெரூஸலத்திலுள்ள முஸ்லிம்களின் மூன்றாவது புனித தளமாகவும் முதலாவது கிப்லாவாகவும் (தொழுகைக்காக முன்னோக்கும் தளம்) விளங்கும் பைத்துல் முக்கதிஸின் இமாம் ஷெய்க் அலி ஒமர் அல் அப்பாஸி இலங்கைக்கு வருகை தந்திருந்த போது பலஸ்தீனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் பௌஸான் அன்வரின் ஏற்பாட்டில் கொழும்பு ஸாஹிரா கல்லூரிக்கு விஜயம் செய்தார். அச்சமயம் அவர் பாடசாலையின் அதிதிகள் பதிவேட்டில் கையெழுத்திடுவதையும் அருகில் கல்லூரி அதிபர் தெல்வின் மரிக்கார், முன்னாள் தூதுவர் அன்வர், ஷாரா பவுண்டேசன் தலைவர் பஸால் ஜிப்ரி, ஆளுநர் சபை உறுப்பினர் அஷ்ரப் ஸுபைர், மௌலவி ஹக்கீம் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.


அவிசாவளை புவாக்பிட்டிய வெற்றி பாலர் பாடசாலையின் கலை விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# விலைமனுக்கோரல்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### இலத்திரனியல் - காணி கருத்திட்டத்தின் கீழ் காணிப் பதிவகங்கள் 17 இன் மடிதாள்களை (folio) வருடி எடுத்தல் (Scanning) - 2024

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டின் இலத்திரனியல் - காணி கருத்திட்டத்தின் கீழ் காணிப் பதிவகங்கள் 17 இன் மடிதாள்களை (folio) வருடி எடுப்பதற்காக (Scanning) திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரால் 2024.07.26 ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02 விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் காணிப் பதிவு அலுவலகங்களின் மடிதாள்களை (folio) வருடி எடுப்பதற்காக விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

| தொ. இல | அலுவலகம் | வருடி எடுக்க வேண்டிய பக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அநுராதபுரம் காணிப் பதிவகம் | 590,450 |
| 02 | அத்தனகல்ல காணிப் பதிவகம் | 140,930 |
| 03 | அவிசாவளை காணிப் பதிவகம் | 86,040 |
| 04 | பதுளை காணிப் பதிவகம் | 798,600 |
| 05 | மட்டக்களப்பு காணிப் பதிவகம் | 650,000 |
| 06 | சிலாபம் காணிப் பதிவகம் | 346,300 |
| 07 | தெல்கந்தை காணிப் பதிவகம் | 143,105 |
| 08 | எல்பிட்டிய காணிப் பதிவகம் | 90,640 |
| 09 | எம்பிலிபிட்டிய காணிப் பதிவகம் | 334,950 |
| 10 | கம்பஹா காணிப் பதிவகம் | 450,000 |
| 11 | ஹம்பாந்தோட்டை காணிப் பதிவகம் | 36,100 |
| 12 | ஹோமாகம காணிப் பதிவகம் | 119,550 |
| 13 | ஹொரண காணிப் பதிவகம் | 735,900 |
| 14 | யாழ்ப்பாணம் காணிப் பதிவகம் | 206,456 |
| 15 | கடுவளை காணிப் பதிவகம் | 98,244 |
| 16 | களுத்துறை காணிப் பதிவகம் | 77,420 |
| 17 | பொலனறுவை காணிப் பதிவகம் | 120,750 |

03. விலைமனு ஆவணங்களை 2024.07.25 ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை மீளளிக்கப்படாத ரூபா. 15,000 கட்டணத்தைச் செலுத்தி இந்தத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் சிறாப்பரிடமிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கணக்காளரிடம் (வழங்கல்) சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். அவரது தொலைபேசி இலக்கம் 011- 3070870 ஆகும் தேவையெனின் கட்டணம் இன்றி இந்த அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்க முடியும்.

04 விலைமனு முன்சந்திப்பொன்று விலைமனுதாரர்களுடன் 2024.07.12 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும்.

05. பூரணப்படுத்திய விலைமனு ஆவணங்களை விலைமனு நிபந்தனைகளுக்கு அமைய ரூ.930,000 பெறுமதியான விலைமனு காப்பீட்டுடன் 02 பிரதிகளில் முத்திரையிட்டு 2024.07.26 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடவோ அல்லது பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகம் பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விலைமனுவை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலத்திரனியல் காணி

கருத்திட்டத்தின் கீழ் காணிப் பதிவகங்கள் 17 இன் மடிதாள்களை (folio) வருடி எடுத்தல் (Scanning) 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. 2024.07.26 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் அதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்**
**கொள்முதல் குழுத் தலைவர்**

**பதிவாளர் நாயகம்,**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்,**
**இல 234/ஏ3,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை**
**பத்தரமுல்ல**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

NW HX-5488 HYUNDAI SONATA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044305

WP JD-8771 KIA SPECTRA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044300

WP KT-6121 MICRO PANDA CROSS CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044297

### 108 நிஸான் கார் விற்பனைக்கு

301-2845 NISSAN PRESEA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044285

### 117 வேன்கள் விற்பனைக்கு

251-3475 TOYOTA TOWNACE VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044270

252-1185 NISSAN VANETTE VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044253

51-3277 TOYOTA TOWNACE VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044256

53-4464 TOYOTA LITEACE VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044273

59-1560 MAZDA BROWNY VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044266

### 118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

65-8095 LAND ROVER FREELANDER SUV அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044289

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP GP-6147 NISSAN ATLAS TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044257

EP LI-8001 FAW TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044261

NC JN-0585 JCB 3CX BACKHOE LOADER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044292

NC LF-1864 JAC TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044280

NW PW-5318 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044282

SG LJ-1400 FOTON TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044303

SP DAD-2852 FOTON BJ1008 TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044274

SP PQ-0533 MAHINDRA BOLERO MAXI TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044248

UP PX-6993 MAHINDRA BOLERO MAXI TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044255

61-4268 TOYOTA COASTER BUS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044259

63-0928 TOYOTA COASTER BUS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044254

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

HJ-4482 BAJAJ, 2003 THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 044271

SG BBU- 2165 BAJAJ DISCOVE R 125 MOTOR CYCLE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044250

SG BBY-3292 BAJAJ DISCOVER 125 MOTOR CYCLE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044245

SP BGN-8974 YAMAHA RAY ZR BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044252

SP BIH-5711 HERO MAESTRO EDGE BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044295

WP AAD-5458 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044298

WP YE-1410 BAJAJ THREEWHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044286

WP YX-2785 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 044277

**Repeat Your ad For Better Offers**

லங்கா சதொச LANKA SATHOSA

# பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதோச லிமிடேட் இடம் உள்ள பாவனைக்கு உதவாத நிலையில் இருக்கும் உலர் உணவுப் பொருட்களின் விற்பனை

LSL/PRO/09/07/Non Consumable Dry Ration/2024.

**லங்கா சதொச லிமிடெட்** பேலியகொடை களஞ்சியத் தொகுதியில் உள்ள பாவனைக்கு உதவாத உலர் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் தரப்புகளிடம் இருந்து **லங்கா சதொச லிமிடெட் தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உருப்படிகள் | தோராயமான எடை (கி.கி.) |
|---|---|---|
| 1 | அரிசி | 19,000 |
| 2 | உப்பு | 16,000 |
| 3 | டின் மீன் | 1,000 |
| 4 | கோதுமை மாவு | 3,000 |
| 5 | சீனி | 5,000 |
| 6 | சிவப்பு பருப்பு | 1,500 |
| 7 | நெத்தலி மீன் | 15 |
| 8 | கடலை | 300 |
| 9 | பாசிப்பயறு | 400 |
| 10 | மஞ்சள் பருப்பு | 2,000 |
| 11 | கொத்தமல்லி | 5 |
| 12 | காய்ந்த கொச்சிக்காய் | 20 |
| 13 | சிவப்பு கௌபி | 500 |

மேல் குறிப்பிடப்பட்ட உருப்படிகளை **2024 ஜூலை 08 முதல் 2024 ஜூலை 22 வரையான** காலப்பகுதியில் வார நாட்களில் அலுவலக நேரத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் பரீட்சிக்க முடியும். பேலியகொடை களஞ்சிய தொகுதி, இல. 44.'.1, நகர அபிவிருத்தி
அதிகாரசபை களஞ்சியத் தொகுதி, நவ நுகே வீதி, பேலியகொடை.

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் **1000.00 ரூபா (மீளளிக்கப்படாத)** கட்டணத்தைச் செலுத்தி **2024 ஜூலை 08 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை 22 ஆம் திகதி வரை** கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து விதிகள் மற்றும் நிபந்தனைகளின் தொகுதி உட்பட ஆவணம் மற்றும் விண்ணப்பப் படிவத்தை பெற முடியும்.

லர்கா சதோச லிமிடேட் தலைமை அலுவலகம்
3ஆவது மாடு
இல, 27ரு
CWE சேயலகக் கட்டெம்ரு
வோக்ஃூஃால் வீதிரு கோடீம்மு 02,

அனைத்து விண்ணப்பதாரர்களும் **உத்தரவாதம் ஒன்றாக 25,000 பாதுகாப்பு வைப்பை (மீளளிக்கப்படும்)** செலுத்த வேண்டும். மேலுள்ள முகவரியில் காசாளருக்கு வைப்புச் செய்து செலுத்திய பின்னர் கிடைக்கும் ரசீதை (நீள பிரதி) குறித்த விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான ரசீது இல்லாது சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை **2024 ஜூலை 22 ஆம் திகதி பி.ப. 12.00 அல்லது அதற்கு** முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பொட்டியில் இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**LSL/PRO/09/07/Non Consumable Dry Ration/2024.**" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கூறுவிலைகள் சமர்ப்பிக்கும் நேரம் **2024 ஜூலை 22 ஆம் திகதி பி.ப. 12.00** இற்கு நிறைவடைவதோடு அதன் பின்னர் உடன் திறக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் ஆவணத்தில் தரப்பட்டிருக்கும் நிபந்தனைகளின்படி தமது கூறுவிலைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்,
திலினி - 070 1560428

இந்த ஒப்பந்தம் தொடர்பில் **லங்கா சதொச லிமிடெட், தலைவரினால்** எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்,**
**லங்கா சதொச லிமிடட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

pmf finance

# பி எம் எப் பினான்ஸ் பிஎல்சி

## பிரசித்த ஏலவிற்பனை

### அடவு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க ஆபரணங்கள்

கோல்ட் லோன் திட்டத்தில் 2023 ஜூலை அல்லது அதற்கு முன்னராக அடவு வைக்கப்பட்டு அவற்றிற்கான காலம் முடிவடைந்துள்ளதினால் 2024 ஜூலை 24 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் pmf finance PLC இன் கொழும்பு 03 கிளையில் ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் மற்றும் தங்க கடன் நிலையங்கள் | ஏலவிற்பனைக்கான இடம் மற்றும் திகதி |
|---|---|
| திருகோணமலை, எல்பிட்டிய, வெள்ளவத்தை, கண்டி,மாத்தறை, அனுராதபுரம், மத்துகம, கம்பஹா, நீர்கொழும்பு, மாத்தளை, ஹோமாகம, குருநாகல். | இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு-03. 24.07.2024 |

- எந்தவொரு முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்வதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் அல்லது பிற்போடுவதற்குமான உரிமையை கம்பனியானது கொண்டுள்ளது.
- அனைத்து பங்குதாரர்களும் அவர்களின் அடையாள அட்டையை ஏலவிற்பனைக்கு முன்னராக சமர்ப்பித்தல் வேண்டும்.
- ஏலத்தின்போது உட்பிரவேசித்தல் கட்டணமொன்று அறவிடப்படும்.

**முகாமையாளர் - கோல்ட் லோன்கள்**
**பிஎம்எவ் பினான்ஸ் பிஎல்சி**
**இல. 47, தர்மபால மாவத்தை,**
**கொழும்பு-03.**

**தொலைபேசி: 011-7 733 600'**
**அலைபேசி: 0719 342 413**





OBSERVER adz · වාරමඤ්ජරී

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Kurunegala District**

Kurunegala - 077 0 325 625
6217 - Sampath Advertising - No. 15/6, Convent Lane, Kurunegala.

Kurunegala - 077 3 512 600
6163 - Athugala Media Center - No. 21A, Uthuru Wewa Road, Kurunegala.

Kuliyapitiya - 037 22 832 88
6101 - Sasthrodaya Book Shop - No. 11, Mihindu Mawatha, Kuliyapitiya.

Nikaweratiya - 077 6 064 640
6154 - Kumuditha Book Shop - No. 101/C, Puththalam Road, Nikaweratiya.

Wariyapola - 037 22 672 58
6188 - Kalugamuwa Road, Wariyapola.

Giriulla - 077 9 542 492
6233 - Chathura Book Shop - No. 49, Giriulla.

Pannala - 076 7 861 313
6118 - Miyumi Book Shop - No. 7, Negombo Road, Pannala.

Alawwa - 037 22 78 189
6145 - Gunasiri Welandasela - No.52, Main Street, Alawwa.

Narammala - 037 22 49 211
6155 - Sisira Stores & Pharmacy - Negombo Road, Narammala.

Ibbagamuwa - 037 22 59 508
6202 - Hiriyala Agencies - Dehelgamuwa, Ibbagamuwa.

Polgahawela - 071 6 375 293
6119 - Sagara Stores - Kurunegala Road, Polgahawela.

**Galle District**

Galle - 091 3 021 001
3117 - C. S. Munasingha - New Aradana Traders, No. 83, Main Street, Galle.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

தினகரன்
THINAKARAN

கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

### அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

### உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

# வெற்றிடங்களுக்காக விண்ணப்பம் கோரல்

நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் மூலதன முதலீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் கடனை மீளப் பெறும் பிரதான கடமைகளை நிறைவேற்றும் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் 1916ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நியதிகள் சட்ட நிறுவனமாகும் என்பதுடன் இந்த நிதியம் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்றது. இந்த நிறுவனத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் கணக்கு)**
**(வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01)**

01. சேவை வகுதி:
‘‘முகாமைத்துவம்’’

02. ‘‘முகாமைத்துவ’’ சேவை வகுதியின் பதவியை வகிப்பவருக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் தொடர்பான பொதுவான வரையறை:-

பொது இயல்பின் பிரகாரம், கொள்கை ஆதாரம், கட்டளை / கட்டளையிடுதல், முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய முடிவெடுத்தல் ஆகிய பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அமைப்பின் உயர் நிர்வாக அதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த பங்கின் ஒரு பகுதியாகும். குறிப்பாக நிறுவனத்தின் ஒதுக்கப்பட்ட பணிகளின் மிக உயர்ந்த நிர்வாக அதிகாரியின் பங்கை ஆதரிக்கும் / எளிதாக்கும் வகையில் பதவிக்கு விசேடமாக ஒப்படைக்கப்படும் கடமைகள்.

03. **தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

01. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2021-02-18ஆம் திகதிய 4/2016(iii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

03. கேள்விக்கு இயைபான மேலதிகத் தகவல்களை கண்டி, விலியம் கோபல்லாவ மாவத்தை, 615ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம்: 081-2217401 ஆகும்.)

04. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 02 வரையான சேவை மற்றும் வேலைகளுக்கு இயைபான கேள்விப் படிவங்களுக்காக மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை கண்டி, விலியம் கோபல்லாவ மாவத்தை, 615ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2024-07-05ஆம் திகதி முதல் 2024-07-24ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. முறையாகப் பூரணப்படுத்தி, முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024-07-25ஆம் திகதி திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கண்டி, விலியம் கோபல்லாவ மாவத்தை, 615ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அந்த அலுவலகங்களின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. இரு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விகளையும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அவ்வுறைகளின் இடதுபக்க மேல் மூலையில் வேலை / சேவையின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறித்து வேறொரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

07. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்ததும் அவை உடன் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

08. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில், இலங்கை காப்புறுதிச் சபையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றில், மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளரின் பெயரில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பெறுமதியைக் கொண்ட மற்றும் கால எல்லைக்கு இயைபான கேள்விப் பிணை முறியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்றை கேள்விப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| தொ. இல. | செயற்றிட்ட இல. | வேலை/ சேவை / வழங்கல் செயற்படுத்தப்படும் மாவட்டம் மற்றும் பெயர் | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூபா மில்லியன்) (வெட் இன்றி) | தேவையான பதிவு | கேள்விப் பிணை முறி: கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | கேள்விப் பிணை முறி: ரொக்கப் பண வைப்பு (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **சிறுவர் அபிவிருத்தி நிலையம் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு சூரிய சக்தி முறைமையைப் பொருத்துதல்** | | | | | | | | | |
| 1 | CPC/SP/ 02/06/2024/5 | டிக்கிரி செவன சிறுவர் அபிவிருத்தி நிலையம் | 2.2 | நிலைபெறு தகு சக்தி அதிகார சபையில் வழங்குநராக பதிவு செய்திருத்தல் | 108,000.00 | 54,000.00 | 40 | 90 | 3,500.00 |
| | | வேரவலவத்த சிறுமிகள் தடுப்பு நிலையம் | 1.15 | | | | | | |
| | | வேரவலவத்த சிறுவர்கள் தடுப்பு நிலையம் | 1.15 | | | | | | |
| | | மாத்தளை சகநோதய சிரேஷ்ட பிரஜைகள் விடுதி | 1 | | | | | | |
| **வேலை நிர்மாணம் மற்றும் பொருள், சேவை வழங்குதல்** | | | | | | | | | |
| 1 | CPC/SP/ 02/06/2024/6 | கம்பொல நன்னடத்தை அலுவலகத்தில் பாதுகாப்பு மதிலை அமைத்தல் | 5.37 | (CIDA) பதிவு C8, C7 மற்றும் C6 | 108,000.00 | 54,000.00 | 105 | 77 | 3,500.00 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்,**
**மத்திய மாகாணம்,**
**இல. 615, விலியம் கோபல்லாவ மாவத்தை,**
**கண்டி.**
**2024-07-05.**

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

## நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவி

01. 2002 ஆண்டு 04ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மேன்முறையீடுகள் நியாய சபையின் தலைவர் பதவி (I) உறுப்பினர் பதவி (I)க்கான விண்ணப்பங்களை கோருவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. சகல விண்ணப்பப்படிவங்களும் அவ் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதித் திகதியான 2024.07.25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறும் வகையில் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. **தகைமைகள்**
   - அ. விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி திகதியின்படி அரச உத்தியோகத்தராக 20 வருடங்களுக்கு அதிகமான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது
   - ஆ. விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி திகதியின்படி சட்டத்தரணியாக 10 ஆண்டுகளுக்க மேல் அனுபவம் உள்ளவர்கள்.

03. **தலைவர் பதவிக்காக வழங்கப்படும் கொடுப்பனவு விபரம் பின்வருமாறு**
   - மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 135,000/-
   - மாதாந்திர போக்குவரத்து கொடுப்பனவு - உத்தியோகபூர்வ வாகனம் அல்லது உத்தியோகபூர்வ வாகனக் கொடுப்பனவு (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
   - எரிபொருள் கொடுப்பனவு - (மாதாந்த) சந்தையில் நிலவும் எரிபொருள் விலைக்கு ஏற்ப 220 லீட்டர் எரிபொருளுக்கான கொடுப்பனவு
   - தொலைபேசி கொடுப்பனவு - ரூ. 10,000/- (மாதாந்தம்)

04. **உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு விபரம் பின்வருமாறு**
   - மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 90,000/-
   - மாதாந்திர போக்குவரத்து கொடுப்பனவு - வசிக்கும் இடத்திலிருந்து கி.மீ. 350 வரை ரூ. 25,000 கி.மீ. 350ஐ தாண்டும்போது மாதாந்திர கொடுப்பனவு ரூ. 50,000
   - தொலைபேசிக் கொடுப்பனவு - ரூ. 8,000/- (மாதாந்தம்)

**நீதிச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,**

**எச்.எஸ். சோமரத்ன,**
**செயலாளர்,**
**நீதிச் சேவை ஆணைக்குழு,**

2024 ஜூலை மாதம் 05ஆம் திகதி

**கொழும்பு 12.**
**நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திலிருந்து**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BOC Lake House Branch Acc. No. 00000037

கடற்றொழில் அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

NAQDA

# விலைமனுக்கோரல்

## பெறுகை அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மைனர்) பின்வரும் பொருட்கள் வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02. தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் NAQDA உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திற்கு **www.naqda.gov.lk** இல் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை மற்றும் செல்லுடியாகும் காலம் (SLR) | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| **NQ/DPC/2024/NCB/G/04** ஹோர்மோன் மற்றும் டய்க்லோர்போர்ன் வழங்கல் மற்றும் விநியோக கொள்முதல் (டய்க்லோர்போர்ன் 262kg ஹோர்மோன் (GNRHA) 1460ml | மனுப் பாதுகாப்பு தொகை ஆவணத்தின் II - மனு தரவு பத்திதிரம் (BDS) இன் ITB 20.2 பந்தி வரை காட்டப்பட்டுள்ளது. | ரூ.3,500.00 | 2024.07.25 திகதி பி.ப.3.00 வரை | 2024.07.26 திகதி பி.ப.2.00 வரை |
| **NQ/DPC/2024/NCB/G/05** பொலித்தீன் வழங்கல் மற்றும் விநியோக கொள்முதல் (LLDPE) (பொலித்தீன் 6250kg) | 50,000.00 (2024.11.25 திகதி வரை) | ரூ.3,500.00 | 2024.07.25 திகதி பி.ப.3.00 வரை | 2024.07.26 திகதி பி.ப.2.00 வரை |

**தலைவர்,**
**கொள்முதல் குழு (மைனர்)**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
**2024.07.05**

SELACINE

## பிழைத்திருத்தம்

2024-05-13ம் திகதிய தினகரன் பத்திரிகையில் 13ம் பக்கத்தில் பிரசுரமான எல்.ஓ.எல்.சி. பெக்டர்ஸ் லிமிடெட்டின் வழக்கு எண் **CHC/778/2019/MR,** நிறைவேற்றுதல் எண்: **15/2022** உடைய பிசுகால் ஏல விற்பனை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் 02ம், 06ம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ளவை பின்வருமாறு திருத்தப்படுகிறது என பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**02)** Time Control in sole molding machine (Dasun Ds 606 A) - 01

**06)** Wiew Hydralic swing arm cutting Press (X Co338) - 01

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி இன் பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளை வாடிக்கையாளர் சார்பாக எமது நிறுவனத்தால் இல.123, ஒராபிபாஷா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப 9.30 - பி.ப 2.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| **02/04/2024** | **02/05/2024** | **26th & 29th July 2024** |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஒரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## பத்திரிகை அறிவித்தல்

கொத்மலை பிரதேச செயலகப் பிரிவில் 2025 ஆண்டுக்கான கள்ளுத் தவரணைகளுக்கான ஏல விற்பனை 2024.08.06 ஆம் திகதி மு.ப 10:30 மணிக்கும், வெளிநாட்டு மதுபான சாலைகளுக்கான ஏல விற்பனை 2024.08.06 மு.ப 10:30 மணிக்கும் இப்பிரதேச செயலகத்தில் என்னால் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கிறேன். மேலதிக விபரங்களுக்கு இல. 2389 2024 ஜூன் 14ஆம் திகதியின் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியை பார்க்கவும்.

**ஆர்.ஏ.நதீர லக்மால,**
**பிரதேச செயலாளர்,**
**கொத்மலை.**

NLDB

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**

## கேள்வி கோரல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான மெல்சிரிபுர பண்ணையில் அமைந்துள்ள உணவகத்தை 2024.11.01 முதல் 2026.10.31 வரை 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விற்பனை சாலையை பரீட்சிப்பதங்கு வார நாட்களில் முடியும். ஒரு கேள்விக்காக மீளளிக்கப்படாத ரூ.2000/- தொகையைச் செலுத்த வேண்டியதுடன் கேள்விகோரல் ஆவணங்களை 2024.07.11 முதல் தலைமையகத்தில் மற்றும் மெல்சிரிபுர விற்பனை சாலையில் பெற்றுக் கொள்ளலாம். பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2024 ஜூலை 29 பி.ப. 2.30 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது அவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அந்நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல.40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்டி,**
**கொழும்பு - 05**

**தொ.பே.இல. 0112501701/ 702, தலைமையகம்**
**0773782124/ 0377294792 - மெல்சிரிபுர பண்ணை**

Repeat Your ad For Better Offers

## கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்கள்/விலைமனுவிற்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை/ பொருட்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமைவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து மற்றும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மீளளிக்கப்படாத விலைக்கோரல்/ கேள்வி ஆவணங்களின் கட்டணம் | விலைக்கோரல் பிணை முறியின்/ பாதுகாப்பு பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1. | CPD13/1519/2024 | நில அளவையாளர் மற்றும் உத்தரவு பெற்ற நில அளவையாளரொருவரின் சேவைகளை பெற்றுக் கொள்ளல் | இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளுக்கான அனுபவத்தையும் வியாபார பதிவை வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் கொண்டிருத்தல் வேண்டும். | 5,900 ரூபா | 50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |
| 2. | CPD20/0832/2024 | ஆறு மாத காலப்பகுதிக்கு அஸ்பெஸ்டொஸ் தகடு, கண்ணாடி தகடுகள், ஆணிகள், கதவுப் பூட்டு, கட்டும் கம்பி, கீல்கள், பொலித்தீன், கூரைத்தகடுகள் இன்னும் பலவும் ஆகியவற்றை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக விலைமனு கட்டண விலையை அழைத்தல். | | 5,900 ரூபா | 100,000,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம் |

கேள்வி ஆவணத்தை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) இரு முறைகளினால் பெற்றுக் கொள்ளலாம்.

**முறை 01 -** www.colombo.mc.gov.lk என்றகொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i. பின்வரும் முறையில் மீளளிக்கப்படாத கேள்வி.ஂவிலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை செலுத்தலாம்.

அ) நகரமண்டப மக்கள் வங்கி கிளையின் 167-1-001-6-3169425 என்ற கணக்கிலக்கத்திற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலிருந்தும் பணத்தை வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வாரநாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,**
  **இல.147,ஹைலெவல் வீதி,**
  **கிருளப்பொன,**
  **கொழும்பு-06.**
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  **மாளிகாகந்த**
  **கொழும்பு-10.**

ii. கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணத்துடன் பற்றுச்சீட்டின்/துண்டின் மூலப்பிரதியை இணைத்தல் கட்டாயமானதாகும்.

**முறை 02 - நகரமண்டப வளவில் பெற்றுக் கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2024.07.24 ஆம் திகதி வரையும் நகரமண்டப சிறாப்பர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம்,கொழும்பு-07,நகரமண்டபம்,கொழும்பு மாநகர சபை,மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. 2024 ஜூலை 24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பின்னர் கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணமானது இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படமாட்டாது என்பதுடன் வழங்கப்படவும் மாட்டாது.

இ . நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனுக்கோரல்கள்/பிணை ஆகியன விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுமுறி/பிணை 2024.12.21 ஆம் திகதிவரையும் செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளில் கொழும்பு-07, நகரமண்டபம், மாநகர செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024 ஜூலை 25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும்.

உ. 2024 ஜூலை 25 ஆம் திகதியன்றுமு.ப. 10 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடுஅதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக வேதிறக்கப்படும். இந்தநாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்துவரும் வேலை நாளில் மு.ப. 10 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்றபிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 0112-686389, 0112-686369, 0112-662329.

ஊ. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக கேள்விதாரர்/ விலைமனுதாரர்களின் கேள்விகள்/ விலைமனுக்கள் 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்த பின்னர் PCA-3 படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – கல்முனை

**மருத்துவ உபகரணங்களுக்கான பெறுகை**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கொழும்பு உயிரியல் மருத்துவ பொறியியல் சேவையிடமிருந்து ஒதுக்கீடொன்றைப் பெற்றுள்ளார் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த ஒதுக்கீட்டின் ஒரு பகுதியைப் பயன்படுத்த விரும்புகின்றார்.

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பல் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார். பெறுகை முறையானது தேசிய போட்டிரீதியிலான (NCB) விலைக்கோரல் நடைமுறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.

| உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் | விலைக்கோரல் பிணை முறி தொகை |
|---|---|---|---|
| Ultrasonic scalars | 08 | 1000.00 | 45,000.00 |
| Light cure | 03 | | |
| Mini autoclaves | 05 | | |

அ. மேற்கூறிய ஒப்பந்தப் பொதியைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

ஆ. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-07-05ஆம் திகதி முதல் 2024-07-26ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.

இ. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உயிரியல் மருத்துவ பிரிவு / நிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி தொடர்பிலக்கம்: 0672223228, தொலைநகல்: 0672222711.

ஈ. விலைமனுக்களுடன் மேற்கூறிய அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 45 நாட்களுக்கு செல்லுபடிக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உ. விலைமனுக்களை 2024-07-29ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், பொலிஸ் நிலைய வீதி, கல்முனை எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் தலைப்பு கட்டாயம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

ஊ. பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலும் எந்தவொரு காரணத்தையும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கொண்டுள்ளார் என்பதுடன் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் தொடர்பாக வளமுள்ள விலைமனுதாரர்களினால் செய்யும் ஏதேனும் செலவுகள் அல்லது கிரயத்திற்கு RDHS பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**பொலிஸ் நிலைய வீதி, கல்முனை.**
2024-07-05.



# கேள்வி அறிவித்தல்

## கேகாலை பிரதேச சபை

கேகாலை பிரதேச சபைக்கு சொந்தமான மொரொண்தொட்ட கோழியிறைச்சிக் கடையை 2024.08.01 முதல் 2025.12.31 வரை குத்தகைக்கு வழங்குவதற்கு என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மாதாந்த குறைந்தபட்ச கேள்வி ரூ. 10000.00 ஆகும் நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு என்னை அழையுங்கள். 035-2222631

**துமிந்த சி விக்ரமசிங்ஹ,**
**செயலாளர்,**
**சபையின அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**கேகாலை பிரதேச சபை.**

# 2025ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக ஆலோசனைகளைக் கோரல்

## நீர்கொழும்பு மாநகர சபை

2025ம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட அறிக்கைக்கு உட்படுத்துவதற்கு கவனத்தில் கொள்வதற்காக நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் நிறைவேற்ற வேண்டிய அபிவிருத்தி வேலைகள் பற்றிய ஆலோசனை சமர்ப்பிக்குமாறு நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கும் பிரஜைகளான உங்களுக்கு கௌரவமாக அழைப்பு விடுக்கின்றேன்.

**நிபந்தனைகள்**

- ❖ ஆலோசனைகளுடன் சம்பந்தப்பட்ட சொத்துக்களை நீர்கொழும்பு மாநகர அதிகாரப் பிரதேசத்திற்குள் வசிக்கும் மாநகர சபைக்குச் சொந்தமான சொத்துக்களாக இருத்தல் வேண்டும்.
- ❖ ஒரு ஆலோசனை அல்லது பலவற்றை சமர்ப்பிப்பதற்கு ஒரு பிரஜைக்கு வாய்ப்பு உண்டு.
- ❖ பல ஆலோசனைகளை சமர்ப்பிக்கும் போது ஆலோசனைகளை நிறைவேற்ற வேண்டிய முன்னுரிமையின் பிரகாரம் ஒழுங்குபடுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக 2024.08.06ம் திகதிக்கு முன்பு ‘நீர்கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் மற்றும் அதிகாரச் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி, மாநகர சபை, நீர்கொழும்பு’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலம் கிடைக்கச் செய்யுமாறு தயவுடன் அறிவிக்கிறேன்.

நீர்கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் மற்றும் அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி.

**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**
**தொ.பே. இல. 031-2222275**

**மின்னஞ்சல்: nmcaccbk@gmail.com**

# வெற்றிடங்கள்

## கைத்தொழில் அமைச்சு
## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

### கணனி அமைப்பு உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

**விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி**
2024.07.19
மேலதிக விபரங்களுக்கு 2024.07.05 Daily News பத்திரிகையைப் பார்க்கவும்

**பணிப்பாளர் நாயகம்/பி.நி.அ.**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்**






## தயா ரீ பஸ்குவல் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அனுப பஸ்குவல் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "தயா ரீ பஸ்குவல் மன்றம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்-

(அ) பெண்கள் மற்றும் சிறுவர்களின் சகல உரிமைகளையும் பாதுகாத்தல்

(ஆ) மாணவர்களின் கல்வி, விளையாட்டு மற்றும் கலை அம்சங்களுக்கு ஆதரவளித்தல்

(இ) மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவுதலும் ஆதரவளித்தலும் மற்றும்

அனுப பஸ்குவல்
பாராளுமன்ற உறுப்பினர்






# பெறுகை அறிவித்தல்

## மாவத்தகம பிரதேச சபை - கேள்விகோரல் - 2024

மாவத்தகம பிரதேச சபையின் பஸ் நிலைய கட்டிடத்தின் முதலாம் மாடியில் ஸ்தாபிக்கப்பட்ட கடை அறைகளை, 10 வருட நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக என்னால் விலைமனுக்கள் ஏற்கப்படும்.

02. அக்கேள்விப்படிவம் 2024.07.08 முதல் 2024.07.22 பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படுவதுடன், 2024.07.23 மு.ப. 10.00 வரை ஏற்கப்படும். அன்றே மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

03. உங்களது விலை விண்ணப்பிக்கும் கடை அறையின் இலக்கம் மற்றும் பொது “பஸ் நிலைய கடை அறைகள்” என்று கடித உறையின் இடதுபக்கம் குறிப்பிட்டு மாவத்தகம பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

| கடை அறை இலக்கம் | கடை அறையின் சதுரஅடி அளவு | கடைஅறையின் குறைந்தபட்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| UA-2, UA-3, UA-4,UA-6,UA-8,UA-9,UB-2,UB-3,UB-4 | 214 | 2,336,250.00 |
| UA-15 | 389 | 4,242,000.00 |
| UA-20 | 353 | 3,848,250.00 |
| UA-21 | 357 | 3,895,500.00 |
| UB-12 | 241 | 2,630,250.00 |

04. கேள்வி விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தில் ரூ.5000/- மீளளிக்கப்படாத மற்றும் ரூ.10,000/- மீளளிக்கப்படும் கேள்விப் பிணையொன்றை வைத்துக் கொள்ளல் வேண்டும்.

05. குறித்த தினம் மற்றும் நேரத்திற்கு மாத்திரம் கிடைக்கப்பெறும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

06. சித்திகரமான கேள்விதாரர் அறிவித்த பின்னர் 14 நாட்களுக்குள் குறித்த கட்டணத்தை ஒரே முறையில் செலுத்த வேண்டியதுடன் கொடுப்பனவுகளை செலுத்தாதுவிடின் கேள்விப்பிணை சபைக்கு உரிய தாக்கப்படும்.

07. 10 வருட நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் கீழ் சொத்துக்கள் வழங்கப்படுவதுடன் வருடாந்த மதிப்பீட்டுத் தொகை மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும்.

08. நீண்டகால குத்தகை உடன்படிக்கை காலம் முடிவடைந்த சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக மீண்டும் மாநகர சபையினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

09. அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்கள் சபையுடன் குத்தகை உடன்பாட்டிற்கு உட்படுவதுடன் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் உரிமை மாவத்தகம பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

10. கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் மேலதிக விபரங்களை மாவத்தகம பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது தொ.பே.இலக்கம் : 037 - 2299821ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**2024 ஜூலை 04ம் திகதி,**
**மாவத்தகம பிரதேச சபை,**
**அலுவலகம்.**

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**மாவத்தகம**

## நிதி, பொருளாதார நிலைப்பாடுகள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

# இலங்கைச் சுங்கம்

## சுங்க அதிகாரிகளுக்கு சப்பாத்து மற்றும் மேசு பெறுகைக்கான விலைமனுக்கோரல்

### தேசிய போட்டி கேள்வி முறை (NCB)

சுங்க பணிப்பாளர் நாயகம் சார்பாக திணைக்கள (சிறிய அளவிலான) பெறுகைக் குழுவின் தலைவரால் சுங்க அதிகாரிகள் சாபாக சப்பாத்து மற்றம் மேசு பெறுகைக்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ.) | கேள்விகளை முடிவுறுத்தல் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| CUS/Log/S/10/Sh. So/01/2024 | சப்பாத்து மற்றும் மேசு | 100,000.00 (ஒரு லட்சம்) | 2024.07.24 | பி.ப. 2.00 |

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் நடத்தப்படும்

2. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை, சுங்கப் பணிப்பாளர் (சேவைகள் மற்றும் வழங்கல்கள்) இடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2024.07.05 முதல் 2024.07.23 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

3. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024.07.23 அல்லது அதற்கு முன்பு வேலை நாட்களில் மு.ப. 9.00 இற்கும் பி.ப. 3.00 இற்கும் இடையில் ரூ. 2500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள சேவை மற்றும் வழங்கல் பிரிவிற்கு எழுத்துமூல விண்ணபத்தை சமர்ப்பித்து முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் செலுத்த முடிவது காசாக மட்டுமே.

4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 2024.07.24 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது சேவை வழங்கல் பிரிவில் அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2024.07.24 பி.ப. 2.00 இற்கு கீழ்க்காணும் முகவரியில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் விலை மனுக்களை சமர்ப்பிக்கின்ற கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். சகல கேள்விகளும் ரூ. 100,000.00 கேள்விப் பிணையொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

    **சுங்கப் பணிப்பாளர் (சேவை மற்றும் வழங்கல்கள்)**
    **சேவை மற்றும் வழங்கல்கள் பிரிவு,**
    **6ஆம் மாடி, இலங்கை சுங்கம்,**
    **இல. 40, மெயின் வீதி, கொழும்பு -11**

5. கேள்வி வழங்கல் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள (சிறிய அளவிலான) பெறுகைக்குழு,**
**இலங்கை சுங்கம்,**
**இலக்கம் 40, மெயின் வீதி, கொழும்பு -11.**

**தொலைபேசி: 011-2221680, பெக்ஸ்: 011-2436096**


Repeat Your ad For Better Offers


# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2023(2024)

## அழகியல் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை

மேற்படி பரீட்சையின் செய்முறைப் பரீட்சை 2024.07.09 ஆம் திகதியிலிருந்து 2024.07.19 ஆம் திகதி வரை 169007 பரீட்சார்த்திகளுக்காக 1226 பரீட்சகர் குழுக்கள் நாடு பூராகவும் செயற்படும்.

41- சங்கீத (மேலைத்தேய) பாடத்தின் கேட்டற் பரீட்சை 2024.07.14ஆம் திகதி உரிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

1. 40 - சங்கீதம் (கீழைத்தேய)
2. 41 - சங்கீதம் (மேலைத்தேய)
3. 42 - சங்கீதம் (கர்நாடகம்)
4. 44 - நடனம் (சுதேச)
5. 45 - நடனம் (பரதம்)
6. 50 - நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
7. 51 - நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
8. 52 - நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

02. மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களில் இறுதிப் பெறுபேற்றைத் தீர்மானிப்பதற்காக எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளின் புள்ளிகளும் பயன்படுத்தப்படுமாதலால் அவ்விரு பகுதிகளுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளுக்கு அப் பாடத்திற்கான பெறுபேறு வழங்கப்படமாட்டாது.

03. பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதியட்டைகளும் நேர அட்டவணையும் குறித்த பாடசாலை அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதியட்டைகள் அவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

04. பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்கப்பெற்ற அனுமதியட்டைகளில் குறிப்பிட்டுள்ள பாடம், மொழிமூலம் என்பவற்றில் திருத்தங்கள் இருப்பின் உடனடியாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு அவற்றை சமர்ப்பித்து அத்திருத்தங்களை செய்து கொள்ள முடியும்.

05. அனுமதியட்டைகள் கிடைக்கப்பெறாத அதிபர்கள் தமது பாடசாலை எண், பாடசாலையின் பெயர், முகவரி மற்றும் உரிய விபரங்களுடனும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெயர், முகவரி, பரீட்சைச் சுட்டெண், அழகியல் பாடம் முதலிய விபரங்களுடனும் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி எண்கலூடாக அறியத்தருவதுடன் பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இது தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்த வேண்டுமென்பதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலும் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்குள் www.doenets.lk நுழைந்து பரீட்சை சுட்டெண்ணை உள்ளிடுவதன் மூலம் அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் பரீட்சைக்குத் தோற்றுதல் பரீட்சை விதிகளின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.**

**விசாரணை :-**

**தொலைபேசி 011-2784208, 011-2784537, 011-2786616**
**தொலைநகல் 011-2784422**

**எச்.ஜே.எம்.சீ.அமித்**
**ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர்**
**நாயகம்**

**எனது எண் : 6/30/News Paper**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2024.07.04**




# இலங்கை இளையோரின் போராட்டத்தை முறியடித்து இங்கிலாந்து தொடர் வெற்றி



இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் போட்டியில் 4 ஓட்டங்களால் டகர்வர்த் லுவிஸ் முறையில் பரபரப்பு வெற்றியைப் பெற்ற இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணி தொடரை 2–1 என கைப்பற்றியது.

பிரைட்டனில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து இளையோர் அணியின் முதல் மூன்று விக்கெட்டுகளையும் 34 ஓட்டங்களில் வீழ்த்த முடிந்தபோதும் நான்காவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த அணித் தலைவர் லுக் பென்கன்ஸ்டைன் (102) மற்றும் சார்லி எலிசன் (87) 184 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

இங்கிலாந்து இளையோர் 45 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 268 ஓட்டங்களை பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. இதன்போது இலங்கை இளையோர் சார்பில் கொழும்பு, தர்ஸ்டன் கல்லூரியின் சுழற்பந்து வீச்சாளர் விஹாஸ் தவ்மிக்க 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு தினுர கலுபஹன 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

மழை குறுக்கிட்டதால் இலங்கை இளையோருக்கு 45 ஓவர்களில் 265 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி களமிறங்கிய இலங்கை அணி கடைசி ஓவர் வரை வெற்றிக்காக போராடியது. முதல் வரிசையில் கயன வீரசிங்க 76 பந்துகளில் 80 ஓட்டங்களைப் பெற்றதோடு மத்திய வரிசையில் மஹித் பெரேரா 45 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் இலங்கை இளையோர் அணி 44.4 ஓவர்களில் 260 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை இளையோர் அணி அடுத்து இங்கிலாந்து இளையோர் அணியுடன் நான்கு நாட்கள் கொண்டு இரு உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது. இதன் முதல் போட்டி வோம்லியில் எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# ஹவலொக் கழகத்தின் ரக்பி அகடமி ஆரம்பம்




அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட வர்த்தக நிறுவனமான பிளைஹைஸ்போட்ஸ் உடன் இணைந்த ஹவலொக் விளையாட்டுக் கழகம் ரக்பி அகடமி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இளம் வீரர்களின் விளையாட்டுத் திறமையை வளர்க்கும் வகையில் முதல் முறையாக சர்வதேச கூட்டிணைவுடன் இந்த பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏழு வயதுக் மேற்பட்ட மற்றும் பத்து வயது உட்பட்ட மாணவர்களுக்கும் ரக்பி விளையாட்டின் தொழில்நுட்பம், மூலோபாயம் உட்பட பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

தவிர, பாடசாலை மட்டத்தில் தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகளும் இந்த ரக்பி அகடமியால் வழங்கப்படவுள்ளது.

இதில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரக்பி பயிற்சியாளரான க்ருகர் ரோச், பிளைஹைஸ்போட்ஸ் ரக்பி அகடமியின் தலைமை பயிற்சியாளராக செயற்படுவதோடு அவர் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

இலங்கையில் முதல் முறையாக சர்வதேச கூட்டிணைவுடன் ரக்பி அகடமி ஒன்றை ஆரம்பிப்பதை இட்டு 109 ஆண்டு வரலாற்றைக் கொண்ட ஹவலொக் விளையாட்டுக் கழகம் பெருமகிழ்ச்சி அடைகிறது என்று அதன் தலைவர் ரஜீவ் பெரேரா கழகத்தில் நேற்று முன்தினம் (03) நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# உலகின் மிகப் பழைமையான 'குகை ஓவியம்' கண்டுபிடிப்பு



உலகின் மிகப் பழைமையான குகை ஓவியம் இந்தோனேசியாவின் சுலவெசி தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறைந்தது 51,200 ஆண்டுகள் பழைமையாக இந்த ஓவியத்தில் காட்டுப் பன்றியைச் சூழ மூன்று மனிதர்கள் இருக்கும் காட்சி தீட்டப்பட்டுள்ளது. இது முந்தைய மிகப் பழைமையான குகை ஓவியத்தை விடவும் 5,000 ஆண்டுகள் பழைமையானதாகும்.

இது நவீன மனிதனின் படைப்பாற்றல் சிந்தனையின் காலத்தை மேலும் பின்னோக்கிச்செலுத்துவதாக உள்ளது. இதனை இந்தோனேசிய மற்றும் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்பு மனிதப் பரிணாமம் பற்றிய சிந்தனையை மாற்றக் கூடும் என்று இந்த ஆய்வை மேற்கொண்டவர்களில் ஒருவரான அவுஸ்திரேலியாவின் கிரிபித் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆய்வாளர் மக்சிம் அவுபர்ட் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இந்தோனேசியாவில் குறைந்தது 45,500 ஆண்டுகளுக்கு முன்னர் தீட்டப்பட்டதாக நம்பப்படும் காட்டுப் பன்றியின் ஓவியம் ஒன்றே உலகின் மிகப் பழைமையான குகை ஓவியமாக இருந்து வந்தது.

# நெகிழ் வட்டு பயன்பாட்டை கைவிட்டது ஜப்பான் அரசு



ஜப்பான் அரசாங்கம் நெகிழ் வட்டுகளின் (Floppy Disk) பயன்பாட்டை முற்றாக கைவிட்டுள்ளது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இதன் பயன்பாடு உச்சம் பெற்றிருந்த நிலையில் அனைத்து கட்டமைப்புகளில் இருந்தும் அது நீக்கப்பட்டிருப்பதாக ஜப்பான் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாதம் வரை, காலாவதியான இந்த நெகிழ் வட்டுகளை பயன்படுத்தி அரசுக்கு ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு மக்கள் கோரப்பட்டு வந்தனர். 1,000க்கும் அதிகமான ஒழுங்கு முறை தேவைகளுக்கு இது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த விதி தற்போது நீக்கப்பட்டு விட்டதாக டிஜிட்டல் அமைச்சர் டாரோ கோனோ தெரிவித்துள்ளார்.

இந்த நெகிழ் வட்டுகளை அகற்றும் அறிவிப்பை 2021 ஆம் ஆண்டிலேயே கோனோ வெளியிட்டிருந்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் போரில் நாம் வெற்றி பெற்றோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

1960களில் சதுர வடிவத்தில் உருவாக்கப்பட்ட சேமிப்புக் களஞ்சியமான நெகிழ் வட்டுகள் 1990களில் மிக முக்கிய சாதனமாக மாறியது. அதிக உச்ச திறன் கொண்ட நெகிழ் வட்டு வெறுமனே 1.44 எம்.பி. தரவை மாத்திரமே சேமிக்கும்.

சோனி நிறுவனம் இதன் உற்பத்தியை 2011இல் கைவிட்டது.

# 3 நாடுகளை இணைக்கும் பாரிய ரயில் பாதைத் திட்டம்



சீனா, கிர்கிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றையொன்று தரைவழியாக இணைக்கும் வகையிலான பாரிய ரயில் பாதைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இத்திட்டம் தொடர்பான நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தம் இம்மூன்று நாடுகளதும் தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மெய்நிகர் ஊடாக இவ்வைபவத்தில் கலந்து கொண்ட மூன்று நாடுகளது தலைவர்களும் ஐக்கியம் மற்றும் பகிரப்பட்ட நோக்கங்களை எடுத்துக்கூறினர். 1997இல் முதன் முதலில் முன்மொழியப்பட்ட இத்திட்டம், நிதிக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்ப இடையூறுகள், புவிசார் அரசியல் சிக்கல்கள் காரணமாக தாமதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் புதிய போர் நிறுத்தத் திட்டத்திற்கு ஹமாஸின் பதிலை ஆராய்கிறது இஸ்ரேல்

## தொடர்ந்தும் இஸ்ரேல் உக்கிர தாக்குதல்

காசாவில் இஸ்ரேலின் கடுமையான தாக்குதல்கள் மற்றும் மோதல்கள் தொடர்ந்து நீடிக்கும் நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான புதிய போர் நிறுத்த முயற்சிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



கடந்த சில வாரங்களாக போர் நிறுத்தப் பேச்சுகள் ஸ்தம்பித்திருந்த நிலையில், காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் காசாவில் போர் நிறுத்தத்தை எட்டுவது உட்பட முன்வைக்கப்பட்டிருக்கும் முன்மொழிவு ஒன்றுக்கு ஹமாஸ் அமைப்பிடம் இருந்து எகிப்து மற்றும் கட்டார் மத்தியஸ்தர்களுக்கு பதில் கிடைத்துள்ளது.

இந்த ஆவணத்தை இஸ்ரேல் ஆய்வு செய்து வருவதாக மொசாட் உளவு அமைப்பு சார்பில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது மற்றும் காசாவில் எஞ்சியுள்ள 120 பணயக்கைதிகளையும் விடுவிக்கும் முயற்சியில் எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்கா கடந்த பல மாதங்களாக ஈடுபட்டு வருகின்றபோதும் அவர்களின் முயற்சிகள் தொடர்ந்து தோல்வி அடைந்து வருகின்றன.

எந்த ஒரு உடன்படிக்கையும் போரை முடிவுக்குக் கொண்டுவந்து இஸ்ரேலிய துருப்புகள் காசாவில் இருந்து முழுமையாக வாபஸ் பெறப்பட வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்துகிறது. மறுபுறம் தற்காலிக போர் நிறுத்தத்தை மாத்திரமே ஏற்பதாகக் கூறும் இஸ்ரேல், ஹமாஸை ஒழிக்கும் வரை போரிடுவதாக கூறுகிறது.

இந்நிலையில் 'அளிக்கப்பட்டிருக்கும் பதிலை இஸ்ரேல் ஆராய்ந்து வருவதாகவும் மத்தியஸ்தர்களுக்கு பதில் அளிப்பதாகவும்' மொசாட் குறிப்பிட்டதோடு இது தொடர்பில் மேலதிக விபரங்கள் எதனையும் வெளியிடவில்லை.

எனினும் ஹமாஸின் புதிய நிலைப்பாடு குறித்து பேசுவதற்கு இஸ்ரேலிய பாதுப்பு அமைச்சரவை நேற்றுக் கூடியதோடு அதற்கு முன்னர் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலிய போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக் குழுவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

காசாவில் ஆட்சி புரியும் இஸ்லாமிய போராட்டக் குழுவான ஹமாஸ் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், அதன் தலைவர் இஸ்மைல் ஹனியே, கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்களுடன் காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கான யோசனை பற்றி பேசியதாகவும் துருக்கி அதிகாரிகளையும் தொடர்பு கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹமாஸ் பதில் அளித்திருக்கும் புதிய போர் நிறுத்த முன்மொழிவில் அந்த அமைப்பின் முக்கிய கேரிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக லெபனானின் அல் அக்பர் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இந்த முன்மொழிவு கட்டார், எகிப்து மற்றும் துருக்கியுடன் ஒருங்கிணைந்து அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏவின் தலைவர் வில்லியம் பர்ன்ஸினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதல் இரு கட்டங்களில் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்படுவது, இஸ்ரேலியப் படைகள் (காசாவில் இருந்து) பின்வாங்குவது மற்றும் பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவது உள்ளடக்கப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டத்தில் போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கும் காசாவின் மீள் கட்டுமானம் மற்றும் கொல்லப்பட்ட பணயக்கைதிகளை திருப்பி அளித்தல் ஆகிய விடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை காசாவில் ஹமாஸ் ஆட்சியில் இருக்கின்ற போதும்கூட போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேலிய முன்னணி ஜெனரல்கள் விரும்புவதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் இராணுவத்திற்கு இடையில் ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலையை காட்டுவதாக உள்ளது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்தம் ஒன்றே இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு சிறந்த வழியாக இருப்பதாக இஸ்ரேலிய தளபதிகள் நம்புவதோடு இஸ்ரேலிய படையினர் மிதமிஞ்சிய சுமையை எதிர்கொள்வதோடு, வெடிபொருட்கள் தீர்ந்து வரும் நிலையில் லெபனானின் ஹிஸ்புல்லாவுடன் பரந்த அளவில் போர் ஒன்று வெடித்தால் படையினரை ஒருங்கிணைக்க வேண்டி இருக்கும் என்றும் அவர்கள் நம்புவதாக தற்போதை மற்றும் முன்னாள் ஆறு பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி அந்த செய்தி வெளியாகியுள்ளது.

தெற்கு லெபனானில் கடந்த புதன்கிழமை இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முன்னணி தளபதி ஒருவரான முஹமது நாசர் கொல்லப்பட்டதை அடுத்து இஸ்ரேல் மீது அந்த அமைப்பு சரமாரி ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியது. இது போர் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

இந்தப் புதிய போர் நிறுத்த முயற்சி குறித்து தற்போது இடம்பெயர்ந்து தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் தங்கி இருக்கும் இரு குழந்தைகளின் தந்தையான யூசப், ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு கூறியதாவது, 'இது போரை முடிவுக்குக் கொண்டுவரும் என்று நாம் நம்புகிறோம். நாம் களைப்படைந்திருக்கிறோம் தொடர்ந்தும் பின்னடைவுகள் மற்றும் ஏமாற்றங்களை எம்மால் தாங்க முடியாது' என்றார்.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரின் கிழக்கு பகுதியில் இருந்த மக்களை வெளியேற இஸ்ரேல் கடந்த திங்களன்று உத்தரவிட்ட நிலையில் நேற்று (4) அங்கு செல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் அந்தப் பகுதிகளுக்கு டாங்கிகள் முன்னேறி வரவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நகர் மற்றும் இஸ்ரேல் தீவிர படை நடவடிக்கையை முன்னெடுத்திருக்கும் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் இருந்து நேற்றும் பல பலஸ்தீனர்கள் அடைக்கலம் தேடி வருகின்றனர். கடந்த ஒக்டோபரில் வடக்கு காசாவில் இருந்து 1.1 மில்லியன் மக்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னர் இது மிகப்பெரிய வெளியேற்றமாக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கூடாரங்களை பெற முடியாத நிலையில் பல குடும்பங்களும் வீதிகளில் உறங்கி வருவதாக கான் யூனிஸ் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு காசாவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் டாங்கிகள் பல பகுதிகளிலும் உக்கிர தாக்குதல்களை நடத்தி வருவதோடு சிறுவர்கள் உட்பட பலரும் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய காசா நகரில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகில் பனாத் குடும்பத்திற்குச் சொந்தமான அடுக்குமாடி கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சியில் ஐந்து குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று காசா நகரின் கிழக்கு பகுதியில் உள்ள அல் கபி குடும்பத்திற்குச் சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற தாக்குதலை அடுத்து இடிபாடுகளில் இருந்து நான்கு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

காசாவில் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 38 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

# பிரிட்டன் பொதுத் தேர்தலில் மக்கள் வாக்களிப்பு நிறைவு




பிரிட்டனில் நேற்று (4) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மில்லியன் கணக்கானோர் தமது வாக்குகளை அளித்த நிலையில் இன்று தேர்தல் முடிவுகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் ரிஷி சுனக் திடீர் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்த நிலையிலேயே இந்தத் தேர்தல் நடைபெற்றது. பிரிட்டன் நேரப்படி காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இரவு 10 மணிக்கு நிறைவடைந்தது. வாக்காளர்கள் 650 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவுள்ளனர். அதிக இடங்களைப் பெறும் கட்சி ஆட்சி அமைக்கும். அந்தக் கட்சியின் தலைவர் பிரிட்டன் பிரதமராகப் பொறுப்பேற்பார்.

தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி தேர்தலில் வெற்றிபெற வாய்ப்புக் குறைவு எனப் பரவலாகக் கருதப்படுகிறது. கடந்த 14 ஆண்டாக அக்கட்சியின் 5 பிரதமர்கள் ஆட்சி நடத்தியுள்ளனர்.

கேயர் ஸ்டாமர் தலைமையிலான தொழிற்கட்சி இம்முறை தேர்தலில் வெற்றிபெறும் என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

# ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதில் பைடன் உறுதி



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஜோ பைடனே போட்டியிடுவார் என்று வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற விவாதத்தின்போது 81 வயதான பைடன் தடுமாற்றம் அடைந்த நிலையில் அவர் இரண்டாவது தவணைக்குப் போட்டியிடுவதற்கான உடல் மற்றும் உள தகைமை குறித்த கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி தேர்தலிலிருந்து பைடன் விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

கடந்த சில நாட்கள் சவால்மிக்கதாய் இருந்தன என்றார் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கேரைன் ஜீன் பியர்.

துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், ஜனநாயகக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட முக்கியமானவர்களை பைடன் சந்தித்துப் பேசினார். பைடன் மீண்டும் ஜனாதிபதியாக எடுக்கும் முயற்சிகள் அபாயத்தில் உள்ளன என்று நியூயோர்க் டைம்ஸ் அறிக்கை குறிப்பிட்டிருந்தது.

அதை மறுத்த வெள்ளை மாளிகைப் பேச்சாளர் அது முற்றிலும் தவறு என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.